


# வாழும் வழி

பேராசிரியர்: சுந்தர சண்முகனார்

பிரபாத்
புக் ஹவுஸ்

# வாழும் வழி

புலவர் சுந்தர சண்முகனார்

பிரபாத்-புக்-ஹவுஸ்
7, பிருந்தாவனம் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.

# நூல் விவரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| நூல் | : | வாழும் வழி |
| ஆசிரியர் | : | புலவர் சுந்தர சண்முகனார் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | கட்டுரை |
| முதற்பதிப்பு | : | டிசம்பர் 2003 |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரௌன் |
| தாளின் தன்மை | : | 10.5 கி.கி. வெள்ளைத் தாள் |
| எழுத்து | : | 12 புள்ளி |
| பக்கம் | : | 136 |
| உரிமை | : | S.பிரபாகரன் |
| வெளியிட்டோர் | : | பிரபாத்-புக்-ஹவுஸ்<br>7, பிருந்தாவனம் தெரு,<br>மேற்கு மாம்பலம், சென்னை - 33.<br>☎ 2471 1077 |
| விலை | : | ரூ 38.00 |
| ஒளியச்சு | : | ஸ்டார்ஸ் இன்போஸிஸ்,<br>சென்னை - 78. ☎ 2489 6658 |
| அச்சிட்டோர் | : | மணி ஆப்செட், சென்னை-5. |

# அணிந்துரை

ரா.தேசிகப் பிள்ளையவர்கள், B.A., B.L.,
தமிழ்-பிரெஞ்சு ஆராய்ச்சித்துறைத் தலைவர்
பிரெஞ்சு கல்வி - கலைக் கழகம் (பிரான்சு), புதுச்சேரி.

திருவாளர் சுந்தர சண்முகனார் ஒரு புலவர் - வண் புலவர். புலவர்க்குரிய இலக்கணங்கள் அனைத்தும் கொண்டு திகழும் இவ் அறிஞர் 'வாழும் வழி' என்னும் நூலினை யாத்துத் தமிழ் மக்களுக்கு இதுபோது வழங்குகின்றார்.

உள்ளக் கிளர்ச்சிகளை நன்கறிந்து, உணர்ச்சிகளைச் செழுமையாக்கி, அவற்றைப் பிறர்க்கு எடுத்துக் கூறி, அவர்தம் மனத்தை ஈர்க்கச் செய்பவர்தாம் புலவர்- வாழ்வறிந்த புலவர். வாழும் வழி கூறும் இந் நூலின் வாயிலாக, புலவர் பல இடங்களில் படிப்பவரின் சிந்தனையைத் தூண்டிவிடுகிறார்; சிந்தனையால் பொருளுண்மை தோன்றச் செய்கிறார். ஒன்றைக் காணுந் திறனும், அதனை ஆராயும் ஆற்றலும், பின்னர் அதனைச் சரியாக உணர்ந்துகொள்ளும் உரனும், இவ்வாசிரியரின் ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படிப்பவர்க்கு உண்டாகக் கூடும்.

மாந்தர் படித்து உணர்வு பெறத்தக்க முறையில் புலவர் சுந்தர சண்முகனாரின் வாழும் வழி அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. நூல் நான்கு

இயல்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இயலுக்கேற்ற முறையில் கட்டுரைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

கருத்துக்கள் மனத்தில் நன்கு பதியும்வண்ணம், தெளிந்த எளிய முறையில், சுவைபெற எழுத்துநடை செல்வது பெரிதும் பாராட்டற்குரியது. பல திறத்தாரும் படித்து இன்புறத்தக்க இந் நூலை, சிறப்பாக மாணவர் உலகம் போற்றிப் படித்துப் பயன்பெற வேண்டும் என்பது எமது அவா.

# முன்னுரை

வாழும் வழி என் கட்டுரைகளின் தொகுப்பு நூலாகும். வாழ்வியல், இலக்கியவியல், மொழியியல், விஞ்ஞானவியல் என்னும் நான்கு பிரிவாக நூலை வகுத்துக்கொண்டு கட்டுரைகளை அமைத்துள்ளேன். அவற்றுள் முதல் பிரிவாகிய வாழ்வியலைச் சேர்ந்த கட்டுரைகளுள் முதல் கட்டுரையாகிய 'மக்களாய்ப் பிறந்தோர் வாழும் வழி' என்னும் தலைப்பே, இந்நூலுக்குப் பெயர் கொடுப்பதில் எனக்குத் துணைபுரிந்துள்ளது.

சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகள் போல் இல்லாமல், எதையும் சொந்த ஆராய்ச்சி அறிவுக்கண் கொண்டு துருவி நோக்கி உண்மை காணும் பயிற்சி, வளர்ந்து வரும் - வாழத் துடிக்கும் இளைஞர் உலகிற்கு மிகவும் இன்றியமையாதது என்பது என் பணிவான கருத்து. அத்தகு பயிற்சி பெறுவதில், படிப்பவர்க்கு என் ஆராய்ச்சி முடிவுகள் தூண்டுகோலாக நின்று துணைபுரியுமாயின் அதுவே எனக்கு வெற்றி.

இந் நூலுக்கு, உயர்திரு. ரா. தேசிகப் பிள்ளையவர்கள் அருள்கூர்ந்து அணிந்துரை வழங்கியுள்ளார்கள். அவர்கள் பேரறிஞர்; கல்வி-கலை-நீதித் துறைகளில் அவர்தம் தொண்டு மிகப் பெரியது. பல்கலைக் கழகங்கட்குரிய பாட நூற்கள் எழுதி வெளியிட்டிருப்பவரும் - பெரிய பெரிய தமிழ் நூற்களைப் பிரெஞ்சு மொழியில் பெயர்த்திருப்பதன் வாயிலாக உலக அறிமுகம் பெற்றிருப்பவருமாகிய அப்பெரியார்க்குச் சிறியேனது நன்றி உரியது.

**சுந்தர சண்முகன்**

# பொருளடக்கம்

## 1. வாழ்வியல்


1. மக்களாய்ப் பிறந்தோர் வாழும் வழி 7
2. விருந்தோம்பல் 14
3. தமிழ்நாட்டு வில்சன் 23
4. காலங் கடத்தாதே 32
5. புகழ்ச்சியில் வெறுப்பு 34


## 2. இலக்கியவியல்


6. தெவிட்டாத திருக்குறள் 41
7. திருக்குறளின் அமைப்புமுறை ஆராய்ச்சி 46
8. கற்றலும் நிற்றலும் 50
9. வித்தின்றி விளையும் விந்தை 56
10. திருவாசகத்தின் இயற்பெயர் ஆராய்ச்சி 64


## 3. மொழியியல்


11. இலக்கணம் இன்றியமையாததா? 78
12. புதுவைத் தமிழ் 84
13. குடிசை 96
14. தமிழ்ச்சொல் மலர் 101


## 4. விஞ்ஞானவியல்


15. விஞ்ஞான வித்தின் விரிவு 109
16. அத்தி பூத்தாற்போல! 117
17. ஆழ உழு! 131

# 1. வாழ்வியல்

## 1. மக்களாய் பிறந்தோர் வாழும் வழி

*மக்களாய்ப் பிறந்தோர் வாழும் வழி என்ன?*

"ஒரு நாள் இன்ப வாழ்வு வேண்டுமானால் முடி திருத்தும் கடைக்குச் செல்; ஒரு மாத இன்ப வாழ்வு வேண்டுமானால் ஒரு குதிரை வாங்கிக்கொள்; ஓராண்டு இன்ப வாழ்வு வேண்டுமானால் ஒரு புது வீடு கட்டிக்கொள்; வாணாள் முழுவதும் இன்ப வாழ்வு வேண்டுமானால் நல்லவனாய் நட." என்பது ஓர் இத்தாலியப் பழமொழியாம். இந்தக் கருத்து நம் நாட்டுச் சூழ்நிலைக்கு எந்த அளவுக்குப் பொருந்துமோ?

முடி திருத்தும் கடைக்குச் சென்று முகத்தை வழித்துக்கொண்டு, ஆகா! என்ன அழகு நம் முகத்தில்! எவ்வளவு வழவழப்பு! பளிங்குபோல் பள பளப்பு! என்று வியந்துகொண்டே நிலைக்கண்ணாடியின் முன் நின்று நீட்டி நெளித்து அழகு பார்த்து மகிழ்ந்து பெருமை கொள்கின்றனர் மக்கள். மறுநாள் காலையில் தூங்கி எழுந்து பார்த்தால்; அதே முகத்தில் சொர சொரப்பு. எழுந்ததும் பார்க்க வேண்டுமே அந்த முகத்தின் அழகை!

ஒரு குதிரை வாங்கி ஏறி ஊர்ந்து செல்லின், (அல்லது ஒரு காரே வாங்கினும்,) ஒரு மாதம் சுற்றியடித்துப் பார்த்தால் அலுத்துப் போகிறது. பிறகு

நாளடைவில் பழைய ஆர்வத்திற்கிடனின்றி எளிமை-யாய் விடுகிறது.

ஒரு புது வீடு கட்டினும், ஓராண்டு வரையும் வருவார் போவார்க்கெல்லாம் அதன் ஒவ்வொரு பகுதியையும் காட்டிக் காட்டி விளக்கி விளக்கிப் பெருமை கொண்ட பின்னர், சுவர், கதவு, தூண் முதலியவற்றின் வண்ண நிறம் மங்க மங்க, உடையவரது உள்ளத்தெழுச்சியும் மங்குகிறது.

ஆனால், மக்கள் பெயரளவில் - வடிவ அமைப்பில் மட்டும் மக்களாய் இன்றி, உண்மையில் மக்கட் பண்புடையராய் - நல்லவராய் நடந்து கொண்டால் அவர் தம் வாழ்நாள் முற்றிலும் அவர்க்கு இன்பமே - பேரின்பமே!

அஃதாவது, - ஒருவன் புத்தழகும் புதுப் பொலிவும் உடையவனாய், புத்தெழுச்சி கொண்ட-வனாய், புது வண்டி பெற்றவனாய், புதுமனை புகுந்தவனாய்க் காணப்படினும், அவனிடம் நீதியோ நேர்மையோ ஒழுக்கமோ பண்பாடோ மானமோ மதிப்போ இல்லையெனின் அவன் நிலை யாது? அவன் வாழ்வு எத்தகையது? அவனை முன்னே விட்டுப் பின்னே எள்ளி நகையாடுமன்றோ உலகம்! 'இதோ போகிறான் பாருங்கள்! இவன் செய்த செயல் தெரியுமா?'' என்று ஏசுமே மக்கள் கூட்டம்!

இதனாலேயே, 'வாணாள் முழுவதும் இன்ப வாழ்வு வேண்டுமானால் நல்லவனாய் நட' என்று கூறிற்றுப் போலும் அந்தப் பழமொழி.

வாழ்வு என்றால் - வாழ்தல் என்றால் என்ன? என்று பார்ப்போமா? எந்த அகராதியைப் பார்த்தால் இதற்குப் பொருள் காணலாம்! வேண்டியதில்லை - பணம் போட்டு வாங்கிய எந்த அகராதியும் நமக்கு வேண்டியதில்லை. மக்கள் அகராதியில் - அஃதாவது - மக்களின் பேச்சு வழக்கில் இஃது எந்தப் பொருளில் ஆளப்படுகிறது என்று நோக்குவோமே!

''அவர் எண்பது ஆண்டுகள் வாழ்ந்தார்'', - ''என் மகள் மதுரையில் வாழ்கிறாள்'', - ''அது வாழ்ந்த குடும்பம்'', - ''அவருக்கு வாழ்வுவந்துவிட்டது, இனிமேல் நம்மைத் திரும்பிப் பார்ப்பாரா'' - ''அவர்கள் வாழாதும் வாழ்ந்து வாழைக்குலை சாய்ந்தார்கள்.''-

முதலிய வாக்கியத் தொடர்களை நோக்கின், வாழ்தல் என்பதன் பொருள் ஓரளவு புலனாகக் கூடும். 'என்பது ஆண்டுகள் வாழ்ந்தார்' என்பதில், வாழ்தல் என்றால் உயிர் வாழ்தல் என்றுதானே பொருள்? 'மகள் மதுரையில் வாழ்கிறாள்' என்பதில், மகள் கணவனுடன் ஒன்றிக் குடியும் குடித்தனமுமாய் இருக்கிறாள் என்பது கருத்தன்றோ? 'அது வாழ்ந்த குடும்பம்' என்பதில், சீரும் சிறப்புமாய் விளங்கிய குடும்பம் என்பது பொருள் அல்லவா? 'அவருக்கு வாழ்வு வந்துவிட்டது' என்பதில், பட்டம் பதவி பணம் முதலியன பற்றிச் செருக்கு வந்து விட்டது என்பது கருத்து. 'வாழாதும் வாழ்ந்து வாழைக் குலை சாய்ந்தார்கள்' என்பதில், வாழை வளர்ந்து வாழ்ந்து பல கீழ்க்கன்றுகளை ஈன்று, இறுதியில் குலை தள்ளிச் சாய்வது போல், மக்கள் பிறந்து வளர்ந்து குழந்தைகளைப் பெற்றுப் பேரப் பிள்ளைகளையும்

கொண்டு குடும்பம் செழிக்க முழு நிறைவோடு முடிதலைக்·குறிக்கும்.

மேற் குறிப்பிட்டுள்ள வாழ்வுகள் அனைத்தும் ஆறறிவு பெற்ற உயர்திணைப் பொருளாகிய மக்களுக்கு மட்டுந்தானா உண்டு? அஃறிணைப் பொருள்களாகிய பறவை விலங்குகட்கும் உண்டன்றோ? அவையும் உழைக்கின்றன, உண்ணுகின்றன, உறங்குகின்றன, குஞ்சு குட்டிகளை ஈனுகின்றன, நெடுநாள் உயிர் வாழவுஞ் செய்கின்றன. எனவே, அவற்றின் வாழ்வும் மக்களின் வாழ்வும் ஒன்றுதானா? இடையே வேற்றுமை யாதாக இருக்கலாம்? மக்கள்தம் வாழ்வு எத்தகையதாய் இருக்க வேண்டும்?

ஆம்! மக்களாய்ப் பிறந்தோர் வாழும் வழி என்ன? என்னும் வினாவிற்கு நாம் விடை காணவேண்டும். இவ்வளவு நாள் நாம் எது எதையோ வாழ்வு என்று எண்ணிக்கொண்டு, உலக வழக்கில் பேசியும் பெற்றும் வருகிறோமே, அது அது மட்டும் மக்களுக்கு வாழ்வாகிவிட முடியாது; பறவை விலங்குகளுங்கூட அத்தகைய வாழ்வியலை ஏறத்தாழப் பெற்றுள்ளன; ஆகவே மக்களாய்ப் பிறந்தோர் வாழவேண்டிய வாழ்வு வேறு ஏதோ உளது. அதனை நாம் கண்டுபிடித்தாக வேண்டும்; கண்டுபிடித்தால் மட்டும் போதுமா? கடைப்பிடித்தும் வாழ்ந்து பார்க்க வேண்டும், வாழ்ந்தேயாக வேண்டும்; அதுதான் உண்மையான மக்கள் வாழ்வு - என்ற திட்டவட்டமான உறுதியான முடிவுக்கு இப்போது நாம் வந்துவிட்டோம் என்று கருதுகிறேன்.

அவ்வாறு மக்கள் வாழ்வுநெறிக்கு வேண்டிய வழியைக் கண்டுபிடிக்க நாம் முயலுமுன், நம் முன்னோருள் எவரேனும் ஏதேனும் கண்டுபிடித்துள்ள னரா? அப்படியிருப்பின், அந்த வழியும் நம் அறிவுக்குப் பொருந்தின் நாம் ஏன் அதனைக் கடைப்பிடித்தால் ஆகாது? அவ்வாறு கண்டுபிடித்துக் கூறிப்போந்தவர் எவராயிருக்கலாம்?

சுற்றி வளைத்துக்கொண்டு காலத்தைக் கடத்து வதேன்? வாழ்க்கைத் துணை நூலாகிய திருக்குறளை வையகத்திற்கீந்த வள்ளுவரே நமக்கு நல்ல வழிகாட்டி யாவார். அவர் வாழ்வதற்கு வழி சொல்லியுள்ளார். அஃது என்னென்று நோக்குவோம்.

''வசையொழிய வாழ்வாரே வாழ்வார்; இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.''

என்பது திருக்குறள். பழியின்றி வாழ்பவரே உண்மையில் வாழ்பவராகக் கருதப்படுவர்; புகழின்றி வாழ்பவர் உண்மையில் வாழாதவராகவே கருதப்படுவர் என்பது குறட் கருத்து.

இதிலிருந்து நாம் என்ன தெரிந்துகொள்ள வேண்டும்? ஒருவன் எவ்வளவுதான் படிப்பு - பட்டம் - பதவி - பணம் முதலியன பெற்று, மாடமாளிகை கூடகோபுரம் கட்டி வாழினும், நீதியின்றி, நேர்மை யின்றி, பலரும் வெறுத்தொதுக்கும்படிப் பழிச் செயல்கட்கு ஆளாயிருப்பானேயாயின், அவன் வாழ்வு அத்தனையும் நாடகமேடை வாழ்வாகிவிடும். மற்றொரு வன், எவ்வசதியும் அற்றவன்; ஆனால் நேர்மையாளன்;

பழியென்றால் உலகமே கிடைக்குமெனினும் விரும்பா தவன்; புகழ் எனின் உயிரும் கொடுக்கக்கூடியவன்; தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன். அத்தகையோன் கஞ்சி குடித்துக் கந்தையே உடுத்தினாலும் அவன் வாழ்வே பெருவாழ்வு பேரின்ப வாழ்வாகும் - என்னும் நற்கருத்து இக்குறள் வாயிலாய்ப் பெறப்படுகின்ற தன்றோ?

எனவே, வசை நீங்க வாழவேண்டும். இசையுடன் புகழுடன் வாழவேண்டும் என்பது போதரும்.

புகழுடன் வாழவேண்டுமெனின், எவ்வாறு வாழ்வது? எவ்வளவு பணம் எடுத்துக்கொண்டு எந்தக் கடைக்குச் சென்றால் புகழை விலைக்கு வாங்கி வரலாம்? புகழ் என்ன கடைச் சரக்கா?

ஒருவன் பெரிய படிப்புப் படித்திருப்பினும், பட்டங்களும் பல பெற்றிருப்பினும், மாபெரும் பதவிகளில் வீற்றிருப்பினும், மலைமலையாய்ச் செல்வங்களைத் திரட்டிக் குவித்திருப்பினும் பிறர்க்குப் பயன்பட மாட்டான் என்றால், அவனைப் பற்றி யாருக்கும் அக்கறையில்லை; கவலையில்லை. எவன் ஒருவன் பலர்க்கும் பலவகையிலும் பயன்படுகிறானோ, அவனைப் பற்றியே மக்களின் பேச்சு மூச்செல்லாம்! எனவே, பிறர்க்கு உதவவேண்டும். அதனால் புகழ் பெருக வாழவேண்டும். இதைத் தவிர உயிர்க்கு வேறு என்ன வேண்டியுள்ளது? இவ்வாறு உதவுபவரைப் பற்றியே மக்கள் உயர்வாகப் பேசிக்கொள்வர். இக் கருத்துக்களையே,

''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு'',

''உரைப்பார் உரைப்பவையெல்லாம் இரப்பார்க்கு ஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்''

என்னும் குறள்கள் தெளிவுறுத்துகின்றன. ஈண்டு வள்ளுவர், ஈவதால்தான் இசை உண்டாகும்; இசை பெற்று வாழ்தல்தான் வாழ்தலாகும் என்ற குறிப்பை ''ஈதல் இசைபட'' என்னும் தொடரில் பொதிந்து வைத்திருப்பதை ஊன்றி நோக்குக.

பிறர்க்கு உதவுவது என்றால், சோம்பேறித் தடியர்கட்கெல்லாம் வாரி வாரி வழங்குவதன்று. மக்கள் ஒருவரோடு ஒருவர் அன்பு கொள்ளவேண்டும். ஒருவரையொருவர் மதிக்கவேண்டும். தாம் வந்த வழியினையும் தம் கீழ் உள்ளவர்களையும் திரும்பிப் பார்க்க வேண்டும். தாம் பெரிய மனிதர் என்று செருக்குக் கொண்டு, சமுதாயத்திலிருந்து ஒதுங்கித் தம்மைத் தாமே தனியிடத்தில் சிறைவைத்துக் கொள்ளலாகாது. எல்லோருடனும் கலந்து பழகவேண்டும். எவர் வீட்டிற்கும் போக வேண்டும். பிறர்க்கும் நமக்கும் நடுவே இமயமலை போல் குறுக்கிட்டுத் தடுத்து நிற்கும் வீண் ஆரவார ஆடம்பர முறைகளையெல்லாம் அடியோடு ஆணிவேருடன் களைந்தெறிய வேண்டும். தம்மாலான உதவிகள் அனைத்தையும் பிறர்க்கு அளிக்கத் தம்மை ஆயத்தம் செய்துகொள்ள வேண்டும். அத்தகையோர் வாழ்வே வாழ்வாகும் - நிலையான நீடித்த வாழ்வாகும்.

*வாழ்வு என்றால் சாகும்வரையும் வாழும் இன்ப வாழ்வு என்று பொருள் கொள்ளும் குறுகிய நோக்கம் எனக்கின்று. தம் வாழ்நாளிலே வாழவேண்டிய முறைப் படி வாழ்ந்தவர்கள் தாம் செத்த பின்பும் வாழ்வார்கள். அதுதான் உண்மையான வாழ்வு! தன் செல்வ வளத்தை வாரி வழங்கிய பாரி வள்ளல் இன்றும் மக்களிடையே வாழ்கிறான்; புகழப் பெறுகிறான். அறிவு வளத்தை வாரி வழங்கிய வள்ளுவர் போன்றோர் இன்றும் வாழ்கின்றனர்; இனியும் என்றும் வாழ்வர். இதுதான் நீடித்த நிலையான வாழ்வு. இந்தப் புகழ் வாழ்விற்கு என்றும் அழிவேயில்லை. இதனை வள்ளுவர் பின்வரும் குறளில் குறிப்பிட்டுள்ளார்:*

''ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பது ஒன்றில்''

*மக்களாய்ப் பிறந்தோர் வாழும் வழி இதுதானே!*

★

## 2. விருந்தோம்பல்

*விருந்தோம்புதல் மனித உள்ளத்தின் உயர்ந்த பண்பாகும். பிள்ளையில்லா வாழ்வினும், விருந்தினரைப் பெறாத விருந்தோம்பாத குடும்ப வாழ்வு மிகவும் வெறிச்சோடிக் காணப்படும். அமிழ்தமானாலும், விருந்தினை வெளியே விட்டுத் தாம் மட்டும் உண்பது மனிதத் தன்மைக்கு அழகேயன்று. 'மருந்தேயாயினும்*

விருந்தோடு உண்' என்பதை மறக்க முடியுமா? மறுக்க முடியுமா? காக்கையும் அன்றோ இனத்தை அழைத்து உண்ணுகிறது. மேலும், வீடென ஒன்று கொண்டு, அதில் கணவன் மனைவியென இருவர் கூடி இல்வாழ்க்கை நடாத்துவது, உலகிற்கு உதவி உழைப்பதற்குத்தானே! ஒருவருக்கொருவர் உதவி ஒப்புரவு செய்துகொண்டாலே எவரும் எங்கும் வாழ முடியும். வாழ்க்கையின் அடிப்படை இதுவாகவே இருக்கவேண்டும். இவற்றை யெல்லாம்,

''விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.''

''இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு''

முதலிய திருக்குறள்களால் திருவள்ளுவர் விளக்கி யுள்ளார். மேலுமவர், எவ்வளவு பெருஞ்செல்வரா யிருப்பினும், விருந்தோம்பாதவர் ஏழைகளாகவே கருதப்பட்டு இழிக்கப்படுவார்கள் என்னும் கருத்தில்,

''உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.''

என்னும் குறளைக் கூற மறந்தாரில்லை. நாமும் அவர் மொழிகளை மறக்கலாமா? இவ்விருந்தோம்பலும் பெண்ணில்லா வீட்டில் நடைபெற வழியில்லை. இத் தொண்டில் பெரும்பங்கு பெண்பாலார்க்கே உரியதாம். அது அவர்களின் தனிக் கலையுங் கூட!

## கண்ணகியின் கற்புச் செயல்

கற்புக்கு அணிகலமாகிய கண்ணகியை, வாழ்க்கையில் இன்பமின்றித் தவிக்கவிட்டான் கணவன் கோவலன். மாதவியை அடுத்திருந்தான். பின் பிழையுணர்ந்து வீடு திரும்பினான். மனைவியை மதுரைக்கு அழைத்துச் சென்றான். மாதரி வீட்டில் தங்கினான். ஆங்கு உணவுண்ட பின் கண்ணகியை அருகில் அமரச் செய்தான். தன் குற்றங்களையெல்லாம் ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்பவன் போல் புலம்பத் தொடங்கினான்: ''இரவில் கரடுமுரடான வழிகளில் கால் நோவ உடன் வந்த கண்ணகியே! உன் அன்பை என்னென்பேன்! உன் உள்ளம் அறியாமல் வாணாளை வீணாள் ஆக்கினேன். உனக்கு இன்பமே அளித்தேனில்லை. துன்பக் கடலிலேயே தோயச் செய்தேன். அவ்வமயம் உன் மனநிலை எவ்விதம் இருந்ததோ! ஆ கொடியேன், என் செய்தேன்!'' என்றெல்லாம் பல கூறி அரற்றினான்; பிதற்றினான்; ஏங்கினான்.

கேட்ட கண்ணகி 'உம்மைப் பிரிந்திருந்த காலத்தில் எனக்கு நல்ல உணவில்லை; உயர்ந்த ஆடை அணிகலன்கள் கிடைக்கவில்லை; உம்மை மணந்து கொண்டதால் துன்பமேயன்றி இன்பம் ஏது என்றெல்லாம் மொழிந்தாள் என்று எண்ணுகிறீர்களா? இல்லையில்லை! ''என் அருமைத் தலைவரே! இராவழி நடந்ததால் என்கொன்றும் அலுப்புத் தோன்றவில்லை காரணம் நும்முடன் வந்தமையே! நும்மைப் பிரிந்து தனித்திருந்த காலமே - அதிலும் தனிமைத் துன்பத்தால்

இன்பமின்றிக் கழிந்தது. அப்போழ்து பெருங் கவலையொன்று என்னை மிகவும் தாக்கியது. நம் வீட்டிற்கு வந்த அறவோர்கட்கு ஒன்றும் அளித்தே னில்லை; செந்தண்மை பூண்ட அந்தணர்களை மகிழ்வித்தேனில்லை; துறவிகளைக் காத்தேனில்லை;- விருந்தினர்களை எதிர்கொண்டு வரவேற்றேனில்லை. பெண்கட்குக் கிடைக்கக்கூடிய இவ் அரும்பெரும் வாய்ப்புக்களையெல்லாம் இழந்ததே எனக்குத் துன்பமாகத் தோன்றியது'' என்று அன்பு கனிய இன்மொழி புகன்றாள். என்னே நம் கண்ணகியின் கலங்காத கற்பு நோக்கம்! இதனை,

> ''அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
> துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
> விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை''

என இளங்கோவடிகள் இனிமையாகச் சிலப்பதிகாரம் என்னும் நூலில் பொறித்துக் காட்டியுள்ளார்.

## சீதையின் சீரிய நோக்கம்

இராமனும் சீதையும் நாட்டை விட்டனர், காட்டையடைந்தனர். அங்கே சீதை இராவணனால் சிறையெடுக்கப்பட்டாள். இலங்கையை அடைந்தாள். இராமன் காட்டில் தனித்து வருந்தினான். இலங்கையில் இருக்கும் சீதையின் கவலைக்கோ ஓர் எல்லையில்லை. அவள் கவலை சென்றது எவ்விதத்தில்? ''காட்டில் நாம் இருந்த குடிசைக்குப் பல துறவிகள் விருந்தாக வருவார்களே, அவர்களின் நிலை என்ன? அவர்கட்குச் சமைத்துப் பரிமாறுபவர் யாவர்? அங்கிருந்து அவர்க்குத்

தொண்டு செய்வதற்கும் முடியாமற் போனதே. அவ் விருந்தினரைக் கண்டதும் உணவு முதலியவற்றால் மகிழ்வித்தற்கின்றி நம் கணவர் மனம் என்ன பாடுபடுகின்றதோ அங்கு'' என்றெல்லாம் பல எண்ணிக் கவன்றாள். இதனை,

''அருந்து மெல்லடகு யாரிடம் அருந்துமோ என்றழுங்கும்
விருந்து கண்டபோது என்னுறு மோஎன விம்மும்
மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென மயங்கும்
இருந்த மாநிலம் செல்லரித் திடவும்ஆண் டெழாதாள்''

என்னும் கம்பரின் உருக்கமான பாடலால் அறியலாம். தமிழ்ப் பண்பாட்டில் ஊறி வளர்ந்து வாழ்ந்த கம்பர், சீதையின் வாயிலாக விருந்தோம்பியதை வற்புறுத்தியதில் வியப்பொன்றும் இல்லையன்றோ?

## பெண்டிர் திறமை

கண்ணகியும் சீதையும் விருந்தோம்பாது போயினும் தம்மால் முடியாது போனமைக்கு வருந்தியாவது இருப்பது மிகவும் போற்றிப் புகழ்தற்குரியதாகும். சிறந்த பெண்களின் இலக்கணம் இதுவே. தாங்கள் எவ்வளவு எளிய நிலையில் இருப்பினும், தம்மை நாடி வந்தவர்களை உதறித் தள்ளாமல் மகிழ்விக்கும் மனப்பான்மையும் திறமையும் பெண்டிர்க்கு இருத்தல் இன்றியமையாததாகும்.

வீட்டில் ஒன்றும் இல்லை. உணவு தண்ணீரே! அதுவும் ஒரு நாளைக்கு ஒரு குடத்திற்கு மேல் மறு குடத்திற்கு வழியில்லை; இந் நெருக்கடியான நேரத்தில்

சுற்றத்தினர் வந்து சூழ்ந்துவிட்டனர். சுற்றத்தார் என்றால் ஒருவரல்லார்; இருவரல்லார்; கடல் நீரும் போதா அளவில் பலர் கூடிவிட்டனர். அஞ்ஞான்று, பெண் தன் முழுத் திறமையையும் பயன்படுத்த வேண்டும். இது பற்றியன்றோ,

''குடநீர்அட் டுண்ணும் இடுக்கட் பொழுதும்
கடல்நீர் அறஉண்ணும் கேளிர் வரினும்
கடனீர்மை கையாறாக் கொள்ளும் மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்''

என நாலடியாரும் முழங்குகின்றது.

## நாட்டிற்கே பெருமை

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன், இளங் கண்டீரக்கோ, இளவிச்சிக்கோ என்னும் இரண்டு மன்னர்கள் ஓரிடத்தில் வீற்றிருந்தனர். பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் அங்கு சென்றார். அவர், இளங்கண்டீரக்கோவை மட்டுமே வணங்கிப் பாராட்டி-னார். உடனிருந்த இளவிச்சிக்கோ, ''ஏன் என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை?'' என்று புலவரைக் கேட்டான். அவனுக்கு அவர் கூறிய பதில் வருமாறு:-

''இளவிச்சிக்கோவே! பண்டைக் காலந்தொட்டே கண்டீரக் கோவினுடைய நாட்டு மக்கள் மிகவும் நல்லவர்கள். பாடும் புலவர் வந்துவிட்டால் பாராட்டிப் பரிசு தந்தனுப்புவார்க்ள. ஆண்கள் மட்டும் அல்லர் - பெண்களும் அத்தகையோரே! தன் கணவர் வெளி யூருக்குச் சென்றிருக்கும்போது புலவர்கள் வந்துவிடின், கணவர் வரும்வரையும், வந்தவரைக் காக்க வைத்திருக்க

மாட்டார்கள். பயனின்றியும் அனுப்பமாட்டார்கள். உணவு படைத்து உளங் குளிரச் செய்வார்கள். அது மட்டுமா? தம் தகுதிக்கேற்பப் பெண் யானைகளை அணிகலன்களால் அலங்கரித்து அவற்றைப் பரிசாக அளிப்பார்கள். அத்தகைய உயர்ந்த மனப்பான்மை நிறைந்த உறவினர்களையும், குடிமக்களையும் உடையவர் கண்டீரக்கோ, ஆதலின் அவரைப் பாராட்டினேன். நீயோ, பெண் கொலை புரிந்த நன்னன் மரபினன். பாடும் புலவர் நின்னைக் காண வரின், நின் கோட்டை அடைத்த கதவோடு அவர்கட்குக் காட்சியளிக்கும். ஒருவரும் உள்ளே புகவே முடியாதென்றால் பயன்பெறுவது எப்படி? அதனாலேயே என் போன்றோர் உன் போன்றோரை எப்போதுமே பாராட்டுவதில்லை'' என்று கூறி முடித்தார் புலவர். இவ் வரலாற்றை, அப்புலவர் பாடிய

''பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப
விண்டோய் சிமைய விறல்வரைக் கவாஅன்
கிழவன் சேட்புலம் படரின் இழையணிந்து
புன்தலை மடப்பிடி பரிசி லாகப்
பெண்டிரும் தம்பதம் கொடுக்கும் வண்புகழ்க்
கண்டீரக் கோன் ஆகலின் நன்றும்
முயங்க லான்றி கின் யானே பொலந்தேர்
நன்னன் மருகன் அன்றியும் நீயும்
முயங்கற் கொத்தனை மன்னே வயங்கு மொழிப்
பாடுநர்க்கு அடைத்த கதவின் ஆடுமழை
அணங்குசால் அடுக்கம் பொழியுநும்
மணங்கமழ் மால்வரை வரைந்தனர் எமரே''

என்னும் புறநானூற்றுப் (151) பாடல் புலனாக்கும். கணவர் இல்லா நேரத்தும் பெண்கள் விருந்தோம்பிய தால் உண்டான பெருமை அவர் குடும்பத்திற்கு மட்டுமா நாட்டிற்கும் உரியதாயிற்றன்றோ? அதனால் அன்றோ, இரண்டாயிரம் ஆண்டுகளின் பின்னரும், நாம் அவர்களைப் பற்றி நினைக்க முடிகிறது. விருந்தோம்பலின் சிறப்புத்தான் என்னே!

## ஔவையார் ஏமாற்றம்

விருந்தோம்புதலின் பெருமையறியாத பேதையர் சிலர், விருந்தினரைக் கண்டதும் ஓடிப் பதுங்குகின்றனர். சில வீடுகளில் கணவன் விருந்தினரை அழைத்துக் கொண்டு உள்ளே நுழைய முடியாது. தவறி நுழைந்தாலோ புடவை கட்டிய புலி பாயும். பாவை யெனப் பெயர்பெற்ற பாம்பு சீறும். இந்நிலையில், விருந்தினரைக் கண்டால் தலைமறைவாய்ப் போகாமல் வேறென்ன செய்வான் கணவன். விருந்தினரை அழைத்து வந்தால், மனைவி கணவன் தலையில் சட்டியையிட்டு உடைக்க, அது வளையம்போல் கழுத்தை அலங்கரித்த கதையை, ''வீணாய் உடைந்த சட்டி வேணதுண்டு என் தலையில், இந்தப் பூணாரம் பூண்ட புதுமைதனைக் கண்டதில்லை'' என்னும் அடிகள் அறிவிக்கப்பட வில்லையா?

ஒரு சமயம், ஒரு வீட்டின் வெளித் திண்ணையில் விருந்தாக அமர்ந்திருந்தார் ஔவையார். அவரை எப்படியாவது உண்ணச் செய்யவேண்டும் என்பது அவ்வீட்டு ஆடவனின் ஆவல். அவன் மனைவியோ கொடுமைக்கு இருப்பிடம். விருந்து வந்துள்ளதென அவளிடம் விளம்பவும் அச்சம். ஆதலின், அவளைத்

தன்வயப் படுத்துவதற்காகச் சில தொண்டுகள் செய்ய முற்பட்டான். அவள் அருகில் சென்றான். தலையிலுள்ள ஈரையும் பேனையும் எடுத்தான். கூந்தலைக் கோதி முடித்தான். தண்ணீரால் முகத்தைத் துடைத்துத் தூய்மை செய்தான். பொட்டிட்டான். மற்றும் பணிவிடைகள் பல புரிந்தான். இனி நம் வேண்டுகோளை மனைவி ஏற்கலாமென அரை குறையாய் நம்பினான். கட்டிக் கொண்டான் கையை. மெதுவாக, விருந்து வந்துள்ளது என்று விண்ணப்பம் செய்தான். அவ்வளவுதான், அம்மைக்கு வந்தது சினம். எழுந்தாள்; ஆடினாள்; சரமாரியாகப் பாடினாள் சில பாடல்களை; அவன் ஓடினான்; விடவில்லை; தானும் ஓடினாள்; பழ முறத்தாலும் சாடினாள். பார்த்தார் ஔவையார். அந்த வேகம் தம் பக்கமும் திரும்பிவிடுமோ என்று அஞ்சினார். இவ்வளவு நேரம் உண்ணக் காத்திருந்து ஏமாந்துபோன அவர் வாய், உண்பதற்குப் பதிலாக,

''இருந்து முகந்திருந்தி ஈரொடு பேன்வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப - வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடிமுன் தான்''

என்று பாடத் தொடங்கிவிட்டது. இத்தகைய கொடிய நிலை குடும்பத்தில் கூடவே கூடாது. குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்ளலாமா? இன்பத்திற்கன்றோ குடும்பம்? துன்பத்தைத் தூரத்தில் ஓட்டுவதே அறிவுடைமையாகும். ஆடவர்க்கு மனமில்லாது போயினும், பெண்டிர் விரும்பினால் விருந்தோம்ப முடியும். ஆதலின் அவர்கள் அக் கலையை மறவாமை கடமையாகும்.

★

# 3. 'தமிழ்நாட்டு வில்சன்'

உலகம் ஒன்றுபட வேண்டும் என்பது அறிஞர்களின் ஆவல். இது அன்று மட்டுமன்று - இன்று மட்டுமன்று - என்றுமே இருக்கும் ஆவல்! தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், சாதியாலும் சமயத்-தாலும் பல பிரிவினராயிருப்பினும், 'தமிழர்' என்னும் பெயரால் ஒன்றுபடுகிறார்கள். பல மொழியினருக்கு நடுவிலே இவர்கள் தம்மைத் 'தமிழர்' என்னும் பெயரால்தானே தெரிவித்துக் கொள்ளவேண்டும்? இது போலவே, தமிழன், தெலுங்கன், வங்காளி, குசராத்தி முதலியோர் 'இந்தியர்' என்னும் பெயரால் ஒன்றுபடுவர் பிற நாட்டினர் நடுவிலே. இந்தியன், பர்மியன், சீனன் முதலியோர் 'ஆசியாக் கண்டத்தினர்' என்னும் பெயரால் ஒன்றுபடுவர் பிற கண்டத்தாரின் நடுவிலே. இவ் வொற்றுமை நிலையினை இங்கு நான் கட்சி பற்றியோ, மதம் பற்றியோ வகுக்காமல், அரசியல் பற்றியே வகுத்தேன். ஆசியன், ஐரோப்பியன், அமெரிக்கன் முதலிய எல்லாக் கண்டத்தாரும் ஒன்றுபட்டால் உலகம் ஒன்றுபட்டதாகப் பொருளல்லவா? இந்த ஒற்றுமையை, ஒரே மதமோ, ஆட்சியோ உலக முழுவதும் பரவின் உண்டாக்கக் கூடும். அல்லது, வேறு மண்டலமாகிய 'செவ்வாய்க் கிரகம்' போன்ற இடத்திலிருந்து நம் உலகத்திற்கு எதிர்ப்புத் தோன்றுமாயின், எல்லாக் கண்டாத்தார்களும், 'பூவுலகத்தார்' (பூமியார்) என்னும் பெயரால் ஒருவேளை ஒன்றுபடலாமோ என்னவோ!

இப்போதும் நம் உலகில் 'உலக ஒன்றுமைக் கழகம்' (சர்வதேசச் சங்கம்) இருந்து தொண்டாற்றி வருவதை அரசியல் அறிவுபெற்ற அனைவரும் அறிவார்கள். இந்த 'ஐக்கிய நாடுகளின் நிறுவனம்' தமிழில் சுருக்கமாக 'ஐ.நா.' என்று அழைக்கப்படுகிறது.

ஐ.நா.வின் நோக்கங்களுள் முக்கியமானவற்றைக் கீழே சுருக்கித் தருகிறேன்:

1. இனி உலகின் எந்த மூலையிலும் போர் என்ற பேச்சே எழக்கூடாது.

2. ஒவ்வொரு மனிதனின் உரிமையும் மதிப்பும் காப்பாற்ற வேண்டும்.

3. மனித சமுதாயம் துன்பங் காணாத இன்ப வாழ்க்கை வாழ்வதற்கு வேண்டிய வசதிகளை ஆக்கித் தரல் வேண்டும்.

4. மக்களிடையே சகிப்பும், பொறுமையும் நிலவச் செய்து நட்பை வளர்க்கச் செய்யவேண்டும்.

5. உலக ஒற்றுமைக்கும் - அமைதிக்கும் கேடு தோன்றின் உலகத்தார் அனைவரும் ஒன்றுபட்டுக் காக்க வேண்டும் - முதலியன.

இவற்றுள் மூன்றாவது நோக்கத்துள் மற்றைய நான்கும் அடங்கிவிடும் ஆதலின், அது மிகவும் இன்றியமையாதது. இந் நிறுவனத்தின் சட்ட திட்டங்களைப் பின்பற்ற ஒத்துக்கொள்ளும் எந்த நாடும் இதில் பங்கு கொண்டு தொண்டாற்றலாம். இது

'பொருளாதார அவை', 'சமூக அவை' என்னும் இரு சபைகளை அமைத்துப் பொருளாதார - சமூக திட்டங்களைக் கவனித்து வருகிறது. உலகத்தில் ஏற்படும் குற்றங்குறை சண்டை சச்சரவுகளை மேற்பார்வையிட்டுத் தீர்ப்பு வழங்க, 'அனைத்துலக நீதிமன்றம்' ஒன்றையும் இது அமைத்துள்ளது. மற்றும் கொரியப் போர், ஈரான் எண்ணெய்த் தகராறு, காங்கோ சிக்கல் முதலியவற்றில் இந்த ஐ.நா.வின் ஈடுபாடு எத்தகையதென்பதை உலகறியும்? இதில் எல்லா நாட்டினரும் பங்கு கொள்வார்களேயானால், இதுவும் நேர்மையான முறையில் நடக்குமேயானால், கூடிய விரைவில் உலகம் ஒன்றுபடும் என்பது உறுதி! ஆனால் அதுதான் ஐயம்! இதற்குத் தக்க காரணமும் கூறுவேன்:

'ஒரு கண் கெட்ட பின் சூரிய வணக்கம்,' 'திருட்டுப் போனபின் அறைக்குப் பூட்டு' - என்ற முறையில்தான் இந்த ஐ.நா.வும் தோன்றியது. இரண்டாவது உலகப் பெரும்போரில் எத்தனை உயிர்க்கொலை! எத்தனை அழிவு வேலைகள்! எத்தனை இழப்புகள்! எத்தனை தொல்லைகள்! அப்பப்பா சொல்லுந்தரமன்று! போர் முடிந்தது. சில நாடுகள் தோற்றன; சில நாடுகள் வென்றன. இருவகை நாடுகளுமே மேற்கூறிய துன்பங்களுக்குக் குறியானவைகளே. கிட்டத்தட்ட உலகத்தையே வறுமை சுவைத்துப் பார்த்தது. ஆராய்ந்து பார்த்தார்கள் உலக அறிஞர்கள் சிலர்; ஒரு முடிவுக்கு வந்தார்கள்; ஐ.நா.வைத் தொடங்கினார்கள்; திட்டங்களைத் தீட்டினார்கள். இதைத்தான் யான் முதலில் விவரித்தேன்.

எல்லா நாட்டினரும் இதில் சேரமாட்டார்கள்; சேர்ந்தாலும் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு ஒத்துழைக்க மாட்டார்கள் என்று ஏன் ஐயப்படுகிறேன் என்றால், இப்போது உலகம் தெனாலிராமன் வளர்த்த பூனையாகி விட்டது. அவன் சூடான பாலை பூனைக்கு வைத்தானாம். குடித்ததும் பூனையின் வாய் வெந்து போயிற்றாம். அதிலிருந்து ஆறிய பாலை வைத்தாலும் அது குடிப்பதில்லையாம். ஆலமரத்தில் தொங்கிய பாம்பை விழுது என்று எண்ணிப் பிடித்துப் பயந்துபோன குரங்கு, மறுபடி உண்மையான விழுதை - ஏன் தன் வாலையே பார்த்துப் பாம்போ என அஞ்சுவது இயற்கைதானே! இவ் வெடுத்துக்காட்டுகளின் பொருத்தத்தைச் சிறிது ஆராய்வோம்.

இந்த ஐ.நா. இரண்டாவது உலகப் போரின் பின்புதானா ஏற்பட்டது? இல்லையில்லை. முதல் உலகப் போர் முடிந்ததுமே ஏற்பட்டுவிட்டது. அப்படியாயின், இரண்டாவது உலகப்போர் நடந்து கொண்டிருந்தபோது இது என்ன செய்தது? அப்போர் வராமல் ஏன் நிறுத்தவில்லை? வந்தவுடனேதான் ஏன் நிறுத்தவில்லை? அணுகுண்டு வந்துதானா நிறுத்த வேண்டும்? தன் ஆற்றலை அணுகுண்டுக்கு அளித்து விட்டதா? என்ற கேள்விகள் எழும். இதனைச் சிறிது விரிவாக நோக்குவோம்:

முதல் உலகப் போர் முடிந்ததும் பர்ரிசில் 'சமாதான மகாநாடு' கூடியது. அதன் பயனாகவே 'உலக ஒற்றுமைக் கழகம்' உருவாயிற்று. உலக மக்கள் ஒன்று

படுவதற்கும் வசதியாக வாழ்வதற்கும் உரிய சட்ட திட்டங்கள் பலப் பல வகுக்கப்பட்டன. பல நாடுகள் கழகத்தில் சேர்ந்தன. சில நாடுகள் சில்லாண்டுகள் கழித்துச் சேர்ந்தன. இக் கழகம் செய்த ஆக்க வேலைகளுள் ஒரு சில கீழே தரப்படும்.

1. சுவீடனுக்கும் - பின்லாந்திற்கும், செர்மனிக்கும் - போலந்துக்கும், கிரேக்கருக்கும் - பல்கேரியருக்கும், கொலம்பியாவிற்கும் - பெருவிற்கும் ஏற்பட்ட சச்சரவுகளைத் தீர்த்துப் போர் மூளாமல் செய்தது.

2. ஏழ்மை நாடுகளின் தொழில் வளத்தைப் பெருக்கிப் பொருளாதாரத்தை உயர்த்த முயன்றது.

3. அடிமைத்தனம் - அபின் வியாபாரம் முதலியவற்றைத் தொலைக்கப் பாடுபட்டது.

4. தொத்து நோய்கள் பரவாமல் இருக்கத் தடுப்பு முறைகள் செய்தது.

5. ஏழை நாடுகளுக்குப் பெருந்தொகையைக் கடனாக அளித்துதவியது.

6. போர்க் கைதிகள் தத்தம் நாடடையச் செய்தது.

7. நிற வேற்றுமையை ஒழிக்க முனைந்தது.

இப்படிப் பலவகை நன்மைகளைச் செய்து கொண்டிருந்த சங்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. சிறகிழந்த பறவையாயிற்று! வேலியால் மேயப் பட்ட பயிராயிற்று! எப்படி? குறுகிய

தேசப்பற்றுக் கொண்ட செர்மனி, இத்தாலி போன்ற நாடுகள் சங்கத்திலிருந்து பிரிந்தன. பிரிந்ததோடு நிற்காமல், உராய்கிற மாடு மேய்கிற மாட்டைக் கெடுத்தாற்போல் பிற நாடுகளின் அமைதியையும் குலைக்கத் தொடங்கின. அன்றியும் சங்கத்தில் சேர்ந்திருந்த பல நாடுகளும் இனிப் படையைப் பெருக்குவதில்லை என்று சங்கத்தில் ஒத்துக்கொண்டு தத்தம் ஊர் சென்றதும், 'அவன் கிடக்கிறான் குடிகாரன் எனக்கு இரண்டு மொந்தை போடு' என்ற முறையில் ஏராளமாகப் படைகளைப் பிறர் அறியாமல் பெருக்கி வைத்துக்கொண்டு பத்தினிபோல் பாசாங்கு செய்தன. இது எப்படித் தெரிந்தது? படையைப் பெருக்கக்கூடாது என்ற நாடுகளின் ஒழுங்கு, இரண்டாவது உலகப் பெரும் போரில் தெரிந்துவிட்டதே! அம்மம்மா எவ்வளவு ஆயத்தங்கள்! எவ்வளவு பீரங்கிகள்! எவ்வளவு குண்டுகள், எவ்வளவு தரை-நீர்-வான ஊர்திகள்! இந் நிலையில் நாடுகள் நாளாவட்டத்தில் சங்கத்தின் கட்டுப்பாடுகளை மீறின. முதல் முதல் சங்கத்தின் கட்டுப் பாடுகளை ஃஇட்லர் அவர்களே ''போனி'' பண்ணினார். 1939-இல் போலந்தைத் தாக்கி இரண்டாவது உலகப் பெரும்போருக்குத் திறப்புவிழா செய்தார். கெடுவான் கேடு நினைப்பான் அன்றோ? இந்நிலையில் சங்கம் பங்கம் எய்தி மயங்கியது. சங்கம் ஒன்றிருந்ததையே மறந்து உலகம் போரில் ஈடுபட்டது. அணுகுண்டு வந்தே ஆண்டுவிழா நடத்தியது. இந்தக் கதி இப்போதுள்ள ஐ.நா.வுக்கும் வராது என்று யார் ஆருடம் சொல்லுபவர்? இப்போது தெரிகிறதா ஐயத்தின் காரணம்?

முதல் உலகப் போருக்குப் பின் முதல் முதல் இந்த உலக ஒற்றுமைக் கழகத்தை நிறுவப் பாடுபட்டவர்களுள் முக்கியமானவர், இருபத்தெட்டாவது அமெரிக்கச் சனாதிபதியாயிருந்த ‘வுட்ரோ வில்சனே’ (Woodrow Wilson)யாவார். கழகத்துக்குரிய திட்டங்களைத் தயாரித்தவரும் இவரே! இதனாலேயே உலகம் இன்றும் இவரை, ‘சர்வதேசச் சங்கத்தின் தந்தை’ என்று புகழ்கிறது. தந்தை வில்சன் பெற்றெடுத்த ஒற்றுமைக் குழந்தையை வளர்க்கச் செவிலியர் பலர் பல வகையில் பாடுபட்டிருக்கிறார்கள். அவர்களுள் ‘வெல்ஸ்’ என்பவரும் ஒருவர். இவர் தாம் எழுதிய ‘சரித்திரச் சுருக்கம்’ என்ற நூலுள், உலக ஒற்றுமையை நிலை நாட்டுவதற்கு ஒரு பொதுவான கொள்கையே இருக்க வேண்டும்; எல்லோரும் கல்வி பயில வேண்டும்; எவ்வகைப் படையும் இருக்கக்கூடாது; வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியவேண்டும் - என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார். உண்மைதான்! ஏட்டில் எழுதி வைத்து என்ன பயன்? எல்லோரும் பின்பற்ற வேண்டுமே! ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவா தன்றோ?

எல்லா வசதியும் நிறைந்த இந்த நூற்றாண்டில், அதிலும் அரசியல் தலைவர்கள், அதிலும் போரால் நொந்த பின்பு இவ்வுலக ஒற்றுமைப் பேச்சை எழுப்பியதில் என்ன வியப்பு? ஒரு வசதியும் இல்லாதிருந்த காலத்தில், ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் பிறந்த ஓர் ஏழைத் தமிழ்ப் புலவர், உலக ஒற்றுமை வேண்டும் என்று தம் கவியில் குறிப்பிட்டுள்ளார். ‘யாதானும் நாடாமல்

ஊராமால்' என்னும் திருவள்ளுவரின் திருக்குறளை இங்கு நான் எடுத்துக் கூறவில்லை. அவர், யாதும் ஊரே - யாதும் நாடே என்று குறிப்பிட்டிருப்பது கற்றவர்களுக்கு மட்டுமே. யான் குறிப்பிடும் புலவர் பொதுவாக உலகத்தார்க்கே சொல்லியுள்ளார். அதனாலேயே அவர் கவிக்குப் 'பொதுவியல்' என்னும் பேர் அளிக்கப் பட்டுள்ளது. அது பழைய தமிழிலக்கியமாகிய புறநானூற்றுள் உள்ளது. அதன் கருத்து வருமாறு:-

''எல்லா ஊரும் நமக்கு ஒன்றே. எல்லா மனிதரும் நம் உறவினரே. நமக்கு நன்மையோ, தீமையோ வருவது நம்மாலேயே. துன்பம் வந்தபோது நோவதோ, அதைப் போக்கிக் கொள்வதோ நம்மைப் பொறுத்தேயுள்ளன. இறப்பு என்பது நமக்கு மட்டும் வரும் புதுமையன்று. அதனால், வாழ்வு வந்தபோது துள்ளிக் குதிப்பதோ, தாழ்வு வந்தபோது தாங்காது புலம்புவதோ எம்மிடம் இல்லை. ஒரு சிலரை உயர்த்துவதோ, மற்றொரு சிலரைத் தாழ்த்துவதோ எமக்கு வழக்கம் இல்லை.'' என்பதாகும். இதனை,

''யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே, வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே
... ... ... ... ... ... ...
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.''

என்னும் புறநானூற்றுப் (192) பாட்டால் அறியலாம். இக்கருத்துக்களை - முக்கியமாக முதல் அடியை உலக மக்கள் பின்பற்றினால் வரும் தீங்கென்ன? உலகம் ஒன்றுபட முடியாதா?

இன்ன இன்ன இடத்தில் இன்னின்ன நாடுகள் இருக்கின்றன என்று அறிய முடியாதபடி, கடலாலும் மலையாலும் உலகம் பிளவுபட்டுக்கிடந்த காலத்திலேயே நம் புலவர், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று முழங்கியிருக்கிறார் என்றால், கப்பல், வானவூர்தி, வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சி முதலிய கருவிகள், காலத்தையும் தூரத்தையும் வென்று சுருக்கி, உலகத்தை இணைத்துக் கொண்டிருக்கின்ற இவ்விருபதாம் நூற்றாண்டிலாவது உலகம் ஒன்றுபடக் கூடாதா? 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மூல மந்திரத்தினை ஒவ்வொருவரும் பின்பற்றி நடந்தால் 'ஒரே உலகம்' உருவாகாதா?

இம் மந்திரத்தை உலகிற்கு வழங்கிய அப்பழைய தமிழ்ப் புலவரின் பெயர் 'கணியன் பூங்குன்றனார்' என்பது. இவரை, சர்வதேசச் சங்கத்தின் தந்தை என்று உலக விளம்பரம் பெற்ற அமெரிக்கச் சனாதிபதி வில்சனாக உருவகித்து, 'தமிழ்நாட்டு வில்சன்' என்று அழைத்ததில் என்ன தவறு?

★

# 4. காலங் கடத்தாதே!

அன்புள்ள மாணாக்க,

நலம்; நலம் பல பெருகுக!

உன் கடிதம் கிடைத்தது. உனக்கு வேலை மிகுதியாயிருப்பதாக எழுதியிருந்தாய். ஆமாம், இந்த வயதில் எவ்வளவு வேலையாயிருந்தாலும் முயன்று செய்யத்தான் வேண்டும். சில சமயம் பல வேலைகள் சுமந்து போவதாகவும் குறிப்பிட்டிருந்தாய். வேலைகள் சுமையாகக் குவியாமல் இருப்பதற்கு ஒரு வழி உண்டு. அந்த வழியினை நீ என்னிடம் கல்வி பயின்று கொண்டிருந்த காலத்திலேயே நான் சொல்லியிருப்பதாக நினைவிருக்கிறது. மீண்டும் அதனை ஈண்டு உனக்கு நினைவுபடுத்துகிறேன்.

எந்த வேலையாயிருப்பினும் உரிய காலத்தில் முடித்துவிட வேண்டும். பிறகு பார்ப்போம் என்று ஒத்திப்போடும் இயல்பு நம் ஆக்கத்திற்குப் பெருந் தடைக்கல்லாகும். முழு வேலையினையும் ஒத்திப் போடுவதற்கு மட்டும் இதனை நான் கூறவில்லை; குறித்த ஒரு வேலையை அரைகுறையாய் விட்டு வைப்பதற்கும் சேர்த்தே நான் இந்த அறிவுரையினைக் கூறுகிறேன். அரைக் கிணறு தாண்டலாமா? வேலையைக் குறையாய் நிறுத்தும் இயல்புடையவரிடந் தான் வேலைகள் மலையெனக் குவிந்துவிடுவது வழக்கம். முற்பகல் வேலையைப் பிற்பகல் செய்ய, பிற்பகல் வேலையை மறுநாள் செய்ய,-

இப்படியே போய்க்கொண்டிருந்தால், எந்த வேலையும் ஒழுங்குறாது அவசரக் கோலம் அள்ளித் தெளித்த கதையாய்ப் போய்விடும். ‘செய்வன திருந்தச் செய்’ என்பது முதுமொழியல்லவா?

சிலர் செய்ய வேண்டிய வேலையை நிறுத்தி விட்டு, இன்பப் பொழுதுபோக்குக் களியாட்டங்களில் ஈடுபடுவதுண்டு. வெளித்தோற்றத்திற்கு அவர்கள் களியாட்டயர்வதாகக் காணப்படினும், அவர் தம் உள்ளத்தே ஐயோ, வேலையை விட்டுவிட்டு வந்துவிட்டோமே, எப்போது செய்வது, என்ன ஆவது என்ற எண்ணம் உறுத்திக்கொண்டேயிருக்கும். குறைவேலைக்காரர்கள் பொழுதுபோக்கினால் பெறும் போலி இன்பத்தைவிட, உரிய வேலையினை உரிய காலத்தில் முடித்து மனநிறைவு கொள்வதனால் உண்டாகிற இன்பமே பேரின்பம்! பேரின்பம்! இந்த உண்மையைப் பலர் உணர்வதில்லை.

சுற்றிவளைக்காமல் சுருங்கச் சொல்லின், எடுத்துக்கொண்ட வினையை எச்சமாக விடுவது - அதாவது வேலையைக் குறைவாக நிறுத்துவது, நம் திட்டங்களையெல்லாம் முறியடித்து, நம்மைக் குறிக்கோள் அற்றவராக்கி, நம் வாழ்வையே சீர்குலைத்துவிடும். எனவே, வேலையில் சிறிதும் குறை வைக்கக்கூடாது. வாழ்க்கையில் சிறு பகையிருப்பினும் அஃது எங்ஙனம் பெரிய பகையாக முற்றி நம் தலைக்கே கேடு விளைத்துவிடுமோ, அங்ஙனமே குறை வேலையும் செய்துவிடும். ஏன், வேறோர் எடுத்துக்காட்டும் உண்டே!

*தீயை அணைக்காமல் சிறிதளவு எச்சமாய் (குறையாய்) விட்டு வைத்தாலும், அது பெருகி வளர்ந்து பெருங்கேடு செய்யுமல்லவா? அது போன்றதே வினைக்குறையும். இதனை நம் வள்ளுவப் பெருந்தகையாரும்,*

''வினை பகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்''

*என்னும் குறட்பாவால் தெளிவுறுத்தியுள்ளாரே! எனவே எந்த வேலையினையும் காலங்கடத்திச் செய்யாதே! உரிய காலத்தில் செய்துவிடுக. பொன்னினும் சிறந்ததொரு பொருள் அருங் காலமல்லவா? நினைவிருக்கட்டும்.*

*உன் அன்புள்ள,*
*ஆசிரியன்*

## 5. புகழ்ச்சியில் வெறுப்பு

*என்ன! புகழ்ச்சியிலே வெறுப்பா? ஆம். அப்படியென்றால் பிறர் புகழ்ச்சியில் வெறுப்போ? இல்லயில்லை. தம் புகழ்ச்சியிலேயே வெறுப்பு. இப்படியுங் கூட உலகத்தில் உண்டா? இது என்ன விந்தையாக இருக்கின்றதே! ஆம் விந்தையாகத்தான் இருக்கும். எவ்விதத்தில்.*

*உலகில் புகழ்ச்சி விரும்பாதோர் பெரும்பாலும் இருக்கமாட்டார்கள். ஒவ்வொருவரும் தாம் புகழ்ச்சி அடைவதற்காக அரும்பாடுபடுகின்றனர். ஆனால், அப் புகழ்ச்சி நேர்மையான முறையில் கிடைப்பதாக இருந்தாலும் ஒருவாறு ஒத்துக்கொள்ளலாம்.*

அப்பப்பா! உலகில் புகழ்ச்சிக்காகச் சிலர் செய்யும் கொடுமைகளைப் பொறுக்க முடிய வில்லையே! வேறொருவர் செய்த புகழ்ச்சிச் செயல்களைத் தம்முடையன என்று சொல்லிக் கொள்வோர் சிலர். பிறரை வருத்திச் சில காரியங்களை முடித்துக்கொண்டு அதனை வெளியில் மறைத்துப் புகழ்கொள்வோர் சிலர். இப்படி இன்னும் பலர் உளர். மாட்டை அடித்துச் செருப்புத் தானம் செய்வதால் யாது பயன்? கடைத் தேங்காயைத் திருடி வழிப் பிள்ளையாருக்கு உடைக்கலாமா?

இன்னும் சிலருக்கு எழுத்து வாடையே தெரியாது. ஆனால் பையில் எழுதுகோல் சொருகி பிருப்பார்; கையில் கடிகையாரம் கட்டியிருப்பார். மற்றும் சிலர், வாடகைக்கு ஆடையணி வாங்கி அணிசெய்து கொள்வர்; கஞ்சிக்கும் வழியிருக்காது; காஃபி சாப்பிடுவது வழக்கம் என்று சொல்லிக்கொள்வர். இவ்விதம் பல பிறவிகள் உண்டு. குடிப்பது கூழ் - கொப்பளிப்பது பன்னீர் போலும்?

இத்தகைய புகழ்ச்சியுலகில் புகழ்ச்சியை வெறுப்பது என்பது எளிதா? மிகவும் அரிய செயல் அல்லவா? ஆனால் அப்புகழ்ச்சியினையும் வெறுத்த வீரர்கள் உலகில் இல்லாமற் போகவில்லை. அப்படியெனின், அவர்களைப் பற்றி அறிந்துகொள்ள ஆவலும் எழுச்சியும் அடைய வேண்டாமா?

பண்டொரு காலம். ஓர் அழகிய காடு. அதன் நடுவில் ஒரு பலாமரம். அதன் அடியில் ஒருவர் அமர்ந்திருந்தார்; அவர் கட்டியிருந்த துணியில் இனி

கிழிய இடமில்லை. அது பருந்தின் சிதறிய சிறகுபோல் பார்வைக்குத் தெரிந்தது. வயிறு இருக்கும் இடமே தெரியவில்லை; முதுகோடு ஓடி ஒட்டிக்கொண்டிருந்தது. ஏழ்மையின் எல்லையைக் கண்டவர் அவர். தற்போது பசியெனும் தீராப் பகைவனால் பெரிதும் தாக்கப்பட்டிருந்தார். அவர் யார்? 'குசேலரோ' என எண்ணிவிட வேண்டாம். 'வன்பரணர்' என்னும் பெயர் பூண்ட புலவர் பெருமான் அவரே. அவரைச் சுற்றிலும் அவர் தம் மனைவி மக்கள் சூழ்ந்திருந்தனர். வேற்றூர்க்குச் செல்லும் அக் குடும்பம் இளைப்பாறு வதற்காக வழியில் உள்ள அக்காட்டில் தங்க வேண்டி வந்தது.

அங்கே ஒரு வில்வீரன் வந்தான். ஏன், ஒரு சிற்றரசன் என்றே செப்பலாம். வேட்டைக்கு வேண்டிய ஒப்பனை செய்துகொண்டிருந்தான் அவன். அவனைக் கண்ட புலவர் வணங்கி எழுந்தார். எழுந்ததற்கு காரணம் அச்சமன்று; பெருமதிப்பே. ஆனால், புலவரை எழுந்து நிற்க வைத்தானா அரசன்? இல்லையில்லை. தலை யசைத்து, இன்சொல் புகன்று, கையால் அமர்த்தி உடனே அமரச் செய்துவிட்டான். புலவரின் ஏழ்மை நிலைமையையும், பசியால் வாடிய தோற்றத்தையுப் கண்டான். அக் காட்சியை அவனால் பொறுக்க முடியவில்லை.

புலவரின் பசிப் பிணியினைப் போக்கும் மருந்து அரசனிடம் கையிருப்பு இல்லை. காரணம் என்ன? தற்போது அவன் இருப்பது அரண்மனையன்று; நடு

காடு அல்லவா? அதனால் அவன் வறிதே விட்டானா? இல்லை? உணவு தயாரிக்கத் தொடங்கினான். தன்னுடன் வந்த வேலையாட்கள், வேட்டை காரணமாகப் பல மூலை முடுக்குகட்குப் பிரிந்திருந்தனர். இருப்பினும், அவன் சிறிதும் பின் வாங்கவில்லை. தானே உணவுப் பொருளைத் தேடினான். தீக்கடைக் கோலால் நெருப்பு மூட்டினான். நெருப்பின் உதவியால் உணவு தயார் செய்யப்பட்டது. புலவர் குடும்பம் உண்டு பசி நீங்கி அருவியில் நீர் பருகி இன்புற்றது. அவ் வின்பத்தைக் கண்டு அரசனும் இன்புற்றான்.

பின்னர், புலவர் அரசனுக்கு நன்றியும் வணக்கமும் செலுத்திப் புறப்படத் தொடங்கினார். அவ்வளவில் அனுப்பிவிடுவானா அவன்? பசியைப் போக்கியாயிற்று. ஒரு சிறிதாவது ஏழ்மையினையும் போக்க வேண்டும் அல்லவா? தான் அணிந்துகொண்டிருந்த அணிகலன்களை கழற்றித் தந்தாள். தந்து, ''புலவரீர்! நான் இப்போது இருப்பது அரண்மனையன்று, நடுக்காடே என்பதை நீவிர் நன்கு அறிவீர்கள்! ஆதலின் இவ்வளவுதான் அடியேனால் செய்ய முடிந்தது. இன்னும் சிறந்த உதவிகளைச் செய்ய இயலாது போனமைக்கும் பெரிதும் மன்னித்தருள வேண்டுகிறேன்'' என்று விண்ணப்பமும் செய்து கொண்டான். ஆ! அவன் பெருங் கொடைத்திறனை என்னென்று புகழ்வது!

அந்த வள்ளலின் வரலாற்றை அறிந்துகொள்ளப் புலவர் பெரிதும் ஆவல் கொண்டார். அவனை நோக்கி, ''அரசே நுமக்குரிய நாடு யாது?'' எனப் பணிவுடன்

வினவினார். அதற்கவன், ''புலவரீர்! என் நாடு எதுவாயினும் ஆக! அதைப்பற்றி நுமக்கேன் கவலை?'' என்ற தெரிவித்துவிட்டான். பார்த்தார் புலவர். ''அப்படியாயின் நும் பேரையாவது அறிவிக்க வேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார். அதற்கும் அவ்விதமே பதில் கூறிவிட்டான் அவன். தற்புகழ்ச்சி என்பதே அவன் அகராதியில் இல்லை போலும்! வேறொருவராய் இருப்பின் தம் பெருமைகளை வானளாவக் கொட்டி அளந்திருப்பார்கள் அல்லவா? உடனே அவன் புலவரிடம் விடைபெற்றுச் சென்று மறைந்தான்.

பின்னர், புலவர் அங்கு வந்த சிலரை வினவி, அவ்வரசன் 'தோட்டி' என்னும் மலைநாட்டிற்குத் தலைவன் எனவும், 'கண்டீரக் கோப்பெருநள்ளி' எனும் பெயருடையன் எனவும் அறிந்துகொண்டார். அவனைப் புகழ்ந்து அழகாகப் பாடினார். பாடி, அப்பாடலைத் தமிழ்நாட்டிற்கு ஈந்து, தம் கடமையை முடித்ததாக எண்ணி ஆறுதல் அடைந்தார். இந்நிகழ்ச்சியை, அவர் பாடிய,

''கூதிர்ப் பருந்தின் இருஞ்சி றகன்ன
பாறிய சிதாரேன் பலவுமுதற் பொருந்தித்
தன்னும் உள்ளேன் பிறிதுபுலம் படர்ந்தவென்
உயங்குபடர் வருத்தமும் உலைவும் நோக்கி
மான்கணம் தொலைச்சிய குருதியங் கழற்கால்
வான்கதிர்த் திருமணி விளங்குஞ் சென்னிச்
செல்வத் தோன்றலோர் வல்வில் வேட்டுவன்
தொழுதனன் எழுவேன் கைகவித் திரீஇ
இழுதின் அன்ன வானிணக் கொழுங்குறை
கானதர் மயங்கிய இளையர் வல்லே

தாம்வந் தெய்தா அளவை ஒய்யெனத்
தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டு,நின்
இரும்பேர் ஒக்கலொடு தின்மெனத் தருதலின்
அமிழ்தின் மிசைந்து காய்பசி நீங்கி
நன்மரன் நளிய நறுந்தண் சாரல்
கல்மிசை அருவி தண்ணெனப் பருகி
விடுத்தல் தொடங்கினோ னாக, வல்லே
பெறுதற் கரிய வீறுசால் நன்கலம்
பிறதொன் றில்லைக் காட்டு நாட்டெமென
மார்பிற்பூண்ட வயங்குகாழ் ஆரம்
மடைசெறி முன்கைக் கடகமோடு ஈத்தனன்.
எந்நாடோ என நாடும் சொல்லான்
யாரீரோ எனப் பேரும் சொல்லான்
பிறர்பிறர் கூற வழிக்கேட் டிசினே:
இரும்புபுனைந் தியற்றாப் பெரும்பெயர்த் தோட்டி
அம்மலை காக்கும் அணிநெடுங் குன்றிற்
பளிங்கு வகுத்தன்ன தீநீர்
நளிமலை நாடன் நள்ளிஅவன் எனவே.''

*என்னும் புறநானூற்றுப் (150) பாடலால் நன்குணரலாம். இப்பாடலின் பிற்பகுதியிலுள்ள 'எந்நாடோ என நாடும் சொல்லான்; யாரீரோ எனப் பேரும் சொல்லான்; பிறர் பிறர் கூற வழிக் கேட்டிசினே: தோட்டி மலை காக்கும் நளிமலை நாடன் நள்ளி அவன் எனவே' என்னும் அடிகள் ஈண்டு குறிப்பிடத்தக்கன.*

*படிக் கல்லில் பட்டை பட்டையாகத் தங்கள் பெயர் பொறித்துக்கொள்ளும் தற்புகழ்ச்சி வேட்டைக்*

காரர்களுக்கு, வள்ளல் நள்ளியின் வரலாறு ஓர் அறை கூவலன்றோ? இத்தகைய புகழ் வேட்டைக்காரர்களை நோக்கி, உங்கள் ஊர் பேர் என்ன என்று கேட்டால், இவர்கள் விரிவாகத் தங்கள் வாழ்க்கை வரலாற்றையே எழுதிக் கொடுத்தாலும் கொடுப்பார்கள்! கேட்காத போதே தம் புகழ் பாடுபவர்களாயிற்றே!

ஏதேனும் நன்கொடை கொடுத்துவிட்டு, தங்கள் பெயரை வெளியிடவே கூடாது என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்பவர்களும் இக்காலத்தில் சிலர் உளர். ஆனால் இவர்களுள் பெரும்பாலோர், புகழ்ச்சியில் உள்ள வெறுப்பினால் இவ்வாறு நடந்து கொள்வ தில்லை; பல முறை கெஞ்சிக் கேட்ட பிறகு வேண்டா வெறுப்புடன் தாங்கள் கொடுத்த சிறிய நன்கொடையின்- இல்லையில்லை - வன்கொடையின் அளவு பிறருக்குத் தெரியக் கூடாது என்பதற்காகவும், இதையறிந்து இன்னும் பலர் வந்து கேட்காமல் இருப்பதற்காகவுமே இத்தகையோர் தங்கள் பெயரை வெளிக்காட் டுவதில்லை. இவர்களை நோக்க, புகழ்ச்சியை விரும்பியாவது உலகிற்கு உதவி ஒப்புரவு செய்பவர்கள் வரவேற்கத் தக்கவர்களல்லவா?

புகழ்ச்சியை விரும்பாது நல்லதற்கு - நல்லவர்க்குக் கைம்மாறு கருதாது உதவிய நள்ளி போன்றோரால் அல்லவா வன்பரணர் போன்றோர் வாழ முடிந்தது? வன்பரணர் போன்ற புலவர் பெருமக்கள் வாழ்ந்ததனால் அல்லவா தமிழ்மொழி வளம்பெற்றுள்ளது? புகழ் வேண்டாத நள்ளியின் புகழ் வாழ்க!

★

# இலக்கியவியல்

## 6. தெவிட்டாத திருக்குறள்

''தேருந்தொறும் இனிதாந் தமிழ்''

என்பது தஞ்சைவாணன் கோவையில் ஒரு செய்யுட் பகுதி. இச் செய்யுள் எவர் வாயிலிருந்து வந்தது? ''பொய் பிறந்தது புலவர் வாயிலே'' என்பர் சிலர். இல்லை யில்லை; புலவர்கட்குள்ளேயே 'பொய்யா மொழிப் புலவர்' பாடிய செய்யுள் இது. ஈடுபாடு கொள்ள ஈடுபாடு கொள்ளத் தமிழ் மிக மிக இனிக்கும் என்பது இதன் கருத்து. தமிழில் ஈடுபாடு கொண்டவர்கள் இதனை உணர்வர் - நம்புவர். கற்கண்டின் இனிமையைச் சுவைத்தே உணர வேண்டும் - உணர முடியும் அல்லவா?

தமிழை ஆராய்ந்து இன்புறுதல் என்றால் என்ன? தமிழிலுள்ள தலைசிறந்த நூற்களை ஆராய்ந்து இன்புறல்தானே! அங்ஙன மெனின், தமிழ் நூற்களை ஆராய ஆராய இனிமை மிகும் என்பது போதரு மன்றோ? முதல் பொய்யாமொழிப் புலராகிய திரு வள்ளுவரே கூறியுள்ளாரே! படிக்கப் படிக்க நூலின் நயம் இனிப்பதைப் போலப், பழகப் பழகப் பண்புடையவரது நட்பு இனிக்கும், என்பது அவர் கருத்து.

''நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு'

என்பது அக்கருத்தமைந்த குறளாம்.

உண்மை அஃதெனில், ஆராய ஆராயத் தெவிட்டாது இனிக்கும் தமிழ் நூற்களுள் தலைசிறந்த ஒன்றினைத் தேர்ந்தெடுத்து வைத்துக்கொண்டு ஆராய்ந்து ஆராய்ந்து அவ்வின்பத்தைத் துய்க்கலாமே! இழப்ப-தேன்?

அத்தகையதொரு தமிழ் நூலைத் தேர்ந்தெடுத்தல் அரிதன்று; எளிது, மிக எளிது. அவ்வேலையை உலகம் நமக்குத் தரவில்லை: அதனை முன்னமேயே அது செய்து முடித்துவிட்டது. அந்த நாடறிந்த நூலை - ஏன், உலகமறிந்த அத்தலைநூலை ஏறக்குறைய ஓரீராயிரம் ஆண்டுகட்கு முன்பே, சங்கத் தமிழ்ப் புலவர்களே - பன்னூற்கள் எழுதிய தமிழ்ப் பாவாணர்களே விருப்பு வெறுப்பின்றி ஒருமுகமாய்த் தேர்ந்தெடுத்துவிட்டனர். ஆம்; உள்ள உள்ள உள்ளம் உருக்கும் அந்தத் தமிழ் நூலை - ஆராய ஆராய அறிவு ஊற்றெடுக்கும் அந்தத் தமிழ் நூலை - சிந்திக்கும் சிந்தைக்கு இனிய, அது மட்டுமா, கேட்கும் செவிக்கும் இனிய, அம்மட்டுமா, சொல்லும் வாய்க்கும் இனிய அந்தத் தமிழ்நூலை அவர்கள் அப்போதோ தேர்ந்தெடுத்துவிட்டனர்.

> ''அருங்குறளும் பகர்ந்ததற்பின் போயொருத்தர்
> வாய்க் கேட்க நூலுளவோ''

என்றார் நத்தத்தனார்.

> ''உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்குமே
> வள்ளுவர் வாய்மொழி மாண்பு''

என்றார் மாங்குடி மருதனார்.

''வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புலவோர்க்கு
ஆய்தொறும் ஊறும் அறிவு''

*என்றார் உருத்திர சன்ம கண்ணர்.*

''சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய...
வள்ளுவனார் பன்னிய இன்குறள் வெண்பா''

*என்றார் கவுணியனார்,*

''உலகடைய உண்ணுமால் (வள்ளுவர்)
வண்டமிழின் முப்பால் மகிழ்ந்து''

*என்றார் ஆலங்குடி வங்கனார். இப்படி இன்னும் பலர், பற்பலர்.*

*அக்காலப் புலவர்கள் மட்டுமா அதன் அருமை பெருமையினை அறிந்திருந்தனர்? இக்காலத்தும் பல்வேறு இந்திய மொழிப் புலவர்கள் உட்படப் பல்வேறு உலக மொழிப் புலவர்களும் அதன் ஈடு இணையற்ற சிறப்பினை நுனித்துணர்ந்தனர். தத்தம் மொழிகளிற் பெயர்த்துக் கொண்டனர். பிற மொழியாளர்கள் அத்தமிழ் நூலை மொழிபெயர்த்துக் கொண்ட செயல், அவர்தம் பரந்த மனப்பாங்கையோ, பரந்த அறிவின் பெருக்கையோ அறிவிப்பதாகப் பொருள் இல்லை; அத்தமிழ் நூலின் கருத்தாழத்தை - எவரையும் கவர்ந்து தன் வயப்படுத்தும் அந்நூலின் தனி மாண்பினை அறிவிப்பதாகவே பொருள் அல்லவா?*

*காலங் கடந்த, கண்டங் கடந்த, சாதி சமயங் கடந்த அத்தகு உலகப் பொது நூல் - உலகப் பொதுமறை*

திருவள்ளுவரின் தெவிட்டாத திருக்குறளன்றோ? ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்று சுப்பிரமணிய பாரதியார், திருக்குறள் உலகப் பொதுநூல் என்பதற்கு நற்சான்றிதழ் (Certificate) கொடுத்திருப்பதாகக் கூறுவது வழக்கம். இல்லை, இஃது அவரது சொந்தச் சரக்கில்லை. ஒருவேளை அவ்வாறே எடுத்துக்கொண்டாலும், இக் கருத்தை முதலில் வெளியிட்டவர் அவரல்லர். இதனைத் திருவள்ளுவர் காலத்திலேயே புலவர் பெருமக்கள் பறைசாற்றித் தெரிவித்துவிட்டனர்.

''வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்முடுக்குந்
தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாதால்-தெள்ளமுதம்
உண்டறிவார் தேவர் உலகு அடைய உண்ணுமால்
வண்டமிழின் முப்பால் மகிழ்ந்து''

என ஆலங்குடி வங்கனார் அப்போதே அறிவித்துப் போந்தார். 'உலகு அடைய - உலகம் முழுவதும் உண்ணும்' என அப்போதே குறி (ஆருடம்) சொல்லி விட்டுப் போனார். எதிர்காலத்துக்கும் இடம் வைத்து, 'உண்ணும்' என்று 'செய்யும்' என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்றில் கூறிப் போந்தமையின் நுணுக்கத்தினை நோக்கி நுனித்து மகிழ்க.

''வள்ளுவர் உலகங் கொள்ள மொழிந்தார் குறள்''

என நரிவெரூஉத் தலையாரும் கூறியுள்ளார்.

ஆம், உலகின் உட்கொள்கின்றனர்; ஆனால் தமிழர்களின் நிலை என்ன? ''வள்ளுவன் குறளை

வையகமெல்லாம் வாரி யிறையடா தமிழா'' என்று பாடுகிறோம், ஆடுகிறோம்; ஆனால் செய்தோமா? செய்கின்றோமா? போகட்டும், இனியேனும் செய்வோமா?

தமிழர்கள் திருக்குறளை மறந்தது உண்மைதான். அதனை அனைத்துலகிற்கும் அறிமுகப்படுத்த அவர்கள் மறந்தது உண்மைதான். ஆனால், திருக்குறள் தமிழர்களை மறக்கவில்லை. அவர்களை அனைத்துலகிற்கும் அறிமுகஞ் செய்து வைக்க அது மறக்கவில்லை. தன் கருத்தின் திண்மையால் உலக மக்களைக் கவர்ந்ததன் வாயிலாக, 'திருக்குறள் என ஒரு நூலுண்டு, அஃது எழுதப்பட்டது தமிழ்மொழியில், அம்மொழியினைப் பேசுபவர் தமிழர்கள், அவர்கள் அத்தகையதொரு நூலை உலகிற்கு அளிக்கவல்ல ஆற்றலும் அநுபவமும் நிரம்பியவர்கள்' என அனைத்துலகினரும் அறிந்து வியக்கச் செய்தது நம் அருமைத் திருக்குறளன்றோ?

'உலகிற்கு அறிமுகஞ் செய்து பரப்புவது அப்புறம் இருக்கட்டும், முதலில் நீங்கள் படியுங்கள்!' என்று திருக்குறள் சொல்லுவதுபோல் - திருவள்ளுவர் சொல்வதுபோல் தோன்றவில்லையா?

திருக்குறளை ஒரு முறை படித்தால் போதுமா? இரு முறை படித்தால் போதுமா? ஒரு கருத்துரையைக் கற்றால் போதுமா? ஒரு குறிப்புரையைக் கற்றால் போதுமா? திருக்குறளோ ஒரு வாழ்க்கை நூல் - வாழ்க்கைத் துணை நூல். இன்னும் சில்லாண்டுகள் சென்ற பின்னர் - சில அநுபவங்களைப் பெற்றபின்னர்

திருக்குறளை மீண்டும் ஒரு முறை படித்துப் பார்த்தால் தெரியும். புது அழகு - புது நயம் - புதுப்பொலிவு காணப்படும். இவ்வாறே ஆண்டுக்கு ஆண்டு, அநுபவத்துக்கு அநுபவம் திருக்குறள் தெவிட்டாது இனிக்கும். 'உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்குமே வள்ளுவர் வாய்மொழி' என மாங்குடி மருதனாரும், 'முப்பால் ஆய்தொறும் ஊறும் அறிவு' என உருத்திரசன்ம கண்ணரும் உரைத்திருப்பதை இப்போது ஒரு முறை ஊன்றி நோக்குக.

## 7. திருக்குறளின் அமைப்பு முறை ஆராய்ச்சி

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற வரிசையில் இப்பொழுது காணப்படும் திருக்குறளின் அமைப்பு முறையில் மாறுதல் செய்ய இடமிருக்கிறது. இம்மூன்று பால்களையும் தன்னகத்துக் கொண்டிருப்பது காரணமாகத் திருக்குறள் பெற்றிருப்ப தாக நாம் எண்ணிக்கொண்டிருக்கும் 'முப்பால்' என்னும் பெயரையே ஆட்டங் காணும்படிச் செய்யத் தெம்பு இருக்கிறது.

காதில் விழுகிறது; சிறு சலசலப்பு அன்று; பெருங் கூக்குரல்கள் - அறைகூவல்கள் காதைத் துளைக்கின்றன. ''பழைய சங்கப் புலவர்களே 'முப்பால்' என்று திருவள்ளுவ மாலையில் குறிப்பிட்டிருக்கின்றனரே. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் வரிசையில்

உறுதிப்பொருள்களை உரைப்பதுதானே தொன்று தொட்ட முறை'' என்றெல்லாம் பலர் போர் முழக்கம் இடுவது புரிகிறது.

பழைய சங்கப் புலவர்கள் சிலர் திருக்குறளுக்கு மதிப்புரை (விமர்சனம்) வழங்கியுள்ளனர். அவர்கள் எழுதிய பாக்களின் தொகுப்பாக, 'திருவள்ளுவ மாலை' என்னும் பெயரில் ஒரு நூல் உலவுவது பலர்க்கும் தெரிந்திருக்கலாம். அந்த நூலை நன்கு துருவிப்பார்க்க வேண்டும். 'அறம் பொருளின்பம் முப்பால், 'அறம் பொருளின்பம் முப்பால்' என இளமையிலிருந்து பார்த்துப் பார்த்துப் படித்துப் படித்துப் பழகிப்போன பழங்கண்களால் திருக்குறளையும் திருவள்ளுவ மாலையையும் பார்க்கக்கூடாது. ஆராய்ச்சி அறிவுக்கண் கொண்டு பார்க்கவேண்டும். படிக்க வேண்டும். அப்பொழுது புரியும் திருக்குறளின் அமைப்பு முறை.

திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரம்.எழுதியுள்ள பழைய புலவர்களே 'சனியீசுவரன் கோயில் சாமி'களைப் போலக் காட்சியளிக்கின்றனர். அக்கோயிலில், ஒன்று கிழக்கே பார்க்கும்; இன்னொன்று மேற்கே பார்க்கும்; மற்றொன்று தெற்கே பார்க்கும்; வேறொன்று வடக்கே பார்க்கும். இவ்வாறே அப்புலவர்களும் பல்வேறு வகையான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

அவை வருமாறு:-

(1) திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பிரிவினது. (திருவள்ளுவமாலை - 9 - கல்லாடர், 10 - சீத்தலைச்சாத்தனார், 11 - மருத்துவன் தாமோதரனார்,

*12 - நாகன்தேவனார், 15 - கோதமனார், 17-முகையலூர்ச் சிறுகருந்தும்பியார், 18 - ஆசிரியர் நல்லந்துவனார், 19 - கீரந்தையார், 30 -பாரதம் பாடிய பெருந்தேவனார், 31 - உருத்திரசன் மகண்ணர், 39 - உறையூர் முதுகூற்றனார், 46 - அக்காரக்கனி நச்சுமனார், 49 - தேனீக்குடிக்கீரனார், 53 - ஆலங்குடி வங்கனார்.)*

*(2) திருக்குறள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பிரிவினது. (7 -நக்கீரனார், 8 - மாமூலனார், 20-சிறு மேதாவியார், 33 - நரிவெரூஉத்தலையார், 40 - இழிகட் பெருங்கண்ணனார்)*

*(3) திருவள்ளுவர் மூன்றிலேயே நான்கையும் அடக்கியிருக்கிறார். (22 - தொடித்தலை விழுத்தண்டினார், 44-களத்தூர்க்கிழார்.)*

*(4) திருவள்ளுவர் வேதக்கருத்தைத் தமிழில் எழுதினார். (4-உக்கிரப் பெருவழுதியார், 28-காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், 37-மதுரைப் பெரு மருதனார், 42-செயலூர்க் கொடுஞ் செங்கண்ணனார்.)*

*(5) திருவள்ளுவர் திருக்குறளைத் தாமாகவே சொந்த அறிவு அநுபவங்களின் துணைகொண்டே செய்தார். (7 - நக்கீரனார்)*

*(6) திருக்குறளின் முதலிலுள்ள பாயிரம் என்னும் பகுதிதான் வீட்டுப்பால் (20 - சிறு மேதாவியார்)*

*(7) நான்கையும் இன்பம் (காமம்), பொருள், அறம், வீடு என்னும் முறையில் வரிசைப்படுத்தி அமைத்தல். (33-நரிவெரூஉத்தலையார்)*

(8) பொருட்பால் ஏழு பிரிவுகளையுடையது. (22- தொடித்தலை விழுத்தண்டினார், 26, போக்கியார்) ஆனால் உரையாசிரியர்களுள் மணக்குடவர் ஆறு பிரிவாகவும், பரிமேலழகர் மூன்று பிரிவாகவும் பிரித்துக் கொண்டுள்ளனர். பிரிவு இயல்களின் பெயர்களும் ஒருவர்க்கொருவர் வேறுபடுகின்றன.

(9) காமத்துப்பால் மூன்று பிரிவுகளையுடையது. (22 - தொடித்தலை விழுத்தண்டினார், 27 - மோசிகீரனார்). ஆனால், உரையாசிரியர்கள் இருவரும் இரண்டாகப் பிரித்துள்ளனர். பிரிவுகளின் பெயர்களும் வெவ் வேறானவை.

இவ்வாறு இன்னும் மாறுபட்ட பல்வேறுவகைக் கருத்துக்களைப் பழைய புலவர்கள் வெளியிட்டுள்ளனர். இதனால் தெரிவது என்ன? திருவள்ளுவரால் எழுதிப் போட்டுவிடப்பட்டுப்போன திருக்குறள் ஒரு நேரம் எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்திருக்கிறது. அதன் அமைப்பு முறையில் பலரும் தத்தம் கைவண்ணங் காட்டியிருக்கின்றனர் - என்பது வரையும் நன்கு புரிகின்றதன்றோ?

பால்களின் அமைப்பில் மட்டுந்தானா வேறு பாடு? பாலின் உட்பிரிவாகிய இயல்களின் அமைப்பில் மட்டுந்தானா வேறுபாடு? இயலின் உட்பிரிவாகிய அதிகாரத்திலும் வேறுபாடு காணக்கிடக்கின்றது. (அதிகாரம் என்பது, பத்துக் குறள்கள் கொண்ட ஒரு தலைப்பு) 'புதல்வரைப் பெறுதல்' என்று சிலரும் அதனையே 'மக்கட்பேறு' என்று சிலரும் கூறுகின்றனர்.

அதிகாரத்தின் வேறுபாட்டோடு, குறள்களின் வரிசை அமைப்பிலும் பெரிய வேறுபாடு காணக்கிடக்கின்றது. மணக்குடவர், பருதி, காளிங்கர், பரிமேலழகர் முதலியோர் உரைகளை எடுத்துப் பாருங்கள். ஒவ்வோர் அதிகாரத்திலும் குறள்களை எப்படி முன் பின்னாக ஒவ்வொருவரும் மாற்றி அமைத்திருக்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

அப்படியென்றால், திருவள்ளுவர் அமைத்த முறைதான் எது? ஏன் இத்தகைய மாறுதல்கள் ஏற்பட்டன? எப்படி ஏற்பட்டன? எவரால் ஏற்பட்டன? எப்போது ஏற்பட்டன? இதற்கு முடிவுகட்டித் தக்க விடையிறுப்பவர் எவர்? இஃது ஆராய்ச்சிக்குரியது.

★

## 8. கற்றலும் நிற்றலும்

''கற்ற வேண்டியவற்றைப் பழுதறக் கற்க வேண்டும். அதன்படியே நடக்கவும் வேண்டும்'' என்னும் கருத்துடைய

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.''

என்னும் குறளினை ஈண்டு ஆராய்வோம்.

(பதவுரை) கற்பவை = கற்கக்கூடியவற்றை, கசடு அறக் கற்க = குற்றமறக் கற்க வேண்டும். கற்றபின் = கற்றதும், அதற்குத் தக நிற்க = கற்றதற்கு ஏற்றபடி

நின்றொழுக வேண்டும். (கசடு = குற்றம்; தக = ஏற்ப = பொருந்த; நிற்றல் = ஒழுகுதல் - நடத்தல்)

(மணக்குடவர் உரை: கற்கப்படுவனவற்றைக் குற்றமறக் கற்க; கற்ற பின்பு அக் கல்விக்குத் தக வொழுகுக.)

(பரிமேலழகர் உரை: ஒருவன் கற்கப்படு நூல்களைப் பழுதறக் கற்க; அங்ஙனங் கற்றால் அக் கல்விக்குத் தக அவை சொல்லுகின்ற நெறிக்கண்ணே நிற்க.)

(ஆராய்ச்சி விரிவுரை) கற்கவேண்டும், அதன்படி நிற்கவேண்டும், என்பது குறள். கல்வி என்னும் பெயரில் உலகில் மக்கள் செய்துகொண்டு வருவது என்ன? பல நூற்களை வைத்துப் படித்துக்கொண்டிருக்கின்றனர். நூற்கள் என்பன யாவை? பல அறிஞர்கள் தங்கள் வாழ்க்கையில் கண்ட முடிபுகளை எழுதி வைத்து விட்டுப் போயிருக்கின்றனர்; அந்த வாழ்க்கையநுபவக் குறிப்புகளின் தொகுப்பைத்தான் நம் நூல் (புத்தகம் என்கின்றோம். அத்தகைய நூற்களைப் படிக்கின்றோம். ஏன் படிக்கின்றோம். அந்த நூற்கள் நம் வாழ்க்கைக்கு எவ்வாறு துணை செய்கின்றன? முதல் முதலில் அமெரிக்கா சென்று வந்தவன், 'இப்படியிப்படிப் போக வேண்டும்; இப்படியிப்படி நடந்துகொள்ள வேண்டும்' என்று தன் அநுபவத்தை எழுதிவைத்தான். அதைப் படித்துவிட்டுச் செல்பவனுக்கு வழிப்பயணம் எளிதாகிறது. இந்த வழிகாட்டி (Guide) வேலையைத் தான் முன்னோர் எழுதி வைத்த நூற்களும் செய்கின்றன. இவற்றைப் படித்துத்தானா தெரிந்துகொள் வேண்டும்?

நா்மே வாழ்ந்து பார்த்துத் தெரிந்து கொள்ளக்கூடாதா? செய்யலாம்; ஆனால் காலமும் முயற்சியும் மிகவும் வீணாகும். வாழ்க்கையின் பூட்டுத் திறப்புகளைத் தெரிந்துகொள்வதிலேயே காலங் கழிந்துவிடும். ஆக்க வேலைகளுக்குக் காலம் போதாது. முட்டின்றி வாழ்க்கை வாழ முடியாது. ஆகையால்தான் முன்னோர் நூற்களைக் கற்க வேண்டும்.

ஒருவனுக்கு இப்போது வயது முப்பது. அவன் மூவாயிரம் ஆண்டுகளாக எழுதப்பட்டு வந்துள்ள நூற்களையெல்லாம் படித்திருக்கிறான் என்றால், அவனுக்கு இப்போது வயது வெறும் முப்பது அன்று; மூவாயிரத்து முப்பது (3000+30=3030) ஆகும். அந்த நூற்களைப் படிக்காத எண்பது வயதுக் கிழவன் ஒருவன் இவனுக்கும் சின்னவனேயாவான். மூவாயிரத்து முப்பதுக்கும் வெற்று எண்பதுக்கும் எவ்வளவோ இடைவெளி இருக்கிறதல்லவா? இதனால்தான்,

> ''ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
> மூத்தோன் வருக என்னாது அவருள்
> அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்''

எனப் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் புறநானூற்றுப் பாடல் (183) ஒன்றில் கூறியிருக்கிறான் போலும்!

எனவே, கற்றல் என்பது, எதிர்கால நல் வாழ்வுக்காக முன்கூட்டியே பெறும் பெரியதொரு பயிற்சியே என்பது விளங்கும். ''பெற்றுள்ள சூழ் நிலைக்கு ஏற்பத் தன்னைப் பொருத்தி வாழக் கற்றுக்

கொள்ளுதலே - பயிற்சி பெறுதலே கல்வியாகும்'' - என்பது இக்காலக் கல்விக் கொள்கையின் முற்ற முடிந்த துணிபாகும். இதைத்தான் வள்ளுவர் ''கற்க ... நிற்க'' என அறிவிக்கின்றார். கற்பது எதற்காக? நிற்பதற்காகத்தான்! கற்றுவிட்டோமே என்பதற்காக நிற்பதில்லை. கல்வியின் நோக்கமே நிற்பதுதான்! நிற்றல் என்பது வாழவேண்டிய முறைப்படி வாழ்வதுதான். வாழ்வதற்கு வழிகாட்டுவதுதானே கல்வி! அதனால்தான் ''கற்க ... நிற்க'' என்றார் ஆசிரியர்.

'புரட்சியகராதி' என்னும் பெயரில் ஓர் அகராதி தொகுக்கும்படி எனக்கு ஆணையிட்டால், கற்றல் என்றால் நிற்றல் என்றே கூட நான் பொருள் எழுதி வைத்துவிடுவேன். இதற்கு நிகண்டு போன்ற மேற்கோள் சான்றாக இந்தக் குறளையே எடுத்துக் காட்டிவிடுவேன். பின்னே என்ன? படிப்புக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பே இல்லாமல் எத்தனையோ பேர் தருக்கித் தடுமாறித் திரிகிறார்களே, அவர்களைப் படித்தவர்கள் என்று எவ்வாறு அழைப்பது? இந்தக் கறிக்கு உதவாத பள்ளிக் கணக்கர்களையும் என்னென்பது! அதனால்தான், அண்ணல் காந்தியடிகள் கூட, வாழ்க்கைக்குப் பயன்படும்படியான - வாழ்க்கைக்கு ஆதாரமான கல்வியைப் பயிற்றுங்கள் என்று அறிவுரை தந்தார்கள். அவர்களது முறையினை நாம் 'ஆதாரக் கல்வி' (Basic Education) என்றழைக்கிறோம். இதைத்தான் வள்ளுவப் பெருமானார், கற்று நிற்க - நிற்கக் கற்க என்று அப்போதே அறிவித்துப் போந்தார். இனி இக்குறளின் சொல்நயங்கட்குச் செல்வோம்:

பள்ளிக்கூடத்துக்கு வெளியிலே பயனற்ற ஏடுகளைப் படிப்பது மட்டுமல்ல - பள்ளிக் கூடத்திலேயுங் கூட பிற்கால வாழ்க்கைக்குப் பயன் படாத பல செய்திகள் படிக்கப்படுகின்றனவே. அது கூடாது. வாழ்க்கைக்குப் பயன்படுவனவே கற்கப்பட வேண்டியனவாம். கற்கக் கூடாதவற்றைக் கற்றுக் காலத்தைக் குறைத்துக் கொள்ளற்க; கற்க வேண்டிய வற்றையே கற்பீராக, என்று சொல்ல வந்தவர் போல் ''கற்பவை கற்க'' என்றார் ஆசிரியர். மூன்றாண்டுகள் முற்றுங் கற்றாலும் முடிவு பெறாத ஒரு தேர்வுக்கு (பரீட்சைக்கு) உரிய நூற்களை நான் மூன்றே திங்களில் கற்று முடித்துத் தேர்வு எழுதி வெற்றியும் பெற்று விட்டேன் என்று வெட்கமில்லாமல் மார்பு தட்டிப் பெருமை பேசுகின்ற பேயர்களே! முக்கியமாய்த் தேர்வுக்கு வரக்கூடியது எது என்று பார்த்துக் கோடு கிழித்துப் படித்துத் தேர்வு எழுதிவிட்டு, தேர்வுத்தாள் திருத்துபவரைத் துரத்துகின்ற பித்தலாட்டப் பேடியர்களே! உங்களால் எல்லோருக்கும் கெட்ட பெயராம். எனவே, நீங்கள் இப்படிக் கற்றால் போதாது; பிழையற ஐயந்திரிபறக் கற்க வேண்டும், என்று சொல்ல விரும்பியவர் போல 'கசடறக் கற்க' என்றார் ஆசிரியர். 'கல்வி என்பது பின்னால் பயனளிப்பதுதான்' என்னும் கல்விக் கொள்கைக்கு அகச் சான்றாக, 'கற்றபின் நிற்க' என்னும் தொடரிலுள்ள 'பின்' என்னும் ஒரு சொல்லே போதுமே! 'கற்றபின் அதற்குத் தக ஒழுகுக - அல்லது - நடக்க' என்று சொல்லாமல் 'நிற்க' என்றது ஏன்? ஒழுகுதலில் தளராத உறுதி வேண்டும் என்பதை

வற்புறுத்துவதற்காகவே 'நிற்க' என்றார். நிற்றல் என்றால் நிலையாய் நிற்றல்தானே! இந்தக் காலத்தில் என்னவோ கட்டாயக் கல்வி - கட்டாயக் கல்வி (Compulsory Education) என்கிறார்களே - இந்தக் கட்டாயத்தை, 'க' எனும் விகுதி பெற்று விதித்தல் பொருளில் வந்துள்ள 'கற்க' - 'நிற்க' என்னும் பொருளில் வியங்கோள் வினைமுற்றுக்கள் உணர்த்தி நிற்கும் நுண்பொருள் அழகினை நுனித்தறிந்து மகிழ்க! (வியங் கோள் வினைமுற்றைப் பற்றியும், அதன் விதித்தற் பொருளைப் பற்றியும் இலக்கண நூலுள் கண்டு தெளிக).

மேலும், இந்தக் குறளில் இருபத்தேழு எழுத்துக்கள் உள்ளன. அவற்றுள் இருபத்துமூன்று எழுத்துக்கள் கடின ஓசையுடைய வல்லெழுத்துக்கள். இப்பொழுது இந்தக் குறளை இரண்டு மூன்றுமுறை படித்துப் பாருங்கள்? வள்ளுவர் எவ்வளவு 'காரசார' உணர்ச்சியுடன் கல்வியைக் கட்டாயப்படுத்தியுள்ளார்! எவ்வளவு வல்லோசையுடன் வற்புறுத்தியுள்ளார்! அவர் வல்லெழுத்துக்களை மிகுதியாகச் சேர்க்கவேண்டும் என்று எண்ணியா சேர்த்தார்? இல்லை. அவரது உள்ளத்தில் ஏற்பட்ட உணர்ச்சியின் ஊற்றமானது, அவரையறியாது ஊற்றெடுத்து வெளிப்போந்துவிட்டது. இதுதான் இயற்கைப் புலவர்களின் இயல்பு. எனக்கு எப்படி இது தெரிந்தது? இந்தக் குறளைப் படித்ததுமே, இதற்கும் ஏனைய குறள்கட்கும் ஒலி வேற்றுமை விளங்கிவிட்டதே! இதற்காகத்தான், செய்யுட்களை யெல்லாம் நன்கு வாய்விட்டுப் படிக்க வேண்டும்; திரும்பத் திரும்பப் படித்துப் பார்க்க வேண்டும்.

எனவே, கற்கத் தக்கனவற்றைக் கற்போமாக! கற்றபடியே நிற்போமாக!

★

## 9. வித்தின்றி விளையும் விந்தை

'இல்லாமல் பிறக்காது', 'வித்தாமல் விளையாது' என்பன முதுமொழிகள். விதை போடாமல் எதுவும் விளையாது என்பது இதனால் அறியக் கிடக்கிறது. மக்கள் விதைக்காவிடினும், தாமாகவே தோன்றி வளரும் மரஞ் செடி கொடிகள் கோடி கோடி. ஆயினும் அவற்றின் கீழ் விதை இருக்கும். நம் வீட்டுத் தோட்டத்தில் கூட சில முளைக்கின்றன. அவற்றை நாம் தப்புச் செடி அதாவது இயற்கையாகவே விதைத்துக்கொண்டு முளைத்த செடி என்கிறோம். அவையும் விதையிலிருந்து எழுந்தவையே!

மணிக்கூண்டுக்கு அடியில் மாயவித்தை செய்து காட்டுபவன் கூட, ஒரு மாங்கொட்டையை நட்டுத்தான், சிறிது நேரத்தில் செடியாக்கிக் காயாக்கிக் காட்டுகிறான். காயோடு கூடிய ஒரு மாங்கொத்தையும் முன்கூட்டியே ஒடித்துக்கொண்டு வரும் அவனும், உடன் ஒரு மாங் கொட்டையையும் கொண்டுவரத்தான் செய்கிறான். வித்தில்லாமல் விளையாதல்லவா? ஆனால், நம் அறிஞர்கள் சிலர் வித்தாமலேயே - விதையின் உதவி தேவைப்படாமலேயே நிலம் தானாகவே நன்றாக விளையும் என்று கூறிச் சென்றுள்ளனர். அவர்களை அடியொற்றி இன்றும் சிலர் கூறிக்கொண்டிருக்கின்றனர். என்னே விந்தை!

இந்த விந்தையை உலகினர் கேள்விப்படின், முற்கூறிய அறிஞர்களைக் கண்டு பேசத் துடிப்பர்; என்ன செய்தால் வித்தாமலேயே நிலம் தானாகவே விளையும் என்பதைத் தாமும் தெரிந்துகொள்ள அவாக் கொள்வர்; மேலும் அத்துறையில் ஆராய்ச்சி நடத்த ஆர்வம் காட்டுவர். ஆம், அந்த வழியையும் நம்மவர்கள் சொல்லியிருக்கின்றனர். அஃது என்ன?

''தன் இல்லத்திற்கு வரும் விருந்தினர்களுக்கு இருக்கும் உணவை அளித்து, மிச்சம் இருப்பின் தான் உண்ணுபவன் எவனோ, அவனுடைய நிலத்தில் விதையே போட வேண்டியதில்லை; அது தானாகவே ''தாம் தாம்' என்று விளைந்துவிடும்.''

இதுதான் நம் அறிஞர்களின் கண்டுபிடிப்பு. இது உலக விஞ்ஞானிகளுக்கு ஓர் அறைகூவல் அல்லவா? உலகத்தினர் இதனை நம்பவில்லையென்றால் அது அவர்களுடைய தவறு என்றுதான் நம் மேதைகள் பகர்வர்.

இந்தக் கருத்து சிறிதும் அறிவிற்குப் பொருந்தாத ஒரு மயக்கமாகும். ஒருவன் தன் உணவை வருபவர்க்கு அளித்துவிட்டு, தான் ஈரத்துணியை வயிற்றில் போட்டுக் கொள்வானானால், அவனுக்குப் பெரிய புண்ணியம் உண்டாகும். அப் புண்ணியங் காரணமாக, அவன் நிலம் தானாக விளையும்படிக் கடவுள் அருள்புரிவார் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டுதான் நம்மவர் சிலர் இப்படி எழுதி வைத்துள்ளனர். இந்தக் கருத்தை இன்றைய உலகம் - பகுத்தறிவு நிறைந்த உலகம் -

ஆராய்ச்சித் திறன் பெற்ற உலகம் - விஞ்ஞான உலகம் ஏற்றுக்கொள்ளுமா?

ஒருவேளை, எருவிடாமல் விளைந்தாலும் விளையலாம் - நீர்பாய்ச்சாமல் விளைந்தாலும் விளையலாம் - களை பறிக்காமல் விளைந்தாலும் விளையலாம் - காவல் காக்காமல் விளைந்தாலும் விளையலாம்; ஆனால் விதையில்லாமல் நிலம் விளைய முடியுமா? இங்ஙனம் கூறுபவர்களை உலகப் பொருட்காட்சி நிலையத்தில்தான் வைக்கவேண்டும்.

இவர்கள் இந்த பெரிய இமாலயப் பிழையை தங்கள் மேல் சுமத்திக் கொள்ளவில்லை; திருவள்ளுவர் தலைமேல் கட்டிவிட்டிருக்கிறார்கள் - இதுதான் வியப்பு! இல்லையில்லை, வியப்பில்லை - வருந்தத்தக்கது. அஃது என்ன? இவர்கள், திருவள்ளுவரின் ஒரு குறளுக்கு, உண்மைப் பொருள் உணராது, இவ்வாறு திரிபான பொருள் கூறியுள்ளார்கள். அந்தக் குறள் வருமாறு:-

''வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்'

என்பது குறள். இது விருந்தோம்பல் என்னும் பகுதியில் உள்ளது. இப் பாடலுக்கு, பழைய உரையாசிரியர்கள் பலரும், அவர்களைப் பின்பற்றிய இக்காலத்தவர் பலரும், மேற்கூறிய கருத்தையே உரையாக எழுதியுள்ளனர். இக் குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கின்ற அறிஞர்களுங்கூட, அந்தக் குட்டையில் ஊறின மட்டை யாகவே காணப்படுகின்றனர். அதாவது ''விருந்தினர்க்கு

முதலில் உணவளித்து, பின்பு மிகுந்திருப்பதைத் தான் உண்ணுபவனுடைய நிலத்தில் விதையும் இட வேண்டுமோ? வேண்டா; அது தானாகவே விளையும்'' என்னும் கருத்திலேயே எல்லோரும் உரை எழுதியிருக்கின்றனர். அறிஞர்களின் ஆராய்ச்சிப் பார்வைக்காக இங்கே பழைய தமிழ் உரைகள் மூன்றும், ஆங்கில மொழிபெயர்ப்பு மூன்றும் கீழே தரப்படும்:-

*1)''முன்னே விருந்தினரை மிசைவித்துப் பின் மிக்கதனைத்தான் மிசைவானது விளைபுலத்திற்கு வித்திடுதலும் வேண்டுமோ? வேண்டா; தானே விளையும்.''*

*-பரிமேலழகர்*

*2) ''விருந்தினரை யூட்டி மிக்க வுணவை உண்ணுமவன் புலத்தின்கண் விளைதற் பொருட்டு விதைக்கவும் வேண்டுமோ? வேண்டா; தானே விளையாதோ?*

*-மணக்குடவர்*

*3) விருந்து உபசரித்து மிஞ்சினதைப் புசிப்பது, கழனிக்கு எருப்போட்டு நீர்த் தேக்கினதுபோல ஒன்று நூறாயிரம் விளையும்.*

*-பாரதியார்*

*4)* "Does the field of one who partakes what remains after entertaining the guest, need to be sown with seeds?" - by V.R.Ramachandra Deetchathar

*5)* "Behold the man who feedeth his guest first and then only eateth what is left; doth his land stand in need even of sowing?" - By V.V.S.Aiyar.

*6)* "What need is there that he should sow his field, who welcomes guests and eats but what remains?" - by H.A.Popley.

*விரிவஞ்சி இங்கே அறுவர் உரைகள் மட்டும் தரப்பட்டுள்ளன. இப்படியே பற்பலர் எழுதியுள்ளனர். வள்ளுவர் இந்தக் கருத்திலா இந்தக் குறளை எழுதியிருப்பார்? அறிவுக்கொவ்வாத குப்பைகளை நம்பிவந்த மக்களிடையே தோன்றி வாழ்ந்து வந்தவர்தான் வள்ளுவர் என்றாலும் கருத்துக்களை வெளியிடும் முறையில் அவர் ஒரு பெரும் புரட்சிக்காரர் என்பதைக் கூர்த்த மதியினர் உணர்வர். அந்தக் காலத்துக்கு அவர் போக்கு ஒரு பெரும் புரட்சியே!*

*இனி, இந்தக் குறளின் உண்மைக் கருத்து யாதாக இருக்கக் கூடும் என்று ஆராயலாம்:-*

*உணவு அருந்தும் வேளை. ஒருவர் திடீரென்று ஏதோ ஒரு வேலையாக வீட்டிற்கு வந்துவிடுகிறார். உண்ணுவதற்குச் செல்ல இருந்த வீட்டுக்காரர் வந்தவரையும் உடன் உண்ண அழைக்கிறார். ''திடீரென்று வந்தவிடத்தில் உணவருந்த ஒத்துக் கொள்ளலாமா? நமக்காக முன்கூட்டியே உணவு தயாரித்தா வைத்திருக்க முடியும்?'' என்றெண்ணி வந்தவர் மறுக்கிறார். வீட்டுக்காரர் வற்புறுத்துகிறார்:- ''உங்களுக்காகவா உலை வைத்துச் சோறு சமைக்கப் போகிறோம்? ஏதோ*

இருப்பதை எங்களுடன் உண்ணுங்கள்'' என்று சொல்லி அழைக்கிறார். இந்நிகழ்ச்சியினை உலகியலில் காணலாம். இன்னும் சிலர், வந்தவரை நோக்கி, ''உங்களுக்காகவா கூடை எடுத்துக்கொண்டு கடைக்குப் போய் அரிசி வாங்கி வந்து சமைக்கப்போகிறோம்? ஏதோ இருக்கிறது; எடுத்துப் போட்டுச் சமைத்திருக்கிறோம்; அதனை எங்களுடன் நீங்களும் உண்ணுங்கள்'' என்று கூறி அழைப்பர். இஃதும் உலகியலில் காணத்தக்கதொரு நிகழ்ச்சியே.

இப்பொழுது இங்கே இக்குறள்பற்றி இரண்டு படிகள் எடுத்துப் பேசப்பட்டன. நாம் மூன்றாவது படிக்குத் தாண்டுவோமே! அஃது என்ன? ''இருப்பதை வந்தவர்க்கு அளித்து, மிஞ்சியிருந்தால் தான் உண்ணும் உயர்ந்த உள்ளம் படைத்தவன், விருந்திருனருக்கு என்று கூடுதலாக நிலத்தில் விதைக்க வேண்டுமா? கூடுதலாகப் பயிர் செய்ய வேண்டுமா? கூடுதலாகச் சமைக்க வேண்டுமா? வேண்டா!'' என்பது வள்ளுவர் குறளின் கருத்தாயிருக்கக் கூடாதா? 'தனக்கு மிஞ்சியே தருமம்' என்ற உளநிலை படைத்தவன்தான், தனக்குப் போதா விட்டால் என்ன செய்வது என்றஞ்சிப் பிறருக்கென்று தனியாகத் தயார் செய்யவேண்டும். ஆனால், தனக்கு மிஞ்சியே தருமம் என்றில்லாமல்,பிறர்க்கு மிஞ்சியே தனக்கு என்ற உயர்ந்த உளநிலை பெற்றவன், தனக்கென்றும் பிறர்க்கென்றும் தயாரிக்க வேண்டியதில்லை; தன்னுடையதையே பிறர்க்குத் தந்துவிடுவான் அன்றோ?

உங்களுக்காகவா உலை வைத்துச் சமைக்கப் போகிறோம்? இது முதல் படி. உங்களுக்காகவா

கடைக்குச் சென்று அரிசி வாங்கி வரப்போகிறோம்? இது இரண்டாவது படி. உங்களுக்காகவா விதைத்துப் பயிரிடப் போகிறோம்? இது மூன்றாவது படி. இந்த மூன்றாவதுபடியே இக் குறளிலிருந்து எடுத்துக் காட்டப்பட்டது. இந்தக் கருத்தினை அறிஞர்கள் ஆராய்ந்து காண்க.

'இரட்டுற மொழிதல்' (இரு பொருள்படக் கூறுதல்) என்றும் ஓர் இலக்கணக் கொள்கைப்படி, இன்னொரு கோணத்தில் நின்றும் இந்தக் குறளை நோக்கலாம். அஃது என்ன?

''தன்னலம் பாராது பிறர்நலமே பேணுபவன் - தன் பசியையும் பாராது பிறர் பசியைப் போக்குபவன் - தனக்கு வைத்திருந்த உணவைப் பிறர்க்கு அளித்துவிடும் பெரிய உள்ளம் படைத்தவன், வீட்டில் ஒன்றும் இல்லாத போது விருந்தினர் வந்துவிட்டால், விதைப்பதற்கென்று வைத்திருக்கும் விதை நெல்லை நிலத்தில் கொண்டு போய் விதைக்கவும் விரும்புவானா? விரும்பமாட்டான். அதனைக் குத்தி அரிசியாக்கிச் சமைத்து விருந்தினர்க்குப் படைக்கவே செய்வான்'' - என்ற கருத்து பொதிந்த கண்களுடன் இந்தக் குறளை நோக்குங்கள்! விதைத்த நெல்லையே நிலத்திலிருந்து எப்படியோ எடுத்துக் கொண்டு வந்து குத்திச் சமைத்து வந்தவர்க்கு இட்ட வள்ளல் இளையான்குடி மாற நாயனாரது வரலாறு தமிழ் மக்கள் அறியாததொன்றன்று.

இந்தக் கருத்தின்படி, இக்குறளிலுள்ள 'வேண்டும்' என்னும் சொல்லுக்கு 'விரும்புதல்' என்று பொருளாம்.

வேண்டுதல் என்ற சொல்லுக்கு விரும்புதல் என்னும் பொருள் உண்மையை 'வேண்டுதல் வேண்டாமையிலான்' என்று தொடங்கும் குறளானும் உணரலாம். வேண்டுங்கொல்லோ என்றால், விரும்புவான் கொல்லோ - விரும்புவானோ என்பது பொருள். ஈண்டு, வேண்டும் என்பது 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று. அஃது, ஆண்பால் ஒருமைக்கும் உரியது என்பதைத் தமிழிலக்கணம் கற்றோர் நன்கறிவர். மேலும், இந்த வாய்ப்பாட்டு வினைமுற்று ஆட்சியை வள்ளுவர் பல குறள்களில் கையாண்டுள்ளார் என்பதனைத் திருக்குறள் கற்றவர் நன்குணர்வர். எனவே இந்தக் குறளுக்கு, "முன்னர் விருந்தினரை ஓம்பிப் பின்னர் மிஞ்சியிருந்தால் தான் உண்ணும் உளநிலை பெற்றிருப்பவன், வித்தினை - விதை நெல்லை - விதைத் தானியத்தை நிலத்தில் இடவும் விரும்புவானோ? மாட்டான்; விருந்தினர்க்குச் சமைத்து அளிக்கவே விரும்புவான்" என்று பொருள் கூறுவது முன்னதினும் சிறந்ததொன்றாம்.

பரிமேலழகர் இந்தக் குறளை, விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தில் ஐந்தாவது குறளாக அமைத்துக் கொண்டு (3, 4, 5 குறள்களில்) விருந்தோம்பலின் பயன் கூறப்பட்டதாகச் சொல்கிறார். பரிதியாரோ ஏழாவது குறளாக அமைத்துக்கொண்டுள்ளார். ஏன்? இதனை மூன்றாவது குறளாகக் கொண்டு, விருந்தோம்புவானது உள்ளப் பண்பின் உயர் எல்லையைச் சிறப்பித்தாகக் கொள்ளலாமே!

★

# 10. திருவாசகத்தின் இயற்பெயர் ஆராய்ச்சி

திருவாசகம் என்பது ஒரு சைவசமய நூல்; தமிழில் மலர் தூவி அர்ச்சனை செய்து இறைவனை வழிபடுவதற்கேற்ற ஒரு சிறந்த நூல். இதன் ஆசிரியர் மாணிக்கவாசகர் ஆவார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் என்னும் நான்கு சைவப் பெரியார்களையும் 'நால்வர்' என்னும் சொல்லால் விதந்து கூறுவது சைவ மரபு. இந் நால்வருள் ஒருவரான மாணிக்கவாசகரது அருட்படைப்பே திருவாசகம். தலைசிறந்த சைவப் பெரு நூற்கள் சில, பன்னிரண்டு திருமுறைகளாக வகுத்துத் தொகுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் நமது திருவாசகம், எட்டாந் திருமுறையாக அமைந்து போற்றப்பட்டு வருகிறது.

இந்தத் திருவாசகம் என்னும் நூலுக்கு, இதனை எழுதிய மாணிக்கவாசகர் இட்ட பெயர் என்ன? என்பதுதான் இங்கே எடுத்துக்கொண்ட ஆராய்ச்சியாகும். இயற்பெயர் என்பது, முதலில் இடப்பட்ட பெயராகும். ஒரு குழந்தைக்கு முதலில் பெற்றோர் இட்ட பெயர் இயற்பெயராகும். பின்னர் வளர்ந்து பெரியவன் ஆனதும், எத்தனையோ புனைபெயர்களும் சிறப்புப் பெயர்களும் ஏற்படுகின்றன அல்லவா? அதுபோலவே, சில நூற்களுக்கும் ஆசிரியர் வைத்த பெயர் இருக்க, பின்னால் சில சிறப்புப் பெயர்கள் தோன்றுவதும்

உண்டு. சிறப்புப் பெயர் பெற்ற ஒரு நூல், நாளடைவில் தன் இயற்பெயரை இழந்து விடுவதும் உண்டு. மாணிக்கவாசகர் எழுதிய நூலும் இந்நிலைக்கு உள்ளானதேயாம். அதாவது திருவாசகம் என்னும் பெயர் இந்நூலின் இயற்பெயரன்று; பின்னால் ஏற்பட்ட சிறப்புப் பெயரேயாம்.

அங்ஙனம் எனில், திருவாசகத்தின் இயற்பெயர் யாது? அதனை நான் கண்டுபிடித்திருக்கிறேன். கண்டுபிடித்த விதத்தினையும் கூறுவேன்.

பல தலைப்புக்களின் கீழ், சிவன்மேல் பாடப் பட்ட தோத்திரப் பாடல்களின் தொகுப்பு நூலாகவே திருவாசகம் காட்சியளிக்கிறது. அந்நூலுள், சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல், திருச்சதகம், திருவெம்பாவை, திருப்பள்ளி யெழுச்சி, ஆனந்தமாலை, அச்சோப் பதிகம் முதலிய ஐம்பத்தொரு பகுதிகள் (தலைப்புகள்) உள்ளன. பெரும்பாலான பகுதிகளில், ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் வரக்கூடிய சொல்லோ அல்லது தொடரோ அப்பகுதியின் தலைப்புப் பெயராக அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாக, 'எம்பாவாய்' என்று பாடல்தோறும் முடியும் பகுதிக்கு 'திருவெம்பாவை' என்ற பெயரும், 'பள்ளி எழுந்தருளாயே' என்று பாடல்தோறும் முடியும் பகுதிக்கு 'அச்சோப் பதிகம்' என்ற பெயரும் உள்ளமை காண்க. இவற்றுள் ஒவ்வொரு பகுதியும் பல ஊர்களில் பல காலங்களில் பாடப்பட்டதாக எழுதப் பட்டிருக்கிறது.

இந்தக் கருத்துக்களையெல்லாம் நான் இளமையில் அப்படியே நம்பியிருந்தேன். இளமையில் பத்து வயது தொட்டே எனக்கு திருவாசகத்தில் பயிற்சி உண்டு. பல பகுதிகள் தண்ணீர் பட்ட பாட்டில் மனப்பாடம் உண்டு. திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்தில், திருவாசகம் ஒப்பித்தல் போட்டியில் பரிசும் பெற்றிருந்தேன். ஆனால் அப்போது முழுப்பொருளும் தெரியாது. பிறகு பிறகே பொருள் புலப்பட்டது. பின்னர் சில்லாண்டுகள் திருவாசகத்தை அறவே மறந்து விட்டிருந்தேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பு - 1951 என எண்ணுகிறேன் - மயிலம் தமிழ்க் கல்லூரியிலிருந்து என்னைச் சொற்பொழிவிற்கு அழைத்தார்கள். 'திருவாசகம்' பற்றிப் பேசவேண்டும் என மயிலம் அடிகளார் அவர்களே தலைப்பும் தேர்ந்தெடுத்துக் கொடுத்திருந்தார்கள். நானும் ஒத்துக்கொண்டேன்.

சில்லாண்டு இடைவெளிக்குப் பின்னர், புதிதாகத் திருவாசகத்தை எடுத்துப் புரட்டத் தொடங்கினேன். அதாவது, புதுத் தெளிவுடனும் புத்துணர்ச்சியுடனும் நூலின் முகப்புப் பகுதியைப் படித்துக்கொண்டு வந்தேன். அப்போது, நான் இதுவரையும் கேள்விப் படாத ஒரு புதுக் கருத்து என் உள்ளத்தே தோன்றியது. திருவாசகத்தின் இயற்பெயர் வேறொன்று என்பதுதான் அந்தப் புதுக் கருத்து. இதனை இதுவரையும் யாரும் கண்டுபிடித்துக் கூறியுள்ளதாக எனக்குத் தெரியவில்லை.

திருவாசகத்திலுள்ள ஐம்பத்தொரு பகுதிகளுள் முதற்பகுதியாக அமைந்திருப்பது 'சிவபுராணம்'

என்னும் தலைப்பாகும். இந்தப் பகுதிக்கு ஏன் இந்தப் பெயர் கொடுக்கப்பட்டது? 'போற்றி, போற்றி' என்று அடிக்கடி வந்துள்ள பகுதிக்குப் 'போற்றித் திருவகவல்' என்ற பெயரும், 'எம்பாவாய், எம்பாவாய்' என்று அடிக்கடி வந்துள்ள பகுதிக்குத் 'திருவெம்பாவை' என்ற பெயரும், இதுபோலவே அமைந்திருக்கும் மற்ற பகுதிகளுக்கும் மற்ற பெயர்களும் கொடுக்கப் பட்டிருப்பது ஒருவகையில் முறையே. ஆனால் முதல் பகுதிக்குச் 'சிவபுராணம்' என்னும் பெயர் கொடுக்கப் பட்டது ஏன்? இந்தப் பகுதியில்

> ''சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
> முந்தை வினைமுழுது மோய உரைப்பது யான்''

என்னும் அடிகள் காணப்படுவதனாலேயே, இதற்குச் சிவபுராணம் என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். இப் பெயர்சூட்டு வேலை ஆசிரியருடைய தன்று; பிற்காலத்தவரின் கைச்சரக்கேயாம்.

இந்தப் பகுதிக்கு ஆசிரியர் எந்தப் பெயரும் சூட்டவில்லை. இது 'பாயிரம்' என்படும் பகுதியாகும்- அதாவது, நூலுக்கு முன்னால் எழுதப்படும் ஆசிரியரின் முன்னுரையாகும் என்பதே என் கருத்து. இதற்குப் பல சான்றுகள் பகர்வேன்.

அன்றுதொட்டு இன்று வரை, இறைவன்மேல் செய்யுள் நூல் எழுதுபவர்கள், முதலில் கடவுள் வணக்கம் எழுதி,அடுத்து, தாம் எழுதப் போகும் நூல் இன்னது - அதனை எழுதுவதற்குத் தமக்கு எந்தத் தகுதியும் இல்லை யாயினும் ஆவல்பற்றி எழுதுவதாக

அவையடக்கம் - அந்நூலைப் படிப்பதால் உண்டாகும் பயன் - முதலியவற்றை எழுதிவிட்டே, பின்னர் முறையாக நூலின் உட்பொருளில் புகுவர். இதற்குப் பாயிரம் அல்லது முன்னுரை என்பது பெயர். திருவாசகத்தின் முற்பகுதியும் இன்னதே. இப் பகுதியில் மாணிக்கவாசகர் எழுதியுள்ள சில அடிகள் பின்வருமாறு:-

''சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற வதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் **சிவ புராணம்** தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பன்யான்
... ... ... ... ... ... ... ... ... ... பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.''

மேல் உள்ள அடிகளைக் கூர்ந்து நோக்குபவர்க்கு, இஃது ஒரு தனிப்பகுதியன்று; ஆசிரியரின் முன்னுரையே யாம் என்பது தெளிவாகப் புரியும்.

எனவே, மேற்கூறிய அடிகளிலிருந்து, ஆசிரியர் தம் முழு நூலுக்கும் சிவபுராணம் என்று பெயர் இட்டுள்ளார் என்பதும், தம் சிந்தை மகிழவும் பழவினை மாயவும் சிவபுராணம் உரைக்கிறார் என்பதும், இந்நூலைப் படிப்பவர்கள் சிவனது உலகமாகிய வீட்டுலகில் பலரும் ஏத்தும்படி வீற்றிருப்பர் என்று நூற்பயன் கூறியுள்ளார் என்பதும் பிறவும் புலப்படும்.

இம்முறையினைப் பிற்காலத்தவர் மட்டுமன்றி, மாணிக்கவாசகரின் காலத்துக்கு முன்னும் பின்னும் ஒட்டிய காலத்துப் பேரறிஞர்களும் கையாண்டுள்ளமை நம் ஆராய்ச்சிக்குப் பெரிதும் அரண் செய்யும். அதாவது, திருமூலர், கம்பர், சேக்கிழார் முதலிய பெரியோர்களும் இம்முறையைக் கையாண்டுள்ளனரே! அவர்களின் முன்னுரைகளையும் பார்ப்போமே!

முதலில் திருமூலரை எடுத்துக்கொள்வோம். இவர் மாபெருந் தமிழறிஞர். இருபதாம் நூற்றாண்டைய எந்தப் புரட்சியாளரும் இவரிடம் உரைபோடக் கூட காணமாட்டார்கள். இவர்,

''ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

வேரறியாமை விளம்புகின்றேனே''

என்று அவையடக்கம் கூறுகிறார். அதாவது, இறைவன் பெருமையை யாராலும் அறிய முடியாது, சொல்ல முடியாது எனறு கூறியுள்ளார். இதுபோலவே, மணி வாகசரும், ''பெருஞ்சீர் பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்'' என்று கூறியுள்ளார்.

மேலும் திருமூலர் தாம் செய்த நூலுக்கு, 'மூவாயிரம் தமிழ்' எனப் பெயரிட்டுள்ளார். இதனை அவரே கூறியுள்ள ''மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்'' என்ற பாடலால் உணரலாம். இந்த நூலில் மூவாயிரம் பாடல்கள் உள்ளதால் 'மூவாயிரம் தமிழ்' என்ற பெயரை ஆசிரியர் இட்டார். ஆனால் இந்த இயற் பெயர் நாளடைவில் மறைந்து, 'திருமந்திரம்' என்ற

சிறப்புப் பெயரே இக்காலத்து வழங்கப்படுகின்றது. இப்போது திருமந்திரம் என்றால்தான் யாருக்கும் தெரியும். மூவாயிரம் தமிழ் என்றால் யாருக்கும் தெரியாது. இதுபோலவே, மாணிக்கவாசகர் இட்ட சிவ புராணம் என்னும் பெயர் மறைக்கப்பட, திருவாசகம் என்னும் பெயரே வழக்காற்றில் உள்ளது. மேலும் திருமூலர்,

''காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே''

என்று நூற்பயனும் கூறியுள்ளார். அதாவது, மூவாயிரம் தமிழ் என்னும் திருமந்திர நூலைக் காலையில் எழுந்து பொருளுணர்ந்து கற்பவர்கள் உலகத் தலைவனாகிய இறைவனை அடைவர் என்றும் கூறியுள்ளார். இதுபோலவே மாணிக்கவாசகரும்,

''சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து''

என்று நூற்பயன் கூறியுள்ளார். இப்படியிருக்கும்போது, திருவாசகத்தின் முற்பகுதியை முன்னுரை என்று சொல்லாமல், ஒரு தனிப்பகுதி என்று எவ்வாறு சொல்ல முடியும்? சிவபுராணம் என்பது முழுநூலுக்கும் பெயராகும் என்று சொல்லாமல், முன்னால் உள்ள ஒரு தனிப்பகுதியின் பெயர் என்று எப்படிச் சொல்லலாம்?

இன்னும் வளர்த்துவானேன்? திருமந்திரம் எழுதிய திருமூலரைப் போலவே, இராமாயணம் எழுதிய கம்பரும் பெரிய புர்ாணம் இயற்றிய

சேக்கிழாரும் பிறரும், நூலின் முற்பகுதியில் அவை யடக்கமும், நூலின் பெயரும், நூலைப் படிப்பதனாலாம் பயனும் கூறிப்போந்துள்ளனர். அவற்றை அவர்தம் நூற்களில் கண்டுகொள்ளலாம். இருப்பினும் இங்கே ஒன்று மட்டும் குறிப்பிடத்தக்கது:

கம்பர் தமது நூலுக்கு 'இராமாவதாரம்' என்றே பெயர் வைத்தார். இதனை அவர் பாடியுள்ள 'இராமா வதாரப் பேர்த் தொடை நிரம்பிய தோம்அறு மாக்கதை'' என்ற பாடற் பகுதியால் உணரலாம். இவரைப் போலவே சேக்கிழாரும் தமது நூலுக்குத் 'திருத் தொண்டர் புராணம்' என்றே பெயர் வைத்தார். இதனை அவர் பாடிய ''இங்கிதம் நாமம் கூறின்... ... திருத்தொண்டர் புராணம் என்பாம்'' என்னும் பாடற் பகுதியால் அறியலாம்.

எனவே, கம்பரிட்ட 'இராமாவதாரம்' என்னும் பெயர் மறைய, இராமாயணம் என்ற பெயரே பின்னர் நிலைத்துவிட்டதைப் போல, சேக்கிழார் இட்ட 'திருத்தொண்டர் புராணம்' என்னும் பெயர் மறைய, 'பெரிய புராணம்' என்னும் பெயரே பின்னர் நிலைத்துவிட்டதைப் போல, மாணிக்கவாசகர் இட்ட 'சிவபுராணம்' என்னும் பெயர் மறைந்து போக, பின்னர் திருவாசகம் என்னும் பெயரே ஆணிவேர் விட்டுப் பதிந்து நிலைத்துவிட்டது.

ஆனால் இங்கே இரக்கத்திற்கு (பரிதாபத்திற்கு) உரிய செய்தி ஒன்று உள்ளது. அஃது என்ன? கம்ப ராமாயணத்திற்குக் கம்பர் இட்ட பெயர் 'இராமாவதாரம்' என்பதும், பெரிய புராணத்திற்குச் சேக்கிழார் இட்ட

பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பதும் அறியப் பட்டாவது இருந்தன; ஆனால், திருவாசகத்திற்கு மாணிக்கவாசகர் இட்ட பெயர் சிவபுராணம் என்பது இதுநாள் வரை எவரானும் அறியப்படாதிருந்ததுதான் அந்த இரங்கத்தக்க நிகழ்ச்சியாகும்.

எனது ஆராய்ச்சி குறித்துக் கருத்து வேறுபாடு கொள்பவர் என்னென்ன மறுப்புகள் கூறக்கூடும் என யானே கற்பனை செய்து, அம் மறுப்புகளுக்கு மறுப்பு கூறத் தொடங்குகிறேன்:

*மறுப்பு-1:-* புராணம் என்பது, பழம் பெருமைகளை - பழைய வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறும் நூலாயிற்றே! திருவாசகத்தில் அப்படி என்ன உள்ளது? மிகச் சிறிய ஒரு நூல் புராணம் ஆகுமா? புராணத்தின் தகுதிகள் அதற்குண்டா?

*மறுப்புக்கு மறுப்பு:-* ஐம்பதுபகுதிகள் கொண்ட திருவாசகம் என்னும் முழுநூலும் புராணம் ஆக முடியாத போது, முற்பகுதியில் முன்னுரைபோல் உள்ள ஒரு பகுதி மட்டும் 'சிவபுராணம்' என்னும் பெயருக்கு ஏற்றதாக முடியுமா?

*மறுப்பு-2:-* திருவாசகத்தின் முதற்பகுதி முன்னுரையாயின், நூல் முழுதும் திட்டமிட்டு ஒருசேர எழுதப்பட்டிருக்க வேண்டுமே. அப்படி எழுதியதாகத் தெரியவில்லையே. திருவாசகத்தின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு நேரத்தில் வெவ்வேறு ஊரில் எழுதப்பட்டதாகத் தெரிகிறதே!

மறுப்புக்கு மறுப்பு:- மணிவாசகர் தாம் பயணம் செய்த ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு பதிகம் எழுதியதாக ஒவ்வொரு பகுதியின் முன்பும் ஊர்ப் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதை அப்படியே ஏற்றுக் கொள்வதற்கில்லை. அவ்வூர்ப் பெயர்கள் மணி வாசகரால் குறிப்பிடப் பட்டவையல்ல. அவ் வேலை பிற்காலத்தவரின் கைவண்ணமே. இந்த இந்தப் பகுதி இந்த இந்த ஊரில் பாடப்பட்டது என்பதிலும் அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை உள்ளது. காட்டாகத் திருவெம்பாவையை எடுத்துக்கொள்வோம். இது அருளிச் செய்யப்பட்ட இடம் திருவண்ணாமலை என்று கடவுள் மாமுனிவர் தம் திருவாதவூரர் புராணத்திலும், திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தம் திருப்பெருந்துறைப் புராணத்திலும் கூறியுள்ளனர். ஆனால் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரோ தில்லையில் அருளிச் செய்யப்பட்டதாகக் கூறியுள்ளார். பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவரோ, திருவெம் பாவை திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப் பட்டதாகத் தம் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் தெரிவித்துள்ளார். அப்படியே மணிவாசகர் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு ஊரில் எழுதியாதாக இருப்பினும், இறுதியில் ஒருமுறை எல்லாப் பகுதிகளையும் தாமே தொகுத்தார் என வரலாறு கூறுகிறது. அதாவது தில்லையில் இறைவனே மனித உருவில் வந்து, திருவாசகம் முழுவதையும் மணி வாசகரைச் சொல்லச் செய்து, தம் கையாலே எழுதியதாகச் சொல்லப்படுகிறது. (இறைவன் எழுதிய இந்த ஓலைச்சுவடி தங்கள் மடத்தில் இப்பொழுதும்

இருப்பதாக, புதுச்சேரி அம்பலத்தாடையர் மடத்தினர் சொல்லிக்கொண்டிருக்கின்றனர்.) இறைவன் எழுதி-னாரோ அல்லது ஒரு சிறந்த சிவனடியார்தான் எழுதினாரோ! எப்படியோ ஒருமுறை மாணிக்கவாசகரின் நேர்ப்பார்வையில் ஒரே நேரத்தில் ஒருசேரத் திருவாசகம் முழுமைப்படுத்தப்பட்டிருக்கிறது என்ற முடிவுக்குத் துணிந்து வரலாம்.

எனவே, ஒரே நேரத்தில் நூலைத் தொகுத்து முழுமைப்படுத்திக் கண்ட மணிவாசகர், பாயிரம் எனப் படும் முன்னுரையை நூலுக்குமுன் அமைத்திருப்பதில் புதுமையோ - வியப்போ இல்லையே. மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து, ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் பாடல்கள் எழுதியதாகக் கதை பேசப்படும் திருமூலரின் திருமந்திரத்திற்கே பாயிரம் உள்ளதே! அங்ஙனமிருக்க, திருவாசகத்திற்கும் ஏன் பாயிரம் இருந்திருக்க முடியாது?

மறுப்பு-3:- திருவாசகத்தில் உள்ள ஐம்பத்தொரு தலைப்புகளின் கீழும் தலைப்பு விளக்கம் எழுதப் பட்டுள்ளது. காட்டாக இரண்டு மூன்று பார்ப்போம்:- 'சிவபுராணம்' என்னும் முதல் தலைப்பின் கீழ, 'சிவனது அநாதி முறைமையான பழமை' என்ற விளக்கம் உள்ளது. 'கீர்த்தித் திருவகவல்' என்னும் அடுத்த தலைப்பின் கீழ், சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை' என்ற விளக்கம் இருக்கிறது. 'திருவண்டப் பகுதி' என்னும் அடுத்த தலைப்பின்கீழ், 'சிவனது தூல சூக்குமத்தை வியந்து' என்னும் விளக்கம் காணப் படுகிறது. இப்படியே ஒவ்வொரு தலைப்புக்கும்

ஒவ்வொரு விளக்கம் உள்ளதால், முதலில் காணப்படும் 'சிவபுராணம்' என்னும் தலைப்பு முதல் பகுதிக்கு மட்டுமே உரியதாகும்; அது நூல் முழுவதற்கும் பெயராக இருக்க முடியாது.

மறுப்புக்கு மறுப்பு:- சிவபுராணம் என்னும் தலைப்பின்கீழ், 'சிவனது அநாதி முறைமையான பழமை' என்று எழுதப்பட்டிருப்பது மாணிக்கவாசகரின் கைச்சரக்கு அன்று. அப்படியொன்றும் அந்த முதற் பகுதியில் சிவனது அநாதி முறைமையான பழமை பேசப்படவில்லையே. முதற் பகுதியினும் பின்னுள்ள சில பிற பகுதிகளில்தான் சிவனது அநாதி முறைமையான பழமை பேசப் பட்டுள்ளது. எனவே, ஒவ்வொரு தலைப்பின்கீழும் உள்ள விளக்கம், பிற்காலத்தவரால் எழுதிச் சேர்க்கப் பட்டதாகவே இருக்கவேண்டும். திருக் குறளில் உள்ள ஒவ்வொரு தலைப்புக்கும் திருவள்ளுவர் விளக்கம் எழுத வில்லையே. இப்போதுள்ள விளக்கங்கள் யாவும் பரி மேலழகர் முதலிய உரையாசிரியர்கள் எழுதிச் சேர்த்தவை யன்றோ? திருவாசகத் தலைப்பு விளக்கங்களும் அன்னவே. இன்னும் கேட்டால், சிவபுராணம் என்னும் முதல் தலைப்புக்கு, சில ஓலைச் சுவடிகளில் விளக்கமே இல்லை. இதற்குப் பொருள் என்ன? சிவபுராணம் என்பது, மற்ற உள் தலைப்புகளைப் போன்றதன்று; நூல் முழுமைக்கும் உரிய பொதுப் பெயராகும் - என்பதே இதற்குப் பொருள் அன்றோ?

மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரண்டின் பழைய ஓலைச்சுவடிகள் எங்கள் வீட்டில் உள்ளன. அவை எங்கள்

பாட்டன் பூட்டன் காலத்தவை (கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் ஒருவர் ஒருமுறை எங்கள் இல்லம் போந்து இவ்வோலைச் சுவடிகளை ஒப்புநோக்கி ஆராய்ந்து சென்றுள்ளார்.) இந்தப் பழைய திருவாசக ஓலைச் சுவடியில், சிவபுராணம் என்னும் தலைப்பின்கீழ் ஒரு விளக்கமும் இல்லை. மற்ற தலைப்புகளுக்கு மட்டுமே விள்க்கம் காணக் கிடக்கிறது. எனவே, மற்ற தலைப்புகளினும் சிவபுராணம் என்னும் தலைப்பு வேறு பட்டதென்பதும், அது முழு நூலின் பெயரென்பதும், நுனித்துணரப்படலாம். ஆனால், பாயிரத்தையும் ஒரு பகுதியாகக் கருதி, அதன்மேல் சிவபுராணம் என்னும் த்லைப்பை வைத்து ஆணியடித்துவிட்ட பிற்காலத்தவர் ஒருவர், 'சிவனது அநாதி முறைமையான பழமை' என்னும் விளக்கத்தைச் சேர்த்திருக்க வேண்டும். மற்ற தலைப்புகளுக்கு விளக்கம் இருக்கும்போது, சிவ புராணம் என்னும் தலைப்புக்கு மட்டும் விளக்கம் இல்லாதிருப்பதை அவரால் பொறுக்க முடியாதல்லவா?

மறுப்பு-4:- திருவாசகத்தின் சிவபுராணம் என்னும் தலைப்பிட்ட முதல் பகுதிக்கும் முன்னால், 'நூற் சிறப்பு' என்னும் தலைப்பில்,

> ''தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
> அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
> மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
> திருவா சகம் என்னுந் தேன்.''

என்னும் செய்யுள் பல சுவடிகளிலும் காணக் கிடக்-கின்றது. இச் செய்யுளில் திருவாசகம் என்றுதானே குறிக்கப்பட்டுள்ளது?

மறுப்புக்கு மறுப்பு:- இச் செய்யுள் மாணிக்க வாசகர் எழுதியதன்று என்பதை 'வாதவூர் எங்கோன்' எனப் படர்க்கையில் கூறியிருப்பதிலிருந்தே உணரலாம். பிற்காலத்தவர் ஒருவர், நூலின் பெருமைகூறு முகத்தான் இப்பாடலைப் புனைந்து சேர்த்துள்ளார். அல்லது, தலைப்புகளுக்கு விளக்கம் எழுதியவரின் கை வேலையாகவும் இஃது இருக்கலாம். எங்கள் ஓலைச் சுவடியிலோ, நூற் சிறப்பாக, இச் செய்யுளோடு இன்னும் இரண்டு செய்யுட்கள் காணப்படுகின்றன. இவை யெல்லாம் பிற்சேர்க்கைகளே. முன்பெல்லாம், நூலுக்கு உரை எழுதுபவர், ஓலைச் சுவடியைப் பெயர்த்து வேறு படி எடுப்பவர், அச்சேற்றுபவர் முதலியோரெல்லாம் நூலின் சிறப்பைப் பற்றிச் சில பாடல்கள் பாடி நூலுக்கு முன்னால் சேர்ப்பது வழக்கம் என்பதைப் பழஞ்சுவடி யாராய்ச்சியாளர் உணர்வர்.

எனவே, மாணிக்கவாசகரால் அருளிச் செய்யப் பட்டு, திருவாசகம் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் நூலுக்கு, ஆசிரியரால் இடப்பட்ட இயற்பெயர் 'சிவபுராணம்' என்பதாகும் - என்பது இனிது விளங்கும். வாதவூரர் என்னும் இயற்பெயர் மாற, மாணிக்கவாசகர் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப் படும் ஆசிரியர் இயற்றிய சிவபுராணமும் திருவாசகம் என்னும் சிறப்புப் பெயர் பெற்றதில் வியப்பொன்றும் இல்லையே! மேலும், ஒருவர் தாம் எழுதிய வாசகத்திற்குத் தாமே திருவாசகம் என்னும் சிறப்புப் பெயர் சூட்டியிருக்க முடியாதன்றோ?

★

# 3. மொழியியல்

## 11. இலக்கணம் இன்றியமையாததா?

பெரும்பாலோர் தமிழைப் பிழையாகவே எழுதுகின்றனர். கடிதம், விளம்பரத்தாள், பெயர்ப் பலகை, சில வெளியீடுகள் முதலியவற்றில் பிழைகள் மலிந்திருக்கலாம். இதற்குக் காரணம் இலக்கண அறிவு இன்மையேயாகும். 'இலக்கணவிதி தெரியாமற் போனாலென்ன? பிழையாக எழுதினால்தான் என்ன? ஏறக்குறைய கருத்தைத் தெரிவித்தால் போதாதா?' என்ற வினாக்கள் எழுப்பப்படலாம்.

உலகில் எந்த மொழியினையும் பிழைபடப் பேசுவதாலும் எழுதுவதாலும் உண்டாகும் கேடு (நஷ்டம்) சொல்லுந்தரத்தன்று. எடுத்துக்காட்டாக நம் தென்னிந்திய மொழிகளையே எடுத்துக்கொள்வோம்:

சிலவாயிரம் ஆண்டுகட்கு முன் தென்னிந்தியாவில் ஏதோ ஒரு மொழியே பேசப்பட்டு வந்தது. ஒரே மொழியைப் பேசிய மக்களே, ஒரு மூலைக்கு ஒரு மூலை அம்மொழியினைப் பலவிதமாக இழுத்தும் விழுங்கியும், நீட்டியும் குறுக்கியும், சேர்த்தும் குறைத்தும், மாற்றியும் திருத்தியும் பேசி வந்தனர். இதனால், ஒரே மொழி பலவகை மாறுபாடு அடைய இடமுண்டல்லவா?

அது மட்டுமன்று; ஆங்காங்கு வந்து குடியேறிக் கூடி வாழ்ந்த பிற மொழியாளர்களின் வீதத்திற்கு ஏற்ப, கூடுதல் குறைச்சலாக, மூலைக்கு மூலை பிற மொழிக் கலப்பு ஏற்பட்டதாலும், ஒரே மொழி பல மாறுபாடு அடைய நேரிட்டது.

அது மட்டுமன்று; ஆங்காங்கே படையெடுத்து வந்து வென்று அடக்கியாண்ட பிறமொழி யரசர்களின் வீதத்திற்கு ஏற்பவும், அவர்தம் ஆட்சியாண்டுகளின் அளவிற்கு ஏற்பவும் கூடுதல் குறைச்சலாக, ஒரு மூலைக்கு ஒரு மூலை, பிறமொழிக் கலப்பு ஏற் பட்டதாலும், ஒரே மொழி பல்வேறு மாறுபாடு அடைய நேர்ந்தது.

இங்ஙனம் நாளடைவில், ஒரு மொழியினர்க்குள்ளேயே, இம்மூலையில் வாழ்ந்தவர் பேசியது ஒருவிதமாகவும், அம்மூலையில் வாழ்ந்தவர் பேசியது மற்றொருவிதமாகவும் இருந்ததால், இது ஒரு மொழி போலவும், அது வேறொரு மொழி போலவும் தோன்ற இடமுண்டாயிற்று.

இந்நிலையில், சூழ்நிலையின் காரணமாக, அவ்வொரு மொழி மக்களுக்குள்ளேயே மேலும் பல பிரிவினைகள் ஏற்பட்டு விட, அவ்வவர் பேசிய பேச்சுக்கள், வெவ்வேறு பெயர்களுடன், வெவ்வேறு மொழிகளாகப் பிரிந்துவிட்டன.

இவ்விதம் பிரிந்தவைகளே தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் என்னும் நான்கு மொழிகளுமாகும். இவற்றுள் ஒவ்வொன்றும் வடமொழி (சமஸ்கிருதம்) கலப்பின் வீதத்தால் மாறுபடும். இந்நான்கனுள், மிகக்

குறைந்த அளவு கலப்புடையது தமிழ்தான். கலக்காமலேயே, தமிழைப் பேசவும் எழுதவும் வேண்டிய சொற்கள் தமிழிலேயே உள்ளன. மற்றைய மூன்று மொழிகளும், தம்மிடம் உள்ள வடமொழிச் சொற்களை நீக்கிக் கொள்ளுமாயின், மீண்டும் தமிழோடு ஒன்றுபட்ட மொழிகளாகத் தோன்றும். இக்கருத்தை மெய்ப்பிப்பதற்காக நான்கிலும் ஒத்துள்ள சில சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஊன்றி நோக்கின் உண்மை புலனாகும்.

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் | மலையாளம் |
|---|---|---|---|
| அண்ணன் | அன்ன | அண்ணா | சேட்டன் |
| தம்பி | தம்புடு | தம்ம | அனுசன் |
| மகன் | குமாரடு | மகனு | ஆண்குட்டி |
| மகள் | குமாரத்தி | மகளு | பெண்குட்டி |
| பாட்டன் | தாத | தாத | மூப்பன் |
| அக்காள் | அக்க | அக்க | சேட்டச்சி |
| மாமன் | மாம | மாவ | அம்மாவன் |
| எது | எதி | எது | எது |
| அது | அதி | அது | அது |
| இது | இதி | இது | இது |
| சிறிய | சின்ன | சிக்க | சிறிய |
| நெருப்பு | நிப்பு | பெங்கி | தீ |
| மழை | வானெ | மளெ | மழ |
| கொடு | ஈய் | கொடு | கொடு |
| இரவு | ராத்திரி | ராத்திரி | ராத்திரி |
| பகல் | பகலு | அகலு | பகல் |
| யார் | எவரு | யாரு | யாரானு |

| | | | |
|---|---|---|---|
| ஊர் | ஊரு | ஊரு | ஊரி |
| ஊருக்கு | ஊரிக்கி | ஊரிகே | ஊரிலே |
| சோறு | அன்ன | ஊட்ட | ஊணு |
| சேலை | சீரா | சேலை | முண்டு |
| கண் | கன்னு | கண்ணு | கண்ணு |
| மூக்கு | முக்கு | மூங்கி | மூக்கு |
| காது | செவ்வு | கிமி | செவி |
| வாய் | நோரு | பாயி | வாயி |
| தலை | தல | தலெ | தலை |
| பசு | ஆவு | அசுவு | பசு |
| எருது | எத்து | எத்து | காள |

மேற்கூறிய சான்றுகளால், இந்நான்கு மொழியினரும் ஒரு காலத்தில் ஒரே மொழியைப் பேசிவந்தனர் என்பது உறுதிப்படுமன்றோ? மற்றும், இப்போது மலையாளம் எனப்படும் பகுதி பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டின் மூவல்லரசுகளுள் ஒன்றான சேர நாடாகத் திகழ்ந்ததும் இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்விதம் இவர்கள் மொழியினால் பிரியாமல் ஓரினத்தவராயிருந்தால், தமிழர், தெலுங்கர், (ஆந்திரர்) கன்னடியர், மலையாளிகள் என்ற நால்வகைப் படாமலும், தனித்தனி 'மாநிலம்' (மாகாணம்) கேட்காமலும், ஒரு மொழிப் பெயரினராய் ஒரு மாநிலத்தினராகவே இன்று திகழலாமன்றோ? திகழவே, இவ்வட்டத்திய ஒரே மொழிமக்கள் பலகோடியினர் என்ற பெயரும் கிடைக்குமே! மொழி பிரிந்ததனாலன்றோ மக்கள் பிரிந்து சென்றனர்! இதனை ஊன்றி நோக்க வேண்டும்.

மொழி பிரிந்ததற்குப் பல காரணங்கள், மேலே கூறப்பட்டிருப்பினும், எல்லாவற்றினும் இன்றி யமையாததான மற்றொரு காரணமும் உண்டு. பண்டைய மக்கள் ஒரு குறிப்பிட்ட இலக்கண முறையைப் பின்பற்றாமைதான் அக்காரணமாகும்.

பேச்சு வழக்கில் பின்பற்ற முடியாது போயினும், எழுத்து வழக்கிலாவது ஒரேவிதமான இலக்கணத்தைப் பின்பற்றி ஒரே விதமாக எழுதி வந்திருப்பார்களேயானால், அப்பழக்கம், பேச்சையும் ஓரளவு கட்டுப்படுத்தி, மொழி பிரிந்து சிதையாமல் இருக்கச் செய்திருக்குமல்லவா?

உலகம் முழுவதும் பெரும்பாலும் ஒரே விதமான இலக்கணத்தைப் பின்பற்றி ஆங்கிலத்தை எழுதுவதாலேயே, சீனன் எழுதும் ஆங்கிலத்தை இந்தியனும், இந்தியன் எழுதும் ஆங்கிலத்தை ஐரோப்பியனும் புரிந்துகொள்ளும்படியாக அம் மொழி ஒத்துள்ளதன்றோ? ஐரோப்பியன் எழுதும் ஆங்கிலத்திற்கு 'இங்லீஷ்' என்றும் ஆசியாக்காரன் எழுதும் ஆங்கிலத்திற்கு 'கிங்லீஷ்' என்றும் பெயர் வேறுபாடு இல்லையே!

இம்முறையைப் பண்டுதொட்டு நம் தென்னிந்தியரும் பின்பற்றி வந்திருப்பாரேயாயின் நான்கு மொழியினராகவும் - இனத்தினராகவும் பிரிய வேண்டியது வந்திராதே!

''போனது போயிற்று, பிள்ளையாரே வாழி'' என்று ஏற்றப் பாட்டு பாடுவார்கள். அதுபோல்,

பிரிந்தவர் போக, தமிழர்களாகிய நாமாயினும் இன்னும் நமக்குள்ளேயே பற்பல மொழியினராகப் பிரிந்து விடாவண்ணம் தற்காத்துக்கொள்ள வேண்டியது நம் கடமையல்லவா? அதுதானே அறிவுடைமையாகும்!

இன்றைக்கு சென்னைத் தமிழன் பேசும் தமிழும், இலங்கைத் தமிழன் பேசும் தமிழும், மலேயாத் தமிழன் பேசும் பேச்சும் வேறுபட்டிருப்பதைப் பார்க்கக் காண்கிறோம். ஓரிடத்தார் பேசும் தமிழை மற்றோரிடத்தார் கேட்டுப் புரிந்துகொள்வது சில நேரத்தில் அரிதாயுள்ளது. ஆயினும், வெவ்வேறு இடங்களிலுள்ள இவர்கள் எழுதியுள்ள சில நூற்களைப் படித்துப் பார்ப்போமானால், பெரும்பாலும் நடையில் ஒத்துள்ளன; புரிந்துகொள்ளவும் முடிகிறது. காரணமென்ன? ஒரே வித இலக்கணத்தைப் பின்பற்றி எழுதியதுதானே! எல்லோரும் வெவ்வேறு விதமாகப் பேசுவது போலவே எழுதவும் தொடங்கிவிடின், புரியாமற்போகுமாதலின் ஒவ்வொருவடைய தமிழும் ஒவ்வொரு வேறு மொழியாக மாறிவிடக் கூடுமன்றோ?

ஆதலின், ''பேசுவது போலத்தான் எழுத வேண்டும், இலக்கணம் வேண்டா'' என்றெல்லாம் கூறுபவர்கள் இக் கருத்துக்களை நுணுகி யாராய வேண்டும்.

எடுத்துக்காட்டொன்று வருமாறு:- ஒரு பக்கத்தில் 'வாழ பழம்' என்கிறார்கள் மக்கள்; மற்றொரு பக்கத்தில் 'வால பலம்' என்கிறார்கள்; இன்னொரு பக்கத்தில் 'வாய பயம்' என்கின்றனர்; வேறொரு பக்கத்தில் 'வாச பசம்' என்கின்றனர். இப்படியே எல்லோரும் எல்லாச்

சொற்களையும் வேறு வேறுவிதமாக எழுதத் தொடங்கி விடின் நிலைமை என்னாவது! யார் புரிந்துகொள்வது? (மழை, தலை, எருது முதலிய சொற்கள், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாள என்னும் மொழிகளில் சிறுசிறு மாறுதலுடன் இருப்பதை, மேலுள்ள அட்டவணையில் காண்க) ஆகவே, 'வாழைப் பழம்' என இலக்கண விதிப்படி எல்லோரும் எழுதினால்தானே எல்லோரும் புரிந்துகொள்ளவும், மொழி சிதையாமலும் மக்கள் பிரியாமலும் இருக்கவும் முடியும்?

எனவே, மக்கள் வேற்றுமையின்றி ஒற்றுமையுடன் வாழப் பாடுபட்டுத் தொண்டாற்றும் அரும்பெருந் தலைவர்களைப் போல, இலக்கணமும் ஒரு வகையில் தொண்டாற்றும் ஆற்றலுடையது என்பது விளங்கும். எனவே மொழிக்கு இலக்கணம் எவ்வளவு இன்றியமையாதது என்பது இப்போது இனிது புலனாகுமே!

★

## 12. புதுவைத் தமிழ்

திருச்சிராப்பள்ளியை யடுத்த டால்மியாபுரம் திருவள்ளுவர் கழகத்தில் ஒருநாள் மாலை சொற்பொழிவாற்றிவிட்டு, அங்கிருந்து கோயமுத்தூர் செல்வதற்காக, அன்று நள்ளிரவில், டால்மியாபுரம் புகைவண்டி நிலையத்தில், திண்டுக்கல் நோக்கிச்செல்லும் புகை வண்டிக்காக நான் காத்துக்கொண்டிருந்தேன். அப்போது புகைவண்டி நிலையப் பொறுப்பாளர் (Station Master)

விளக்கு, கொடி முதலிய கருவிகளுடன் வண்டியை வரவேற்கத் தயாராக வந்துநின்றார். நான் அவரிடம், ''இந்த வண்டி எத்தனை மணிக்குத் திண்டுக்கல் போகும்? அங்கிருந்து கோயமுத்தூருக்கு உடனே வண்டி உண்டா?'' என்பதுபோல ஏதேதோ கேட்டுக் கொண்டிருந்தேன். அவரோடு பேசிக்கொண்டிருந்த சிறிது நேரத்திற்குள் இப்படியும் ஒரு கேள்வி போட்டேன். அதாவது ''நீங்கள் வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவரா?'' என்று கேட்டேன். ''இல்லை. திருச்சி... சென்னை'' என்று அவர் ஏதோ சொன்னார். நான் ஒத்துக்கொள்ளவில்லை. 'நீங்கள் திருச்சியிலோ சென்னையிலோ நீண்ட நாட்களாக இருந்தாலுங் கூட, உங்கள் பெற்றோர் குடும்பம் இப்போது வேறு மாவட்டத்தில் இருந்தாலுங்கூட, நீங்கள் பிறந்து வளர்ந்த இடம் வடார்க்காடு மாவட்டமாகத்தான் இருக்க வேண்டும்' என்று அடித்துப் பேசினேன் நான். 'உண்மைதான்' என்று இறுதியில அவர் ஒத்துக்கொண்டார். அந்த நள்ளிரவில் என்னை வழியனுப்ப வந்திருந்த டால்மியாபுரம் சிமன்ட் தொழிற்சாலைப் பொறியியல் வல்லுநரும் - திருவள்ளுவர் கழகத் தலைவருமான என் நண்பர் என்னை நோக்கி, 'அவர் வடார்க்காடு மாவட்டத்தார் தான் என்று எதைக் கொண்டு இவ்வாறு துணிந்து சொல்கிறீர்கள்?'' என்று கேட்டார். நண்பருக்குச் சொன்ன பதிலையே இங்கேயும் தருகிறேன்.

புகைவண்டி நிலையப் பொறுப்பாளர் பேசிக் கொண்டிருந்தபோது, 'வண்டி வரச்சொல்ல நாம்

முன்கூட்டியே தயாராயிருந்து இன்னது இன்னது செய்ய வேண்டும்' என்று என்னென்னவோ சொல்லிக் கொண்டிருந்தார். அவர் சொன்ன 'வரசொல்ல' என்னும் சொல்லைக்கொண்டு, அவர் வடார்க்காடு மாவட்டத்தார் எனத் துணிந்துகொண்டேன். மற்ற மாவட்டத்தார்கள் 'வரும்போது - போம்போது' என்றோ, அல்லது கொச்சையாக 'வரச்ச-போச்ச' என்றோ சொல்வதற்குப் பதிலாக, வடார்க்காடு மாவட்டத்தினர், 'வரசொல்ல - போசொல்ல' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். இன்னும் இந்த மாவட்டத்தினருள் சிற்சிலர், 'என்னாங்க - இல்லிங்க' என்பதற்குப் பதிலாக 'என்னாப்பா - இல்லப்பா' என்றும், 'பல்லு குச்சி' என்பதற்குப் பதிலாகப் 'பெல்லு குச்சி' என்றும், 'சாமி (கோயில் விக்ரகம்) வருகிறது' என்பதற்குப் பதிலாகச் 'சாமியார் வருகிறார்' என்றும் சொல்கின்றனர். இப்படி சில சொல்லொலிக் குறிகளைக் கொண்டு வடார்க்காடு மாவட்டத்தினரை அடையாளங் கண்டுகொள்ளலாம்.

ஒருமுறை சென்னையிலுள்ள பேர்பெற்ற எலும்புருக்கிநோய் மருத்துவ வல்லுநர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்போது, 'நீங்கள் திருநெல்வேலிக் காரரா?' என்று நான் அவரைக் கேட்டேன். 'இல்லை, சென்னைதான்' என்ற பதில் வந்தது. 'இப்போது சென்னையாக இருக்கலாம்; ஆனால் உங்கள் பழங் குடியிருப்பு திருநெல்வேலிப் பக்கமாகத்தான் இருக்க வேண்டும்' என்றேன் நான். அவரும் ஒத்துக்கொண்டார். ஒலி வேறுபாட்டைக் கொண்டு ஓரிரு நிமிடத்தில் திருநெல்வேலி மாவட்டத்தினரை அடையாளம்

கண்டுகொள்ளலாம் என்றாலும், அந்த மருத்துவ அறிஞர் நீண்ட நாட்களாகச் சென்னையில் தங்கிவிட்டதால் அவ்வளவு எளிதில் கண்டுபிடிக்க முடியவில்லை. இருப்பினும், உரையாடலின் ஊடே ஓடிவந்த ஒரு சொல் அவரது மாவட்டத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டது; அவர் 'பொறவு' என்னும் ஒரு சொல்லை இடையே கையாண்டார். பிறகு - அப்புறம் என்னும் பொருளில் 'பொறவு' என்னும் சொல்லை நெல்லை மாவட்டத்தினர் சொல்கின்றனர். இதே பொருளில் 'அப்பால' என்னும் சொல்லைச் சென்னைப் பக்கத்தில் உள்ளவர் சிலர் சொல்லுகின்றனர். 'பொறவென்ன' (பிறகு என்ன) என்னும் சொல்லாட்சியை நெல்லை வட்டத்தினரிடம் மிகுதியும் காணலாம். என்னாங்க - என்னையா என்பது போன்ற பொருளில் 'என்னவே' என்னும் சொல் லாட்சியையும் இவர்களிடம் காணலாம்.

'இந்த போடு போடுகிறான்' - 'நான் சொல்லிப் போட்டேன்' - 'இத்தசோடு பெரிசு' முதலான ஆட்சிகள் கொங்கு நாட்டாருடையவை. மெதுவாக என்னும் பொருளில் 'பைய-பைய' என்பதும் வாலப்பலமும் கோலிக்குஞ்சியும் பாண்டிய நாட்டாரது ஆட்சி. வந்துகொண்டு -போய்க்கொண்டு என்னும் பொருளில் 'வந்துகினு - போய்க்கினு' என்பது தென்னார்க்காடு மாவட்டத்து ஆட்சி. இதே பொருளில் 'வந்துகிட்டு - போய்க்கிட்டு' என்பது சோழ நாட்டாருடையது. இடம் என்னும் பொருளில் 'தாவு' என்று சொல்வது தொண்டை நாட்டு ஆட்சி. வழி என்னும் பொருளில் 'தடம்' என்று சொல்வது பாண்டியநாட்டு ஆட்சி. நமது தமிழ் - நமது

நாடு என்னும் பொருளில், 'எங்கள் தமிழ் - எங்கள் நாடு' எனப் பேசுவது யாழ்ப்பாணத்தார் (சிலோன்) வழக்காறு. சென்னைத் தமிழோ நாடறிந்த ஒன்று. கீது, இஸ்துகினு, பேஜாரு முதலியன சென்னைத் தமிழின் சிறப்பு வளமாம்?!

இந்த வட்டார வழக்காறுகளை, நான் வெளியூர்க் கல்லூரிகளில் படித்த காலத்தும் ஆசிரியனாயிருந்த காலத்தும் பல மாவட்டத்து மாணவர்களோடு பழகியதால் அறிய முடிந்தது. இன்னோ ரன்னவை, அவ்வம் மாவட்டத்துப் பெரும்பான்மை மக்களின் வழக்காறுகளாகும். வெளி மாவட்டக்காரர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, ''நீங்கள் இன்ன ஊர்க்காரரா?' என்று கேட்கும் பழக்கம் - அது நல்லதோ கெட்டதோ - எப்போதுமே எனக்குண்டு. சிற்சில நேரங்களில், ஒருவரது நடையுடை தோற்றத்தைக் கொண்டும், அவர் இன்ன இடத்தார் என்று சொல்லிவிட முடியும். சாதிப்பட்டத்துடன் கூடிய பெயரைக் கொண்டே கூட சிலர்து மாவட்டத்தை அறிந்து கொள்ளவும் முடியும்.

பிறருடைய மாவட்டங்களை வினவும் வேட்டைக் காரனாகிய யான், ஒருமுறை ஒருவரிடம் அகப்பட்டுக் கொண்டேன். தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆடுதுறை புகைவண்டி நிலையத்திற்கு அருகில், அணைக்கரை செல்லும் (பஸ்) வண்டிக்காக ஒருநாள் நான் காத்து நின்றேன். வண்டிவர நேரமாகவே பக்கத்திலிருந்த ஒரு கடைக்காரரிடம் போந்து, எனது கைப்பையைத் தந்து, முகம் தூய்மை செய்து வரும்வரையும் அதனைப் பார்த்துக்

கொள்ளும்படி ஒப்படைத்துவிட்டுச் சென்றேன். நான் திரும்பி வந்து பையைப் பெற்றுக்கொண்டபோது, கடைக்காரர் என்னை நோக்கி, 'நீங்கள் புதுச்சேரிக்காரரா?' என்று கேட்டார். அவரது வினா என்னை வியப்பில் ஆழ்த்தியது. புதுச்சேரிக்காரன் என்பதற்குரிய அறிகுறிகள் நம்மேல் என்ன இருக்கின்றன என்று என்னையே ஒருமுறை சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டேன். பின் 'எதைக்கொண்டு நீங்கள் அப்படிக் கேட்டீர்கள்?' என்று நான் அவரைக் கேட்டேன். 'தண்ணீர் கானுக்குச் சென்று முகங் கழுவி வருகிறேன்' என்று சொன்னீர்களே அதைக் கொண்டு கண்டுபிடித்தேன்' என்று சொன்னார் அவர்.

மற்ற ஊர்களில், 'தண்ணீர்க் குழாய்' என்று தமிழிலோ, அல்லது 'பைப்' (Pipe) என்றும் 'டேப்' (Tap) என்றும் ஆங்கிலத்திலோ சொல்லுவதை, புதுச்சேரியினர் 'தண்ணீர் கான்' என்று சொல்லுவார்கள். இந்தச் சொல்லைக்கொண்டுதான், 'நீங்கள் புதுச்சேரிக்காரரா?' என்ற ஆடுதுறைக்காரர் என்னை மடக்கிவிட்டார். 'உங்களுக்கு எப்படி இது தெரியும்?' என்று நான் அவரைக் கேட்டேன். 'புதுச்சேரிக்குச் சிலமுறை வந்திருக்கிறேன் - அங்கே இந்தச் சொல்லைக் கேட்டிருக்கிறேன்' என்றார் அவர்.

'கான்' என்பது பிரஞ்சு மொழியில் இல்லை. 'Can' (ஒருவகைப் பாத்திரம்), "Canal" (கால்வாய்) என்னும் ஆங்கிலச் சொற்களிலிருந்து வந்ததாகவும் சொல்வதற்கில்லை. இது தமிழ்ச் சொல்லே. காடு, மணம் முதலிய பொருள்களுடைய 'கான்' என்னும் தமிழ்ச் சொல்லுக்கு, சலதாரை, வாய்க்கால் என்னும் பொருளும்

உண்மையை, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியில் காணலாம். சலதாரை, வாய்க்கால் என்பன போல, தண்ணீர்க் குழாயும் நீர்வரும் பொருள் தானே! இச்சொல் புதுவை வழக்காறாகும்.

புதுச்சேரியைப் போலவே மற்றொரு முன்னாள் பிரஞ்சிந்தியப் பகுதியாகிய காரைக்காலில், தண்ணீர்க் குழாயை, பீலி என்று அழைக்கின்றனர். இதன் அகராதிப் பொருள் நீர்த்தொட்டி என்பதாகும்.

புதுச்சேரி தென்னார்க்காடு மாவட்டத்திற்குள் அமைந்திருப்பினும், அது சில காலம் பிரெஞ்சு ஆட்சியின் கீழே தனித்திருந்ததாலும், இப்போது இந்திய ஆட்சியின் கீழே புதுவை மாநிலம் (State) என்னும் தனி மாநிலத்தின் தலைநகரமாயிருப்பதாலும் ஒருவகைத் தனிச் சிறப்புடையதாகும். எனவே, புதுச்சேரி வட்டாரத்தில் வழங்கும் சில சொல்லாட்சி வழக்காறுகளை ஈண்டு காண்போம்.

புதுவைத் தமிழாக - புதுச்சேரி வழக்காறுகளை ஈண்டு கொடுக்கப்படுவனவற்றை, புதுச்சேரியினரை விட, பிற ஊர்க்காரராலேயே தம்மூர் வழக்காற்றினின்றும் பகுத்துணர முடியும் - பிரித்துணர வியலும். இளமைக் காலமெல்லாம் கடலூரிலும் பிற ஊர்களிலும் வளர்ந்து வாழ்ந்து, இடைக்காலத்தில் புதுவையின் புதுமையான சில வழக்காறுகளைக் கேட்டு வியந்தேன். இதனை இங்கே ஏன் எழுதுகிறேன் என்றால் புதுவைக்குத் தெற்கே பதினைந்தாவது கல் தொலைவிலுள்ள கடலூரில் வளர்ந்த நான், கடலூர் வழக்காற்றினின்றும் புதுவை வழக்காற்றில் புதுமை கண்டதனாலேயாம். அண்மையில் உள்ள

கடலூர்க்கே புதுமை என்றால், பிற ஊர்கட்கும் புதுமை தானே! என் பட்டறிவுக்குப் புதுமையாகத் தெரிகிறது மற்றவர்க்கு எப்படியோ!

புதுவை மக்கள் ஒருவரையொருவர் காணும் போது நலம் விசாரித்துக்கொள்வதில் வற்றாத குளிர்ச்சி காணப்படும். 'சௌக்கியமா யிருக்கிறீர்களா?' என்று நலம் விசாரிப்பது பழக்கம் என்றாலும், புதுவையில் அடிக்கடி பார்த்துக்கொள்பவர்கள்கூட, பார்க்கும் போதெல்லாம் 'சௌக்கியமா யிருக்கிறீர்களா?' என்று வாய் குளிரக் கேட்பார்கள். அடிக்கடி விசாரிக்கிறார்களே என்று நான் வியந்ததுண்டு.

மற்ற ஊர்களில் படித்தவர்கள் 'குட் மார்னிங் சார்' (Good Morning Sir), 'குட் ஈவ்னிங் சார்' (Good Evening Sir) சொல்வது போல, இங்கே 'போன் ழூர் முசியே' (Bon Jour Monsieur), 'போன் சுவார் முசியே' (Bon Soir Monsieur) என்று சொல்லி, காலை வணக்கமும் மாலை வணக்கமும் செய்வார்கள். அங்கே எடுத்ததற்கெல்லாம் 'சார் சார்' (Sir) என்று சொல்வதைப் போல, இங்கே 'முசியே முசியே' என்பார்கள். அங்கே 'மிஸ்டர் ஆறுமுகம்' என்பதைப் போல, அங்கே 'முசியே ஆறுமுகம்' என்றழைப்பர். நன்றி சொல்லும் பொருளில் அங்கே 'தாங்சு' (Thanks) என்பதுபோல, இங்கே 'மெர்சி' (Mercie) என்பார்கள். இந்த பிரெஞ்சு வழக்காறுகள் அன்றாட வாழ்க்கையில் அடிக்கடி கை யாளப்படுதவதால் இங்கே எடுத்துக் காட்டப்பட்டன. இனித் தமிழ் வழக்காறுகளையே நோக்குவோம்:

உடல் நலம் இல்லாதிருப்பவரை, உடம்பு சரியில்லாமல் இருக்கிறார் - அல்லது காயலாவா இருக்கிறார் என்றெல்லாம் கடலூர்ப் பக்கத்தினர் சொல்லுவர் - ஆனால் இங்கோ, 'நோவா இருக்கிறார்' என்று சொல்லும் வழக்கு மிகவும் காணப்படுகிறது.

ஏதாவது ஒன்றைத் தொடங்கியாயிற்று என்று குறிப்பிடுவதற்காக, ஆரம்பிச்சாச்சு அல்லது தொடங்கி யாச்சு என்று சொல்வதற்குப் பதிலாக, 'தோக்கியாச்சு' (துவக்கியாயிற்று) என்னும் வழக்கு இங்கே பெரு வரவிற்று.

இங்கே எளிய மக்கள், வம்புக்கிழுத்தல் - சண்டை போடுதல் என்னும் பொருளில் 'சண்டை வாங்குதல்' என்னும் தொடரைக் கையாள்கின்றனர். 'என்னிடம் சண்டை வாங்காதே' - 'ஏன் என்னிடம் சண்டை வாங்குகிறாய்' என்றெல்லாம் எளிய மக்கள் அடிக்கடி சொல்வதைக் கேட்கலாம்.

'சோப்' (Soap) என்பதனை, 'சவுக்காரம்' என்னும் சொல்லால் குறிப்பிடும் பழக்கம் சிலரிடம் உண்டு.

'இடம்' என்னும் சொல்லை 'வெடம்' என்று கொச்சையாக ஒலித்துப் பேசும் பழக்கமும் சிலரிடம் உண்டு.

'மேசையின் கீழே இருக்கிறது' என்பதற்குப் பதிலாக 'மேசையின்தாழ இருக்கிறது' என்கின்றனர் சிலர்.

'அவனிடம் பேசிக் கொண்டிருந்தேன்' - 'அவனிடம் திட்டு வாங்கினான்' என்பவற்றுக்குப் பதிலாக, 'அவன் கையில் பேசிக்கொண்டிருந்தேன்' -

'அவன் கையில் திட்டு வாங்கினான்' என்று சிறுவர்களும் பேசிகொள்கின்றனர்.

பரிட்சையில் தேறவில்லை - மாறவில்லை - பெயிலாய் விட்டது என்றெல்லாம் சொல்வதற்குப் பதிலாக, 'பரிட்சையில் அடித்துவிட்டார்கள்' என்று சொல்லும் வழக்கம் ஈங்குண்டு.

சில ஆங்கில வினைச் சொற்களைத் தமிழ்ப் படுத்திப் பேசும்போது 'பண்ணுதல்' என்னும் சொல்லையும் சேர்த்துக்கொள்வது வழக்கம். எடுத்துக் காட்டாக, பாஸ் பண்ணுதல், வெய்ட் பண்ணுதல் போன்றவற்றை நோக்குக. ஆனால் இங்கே , 'இடுதல்' என்னும் சொல்லைச் சேர்த்துப் பேசும் ஒருவகை வழக்கம் உள்ளது. எடுத்துக்காட்டாக, பாஸ் பண்ணுதல் என்னும் பொருளில் 'பசேர் இடுதல்' (Passer = Pass) என்றும், ஓய்வுகொள்ளுதல் என்னும் பொருளில் 'ரெப்போசேர் இடுதல்' (Reposer = Rest) என்றும் சொல்வதைக் கேட்கலாம்.

பிரெஞ்சு மொழி படித்தவரை 'பாஷை படித்தவர்' என்றும், பிரெஞ்சுமொழியில் எழுதுதலை யில் பேசுதலையும் பாஷையில் எழுதுதல் பேசுதல் என்றும் குறிப்பிடும் வழக்கம் பரவலாக மக்களிடம் உள்ளது. மக்களது வழக்காற்றில், பாஷை என்றால் பிரெஞ்சு மொழி என்று பொருள் போலும்!

கடற்கரையைக் 'கடலோரம்' எனக் குறிப்பிடுவது இங்கே பெருவாரியான வழக்காகும். புறப்படுதல் என்பதற்குக் 'கிளம்புதல்' என்றும், அப்புறம் என்பதற்கு

'அப்பறமேல்பட்டு' என்றும் சொல்வதை இளைஞர்கள் இடையே மிகவும் காணலாம்.

புதுவையில் என் கவனத்தை ஈர்த்த மற்றொரு வழக்காற்றைக் குறிப்பிடாமல் விடுவதற்கில்லை. அதுதான் 'கண்டு பிடித்தல்' என்பது. இந்தச் சொல் எல்லாரும் அறிந்த ஒன்றேயாயினும், இங்கே ஒரு கோணத்தில் வழங்கப்படுகின்றது. இருவர் உரையாடிக் கொண்டிருக்கும்போது, சொல்வது தெரிகிறதா - புரிகிறதா என்னும் பொருளில், 'கண்டு பிடிச்சீங்களா' என்று கேட்பது வழக்கம். ஒருவர் சொல்வதோ அல்லது ஆசிரியர் பாடம் நடத்துவதோ அவனுக்குப் புரிய வில்லை - அவன் விளங்கிக் கொள்ளவில்லை என்னும் பொருளில் 'அவன் கண்டுபிடிக்கவில்லை' என்று சொல்வது ஈண்டு மிகவும் பழக்கப்பட்ட வழக்காறாகும்.

தண்டோரா அல்லது தமுக்கு அடித்து அறிவிப்புச் செய்வதை ஈண்டு கிறிச்சை கொட்டுதல் என்கின்றனர்.

செல்வராசு, ராஜாபாதர், மஞ்சினி முதலிய பெயர்கள் இங்கே மக்களுக்கு பரவலாக வைக்கப் பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்னொரு தனிச் சிறப்புடைய வழக்காற்றோடு இக் கட்டுரையை முடித்துக்கொள்ளலாம். 'நயா பைசா' வருவதற்கு முன், ரூபாய் - அணா - பைசா கணக்கு இந்தியா முழுவதும் இருந்ததனை எல்லாரும் அறிவர். ஆனால் புதுவையிலோ, ரூபாய் - பணம் - காசு கணக்குத்தான் பெரும்பாலோர் சொல்லுவர். 24 காசு கொண்டது ஒரு பணம்; 8 பணம் கொண்டது ஒரு ரூபாய். இதுவே பொதுமக்களின் கணக்காகும். புதுவையில்

ஓரணா அரைப்பணமாகும். ஒன்றரையணா முக்கால் பணமாகும். இரண்டணா ஒரு பணமாகும். மூன்றணா ஒன்றரை பணமாகும். பத்தணா ஐந்து பணமாகும். கால் ரூபாய், அரை ரூபாய், முக்கால் ரூபாய் என்பதனினும், இரண்டு பணம், நான்கு பணம், ஆறு பணம் என்னும் வழக்காறுதான் காதில் விழும். முக்காலணா, ஒன்றே காலணா, ஒன்றே முக்காலணா என்பவற்றிற்குப் பதிலாக, ஒன்பது காசு, பதினைந்து காசு, இருபத்தொரு காசு என்றும், மூன்றே காலணாவை ஒரு பணம் பதினைந்து காசு என்றும், மூன்றே முக்காலணாவை ஒரு பணம் இருபத்தொரு காசு என்றும் சொல்லும் வழக்கே ஒரு தனி அழகாகும்.

இதுவரையும் புதுவைத் தமிழ் வழக்காறுகளாகச் சில குறிப்பிடப்பட்டன. இது குறித்துக் கருத்து வேற்றுமையும் இருக்குமோ என்னவோ! ஒரு வட்டாரத்திலேயே ஒரு சில வழக்குகள் ஒரு பிரிவினரிடத்து இல்லையாயினும் வேறு பிரிவினரிடத்தில் இருக்கத் தான் செய்கின்றன. இந்த கண்கொண்டே 'புதுவைத் தமிழ்' என்னும் இக் கட்டுரையையும் காணவேண்டும். புதுவைத் தமிழ் என்னும் தலைப்பில், பல மாவட்டங்களின் தமிழ் வழக்காறுகளையும் ஓரளவு பார்த்துவிட்டோமே! (இக் கட்டுரைக் குறிப்புகள் துப்பறியும் துறையினர்க்கும் ஒரு வேளை உதவலாமோ?)

'புதுவைத் தமிழ்' என்னும் தலைப்புக்கு, வேறொரு கோணத்தில் நின்றும் பொருள் காணலாம். இந்த இருபதாம் நூற்றாண்டில், உலகில் - தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களும் இருக்கும் நாடுகளில்,

புதுவைத் தமிழ் அறியாதவர்கள் இருக்க முடியாது - புதுவைத் தமிழை ஒரு முறையாயினும் பாடாதவர்கள் இருக்க முடியாது. அதாவது, உலகத்திற்கு மாபெருந் தமிழிலக்கியங்களைப் பாடித் தந்த புரட்சிப் பாவேந்தர்களாகிய பாரதியாரும் பாரதிதாசனும் தங்கள் தமிழ்ப்படைப்புகளைப் படைத்த இடம் புதுவையே என்பது, நாடறிந்த - ஏன் - உலகறிந்த செய்தியன்றோ!

★

# 13. குடிசை

புதுச்சேரிக்குச் சில கல் தொலைவில் 'இடையன் சாவடி' என்று ஒரு சிற்றூர் உள்ளது. சில ஆண்டுகட்கு முன் அங்கிருந்து ஒரு பெரியார் என் இல்லத்துக்கு வந்து என்னைக் கண்டு உரையாடினார்; தம் குமாரியின் திருமணத்தில் சொற்பொழிவாற்ற வேண்டும் என்று கோரினார். யானும் இசைந்தேன். இசைவு கண்ட அவர் என்னை விட்டுப்பிரியும்போது, 'வருக' என்ற அழைப்போடு மட்டும் செல்லவில்லை; ''தாங்கள் வந்தால், காலையில் திருமணத்தை நடத்தி வைத்து விட்டு, உடனே புறப்பட்டுவிடக் கூடாது. ஏதோ என் இருப்பிடம் சிறு குடிசையாயிருப்பினும் நண்பகல் வரை தங்கியிருந்து விருந்தருந்தியே ஊர் திரும்பவேண்டும்'' என்ற அன்புக் கட்டளையும் விடுத்தார். ''குடிசையாயினும் மாடமாளிகை கூட கோபுரமாயினும் எல்லாம் ஒன்றுதான்'' என்று கூறி யானும் உடன்பட்டேன்.

மன்றல் நாள் வந்தது. மணவீட்டை நெருங்-கினேன் நான். மங்கல இன்னியங்கள் முழங்கின. ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப, வாழை, தோரணம் முதலிய மங்கலப் பொருட்களுடன் பொலிவுற்றுத் திகழ்ந்த வாயிலையடைந்தேன். அவ்வீட்டின் உச்சியை அண்ணாந்து பார்த்தேன். ஒன்றன் மேல் ஒன்றாய் இரண்டடுக்குக் கட்டிடம் நிமிர்ந்து நின்றது. அந்தக் காட்சியைக் கூர்ந்து நோக்கிய எனக்கு, அன்று அப் பெரியார் குறிப்பிட்ட குடிசை நினைவிற்கு வந்தது. அக் குடிசை வேறோரிடத்தில் இருக்கலாமென்றும் இம்மாடி வீடு திருமணத்திற்காகப் பெற்ற இரவல் வீடாயிருக்கலா மென்றும் எனக்குள் தீர்மானித்தேன். ஆயினும் அருகில் நின்ற ஒருவரையணுகி, 'இது யாருடைய வீடு' என்று கேட்டேன். உடனே பின் புறத்திலிருந்து, 'ஏன் ஏமாந்துவிட்டீர்களா?' என்ற குரல் எழுந்தது. திரும்பிப் பார்த்தேன். அவர்தாம் - அந்த வீட்டுக்காரர் - புதுவை வந்து என்னை அழைத்து வந்தவர். தம் மாடி வீட்டைக் 'குடிசை' என்று தன்னடக்கமாக என்னிடம் அன்று தெரிவித்திருக்கிறார் என்பது அப்போது எனக்கு வெட்ட வெளிச்சமாகப் புலப் பட்டது. அன்றைக்கே இதை யான் உணர்ந்து கொண்டிருக்கவுலாம். ஆனால் அவரது அடக்கமான தோற்றம் அவர் வீடு குடிசையாகத்தான் இருக்கும் என்பதை மெய்ப்பித்ததுபோல் தோன்றியது. மேலும், யான் இது போன்றெல்லாம் பேசிப் பழகிய தில்லை. பட்டறிவு (அனுபவம்) பெருகப் பெருகத் தானே உலகின் உண்மை யுருவத்தை உணர முடியும்?

திருமண நிகழ்ச்சியும் தொடங்கப்பெற்றது. மன்றல் வினைச் சொற்பொழிவை ஆரம்பபித்த யான்

ஆங்கு வெளியிட்ட பல கருத்துக்களுள் குடிசையைப் பற்றிக் கூறிய கருத்துக்களை மட்டும் இவண் தருகிறேன். இக் கட்டுரையின் நோக்கமும் இதுதானே!

''பெரியோர்களே! இவ் வீட்டுப் பெரியார், என்னை அழைக்கவந்த வன்று, தம் குடிசையில் தங்கி விருந்து அருந்திச் செல்லவேண்டு மென்று கோரினார். யான் இங்கு வந்து சேர்ந்ததும், 'குடிசை என்று கூறியதால் ஏமாந்துவிட்டீர்களா?' என்று என்னைக் கேலியும் செய்தார். உண்மையில் யான் ஏமாறவேயில்லை. ஏமாந்தவர் அவரே! எப்படி? குடிசை என்றதும், ஓலை வேய்ந்த கூரை வீட்டை நினைத்துக்கொண்டிருப்பேன் என்பது அவர் நினைப்பு. அதுதானில்லை. குடிசை என்றால் குடியிருக்கும் இடம் என்பது பொருள் என்பது என் நினைப்பு. எனவே, அவர் மாட மாளிகையில் இருப்பினும், அல்லது மண் கூரையிலிருப்பினும் அவரிருக்குமிடத்தைக் 'குடிசை' என்று கூறுவேன் யான். இதைப் பற்றிச் சிறிது சொல்லாராய்ச்சி செய்து பார்ப்போம்:

நம் பழந்தமிழ் முன்னோர்கள், மக்கள் குடி இருக்கும் இடத்தை 'குடிசை' 'குடில்' 'குடிசல்' முதலிய சொற்களால் குறிப்பிட்டு வந்தார்கள். பண்டைக் காலத்தில் முதல் முதல் மனிதன் அமைத்த வீடு, கால் (மரக்கிளை) அல்லது மண் சுவரின் மேல் தழை அல்லது ஓலை வேய்ந்த பரண் அல்லது கூரையேயாகும். இத்தகைய வீடுகளையே மேற்கூறிய சொற்களால் குறிப்பிட்டு வந்தார்கள். பொதுவில் பார்க்கப்போனால், குடியிருக்கும் காரணத்தினாலேயே குடிசை - குடில் - குடிசல் என்ற

பெயர்க்ள வீட்டிற்குக் கொடுக்கப்பட்டன என்பது விளங்கலாம். இம் மூன்று சொற்களையும் இவ் வுருவத்திலேயே தமிழகராதிகளும் தமிழ் நூற்களும் பெற்றிருக்கின்றன. இவ்வுருவத்தில் இச்சொற்களை எழுதி னாலும் - பேசினாலும், இலக்கணமாக எழுதுவதாகவே - பேசுவதாகவே கருதப்படும். ஆனால் உண்மையில் இவை இலக்கண முறை மாறாத சொற்கள் அல்ல. 'ஆமாம் போலிருக்கிறது' என்ற சொல்லை 'ஆமாம் பெலக்கு' என்ற பேசுவதுபோல் பேசப்படுகின்ற சொச்சைச் சொற்களே இவைகள். அங்ஙனமாயின் இவற்றின் சரியான உருவங்கள் யாவை என்பதை ஆராய்ந்து காணவேண்டியது நம் கடமையாகும்.

தமிழ் மொழியில், 'செய்' என்னும் சொல்லுக்கு நிலம் என்ற பொருளுண்டு. நன்செய் - புன்செய் என்னும் சொற்களை நோக்கினும் இவ்வுண்மை புலனாகும். 'இல்' என்னும் சொல்லுக்கு இருப்பிடம் என்ற பொருள் உண்டு. இல்லறம், இல்வாழ்க்கை, இல்வாழ்வான், இல்லம் என்ற சொற்களை நோக்குக. எனவே, இப் பொருளையொட்டியே நம் பழந்தமிழ்ப் பெரியோர்கள் குடியிருக்கும் நிலப்பகுதி என்ற பொருளில் 'குடிசெய்' (குடி + செய்) என்றும், குடியிருக்கும் இடப்பகுதி என்ற பொருளில் 'குடியில்' (குடி + இல்) என்றும் பெயர் வழங்கினார்கள். இவை நாளா வட்டத்தில், குடிசெய் - குடிசெய் - குடிசை - குடிசை என்றும், குடியில் - குடிசெய் - குடிசை - குடிச என்றும், குடியில் - குடியில் - குடில் - குடில் என்றும் குறைந்து மருவி விட்டன. 'செய்' என்பதை 'சை' என ஒலிக்கும் வழக்கம்: நன்செய் -

புன்செய் என்பவற்றை நஞ்சை புஞ்சை என ஒலிப்பதாலும் புலப்படுமன்றோ? அதுபோலவே, குடி செய் குடிசையாய் விட்டது போலும். குடி என்னும் சொல்லோடு செய், இல் இன்னும் இரு சொற்களையும் இணைத்து, குடியிருக்கும் நிலமாகிய இடம் என்னும் பொருளில் குடி செய் இல் - குடிசெய்யில் (குடி + செய் + இல்) என்று பெயர் வழங்கினார்கள். இது நாளடைவில் குடிசெய்யில் - குடிசயில் - குடிசயில் - குடிசல் - குடிசல் - என்று குறந்து மருவிவிட்டது. மருவி வரும் இத்தகைய சொற்களை தமிழிலக்கணத்தில் 'மரூஉ' என்பார்கள். கொச்சைச் சொற்களாகிய இச் சொற்களும் நாளடைவில் இலக்கணமுடைய சொற்களைப் போலவே காணப் பட்டு இலக்கியங்களிலும் இடம் பெற்றுவிட்டன. எனவே, குடிசை என்றால், குடியிருக்கும் வீடு என்பது பொருள்ன்பது இப்போது எல்லோர்க்கும் விளங்கலாம். ஆகவே, இவ் வீட்டுப் பெரியார் 'தம் குடிசையில் வந்து தங்க வேண்டும்' என்று கூறியதை, தாம் குடியிருக்கும் வீட்டில் வந்து தங்கவேண்டும் என்று கூறியதாகவே யான் எண்ணி இங்கு வந்தேன். ஆனால் அவர் யான் ஓலைக் கூரை வீட்டை எண்ணி ஏமாந்துவிட்டதாகத் தாம் எண்ணி ஏமாந்துவிட்டார்'' என்று, அத் திருமணச் சொற் பொழிவில் கூறினேன்.

ஆனால், அவரை ஏமாற்றியதுபோல் யான் எல்லோரையும் ஏமாற்ற விரும்பவில்லை; ஏமாற்றவும் முடியாது. மனிதன் முதலில் கட்டிய வீட்டிற்கு குடிசை - குடில் - குடிசல் என்ற பெயர்களை வைத்தான். பின்னர் அறிவு முதிர முதிர, நாகரிகம் வளர வளரப் புதுப் புது

முறையில் வீடு கட்டத் தொடங்கினான். அப் புது வீடுகட்கெல்லாம் புதுப் புதுப்பெயர்கள் வைத்தான். ஏன்? ஆரம்ப கால வீடுகளினின்றும் இவற்றிற்கு வேற்றுமை காட்ட வேண்டுமல்லவா? முதலில் நான்கு கால்களுடன் செய்த பொருளுக்கு 'நாற்காலி' என்று பெயர் வைத்தான். பின்னர் நான்கு கால்களுடன் அமைக்கப்பட்ட (மேஜை, ஸ்டூல் முதலிய) பல பொருள்களைக் கண்டு, அவற்றையெல்லாம் நாற்காலி என்றழைக்கவில்லை. முதலில் கண்ட நாற்கால் பொருளை மட்டுமே நாற்காலி என்ற சொல்லால் குறிப்பிட்டு வருகிறான். இதற்குத்தான் இலக்கணத்தில் 'காரண இடுகுறிப் பெயர்' என்று பெயராம். அதுபோலவே, மாட மாளிகைகளும் குடியிருக்கும் இருப்பிடமாயினும் அவற்றைக் குறிக்காமல் முதலில் கண்ட ஓலைக் கூரைகளை மட்டுமே குடிசை - குடில் - குடிசல் என்னும் பெயர்களால் மக்கள் குறிப்பிட்டு வருகின்றனர். இஃது இயற்கைதானே!

★

## 14. தமிழ்ச் சொல் மலர்

''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்''

என்ற சுப்பிரமணிய பாரதியாரின் பொருள் பொதிந்த மொழிக்கிணங்க மொழிப்பற்று சிறந்து வருகின்ற நிலையிலுள்ளது நம் தமிழ் நாடு. பண்டைக் காலத்தில்

நம் தமிழ் மன்னர் பனிமலை வரை படையெடுத்துச் சென்று தம் திறமை காட்டி வெற்றி பெற்று மீண்டனர். நாட் பல கடந்தன. வடநாட்டிலே மண நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. வட மன்னர் பலர் குழுமியிருந்தனர். அவ்வமயம், ''முன்பு தமிழ் மன்னர் ஈண்டுப் போந்து பொருதபோது எம்போலும் முடிமன்னர் ஈங்கில்லை போலும்'' என்ற ஒலி அவர் குழுவிலிருந்து எழுந்தது. இச் செய்தியைச் சேர மன்னனாம் செந்தமிழ்ச் செங்குட்டுவன் சிலரால் செவியுற்றனன். வந்தது சினம். ''அவ்வட மன்னரின் இகழ்ச்சிக் கூற்று எனக்கு மட்டுமன்று; சோழ பாண்டியர் முதலாய எம்போலும் தமிழ் மன்னர் யாவர்க்கும் உரியதே; ஆதலின் எங்களை நகையாடி யெள்ளிய அவர்களின் தலையில் கண்ணகியின் வடிவக் கல்லை வைத்துச் சுமக்கச் செய்து ஈங்குக் கொணர்வேன்'' என்று சூளுரைத்தனன். உரையோடல்ல - உரைத்த வண்ணம் செய்தும் காட்டினன். என்னே இவன்றன் மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும்! பண்டைய தமிழ் மன்னனுக்கே இவ்விதமான பற்றிருக்குமாயின் இன்றைய குடிகளாகிய நமக்கு எவ்வளவு பற்று தேவையென்பது சொல்லாமலே விளங்கும். நாட்டுப் பற்றோடு மொழிப்பற்றும் இருந்தால்தான் பொன் மலர் நாற்றமுடைத்தாதல் போல் சிறக்கும். ஆதலினால் தமிழர்கட்குத் தமிழ்ப்பற்று சிறக்க வேண்டும். அதே நேரத்தில் பிறமொழி வெறுப்பும் கூடாது.

எவ்வெச் செயல்கள் தமிழ்ப் பற்றுடைய செயல்களாகக் கருதப்படுமெனின், கூடிய வரையிலும் தமிழ்மொழியிலேயே பேசுதல், இன்றியமையாமை

ஏற்பட்ட போது மட்டும் பிறமொழியில் பேசுதல், திருக்கோயில் வழிபாடு, திருமண நிகழ்ச்சி முதலியன தமிழ் மொழியிலேயே செய்யப்பெறுதல், தமிழ்க் கல்விக்கும் தமிழ்ப் புலவர்கட்கும் நிறைந்த களைகணும் பெருமையும் அளித்தல் முதலியனவாம். இவற்றுள் திருக்கோயில் வழிபாடு தவிர மற்றையன பல விடங்களில் நடைபெறுகின்றன. தமிழிலே திருக் கோயில் வழிபாடு செய்தலாகிய ஒன்று மட்டுந்தான் இன்னும் கோயில்களில் நடக்கவில்லை. ஆதலின் அஃதொன்றையே இக்கட்டுரையின் இன்றியமையாக் குறிக்கோளாகக் கொண்டு தொடங்குகின்றேன்.

நம் தமிழ்மக்கள் நாயன்மார், ஆழ்வார்களால் பாடல் பெற்ற கோயில்களையே பெரும்பாலும் சிறப்புடையனவாகக் கருதுகின்றனர். அங்ஙனமே தேவாரப் பாடல் பெற்ற ஒரு கோயிலுக்குச் சென்று பார்ப்போமானால் ஆங்கு முதலில் வடமொழியிலேயே மலர் தூவு வழிபாடு (அர்ச்சனை) நடக்கும். அது பொதுமக்களுடைய காதுக்கும் இனிமை தராது; ஒரு சிறிதும் பொருள் விளங்காததால் அறிவிற்கும் இனிமை தராது. அது முடிந்ததும் இடி இடித்து மழை பெய்து நின்றதுபோல் இருக்கும். பின்பு தமிழ்மறை ஓதப்படும். திறனுடையவர்களால் ஓதப்படுமாயின், அது கார் காலத்தில் மழை நின்றதும் கோவலர் இனிய தீங்குழல் எடுத்து ஊதுதல்போல் காதுக்கு இனிமை பயக்கும். அன்பும் ததும்பும். இக்கருத்தைக் கொண்டு தான், நம் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளார் நால்வர் நான்மணி மாலையில்

''விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்தது என்குவீர் ஆயின்
வேதம் ஓதின் விழிநீர்ப் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேன்
திருவா சகமிங் கொருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துருகக் கண்கள்
தொடுமணற் கேணியின் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே''

*என அருளிச் செய்துள்ளார். இதன் சுருங்கிய கருத்தாவது: வேதம் ஓதினால் விழிநீர்ப் பெருக்கி நெஞ்சம் நெகிழ்பவர்களைக் காணேன்; திருவாசகத்தை ஒருகால் ஓதினாலேயே கருங்கல் மனமும் கரைந்து கண்ணீர் பெருக்கி மெய்ம்மயிர் சிலிர்த்து அன்பராகின்றனர் - என்பதாகும்.*

*ஆனால் சிலர் ''வேதத்தைக் கேட்டால் மட்டும் உள்ளம் நெகிழாதா? சாமவேத மொன்றே உருக்கி விடுமே. சிவப்பிரகாசர் கூறியது எங்ஙனம் பொருந்தும்?'' என்று கூறுகின்றனர். ஆனால் அடிகளார் இங்ஙனம் கூறியிருப்பது திருக்கோயில்களிலும், திரு விழாக் காலத்திலும் வடமொழிப் பாட்டும் தமிழ்ப் பாட்டும் மக்களால் விரும்பிப் பாராட்டப்படும் திறம் நோக்கியேயாம். அன்றியும் வடமொழி ஆட்சி நின்று நிலைத்திருந்த*

இரண்டு மூன்று நூற்றாண்டுகட்கு முன்பே அடிகளார் இங்ஙனம் பாடியிருக்கின்றனர் என்றால் தற்போதைய மக்களின் நிலையைச் சொல்ல வேண்டுவதின்று. இதனால் 'தமிழ் மறையினையே பொதுமக்கள் விரும்பிக் கேட்கின்றனர்' என்று அறிகின்றோம். அன்றியும் திருக்கோயில் வழிபாடு ஏற்படுத்தப்பட்டது முற்றத் துறந்த முனிவனுக் கல்ல. அவனுக்குக் கோயில் எதற்கு? குளம் எதற்கு? இன்றி யமையாததாய்ப் பொதுமக்கட்கே ஏற்படுத்தப்பட்டது. அங்ஙனமிருக்கத் தமிழ்நாட்டுப் பொதுமக்களால் விரும்பிக் கேட்கப்படாத வடமொழிப் பாட்டுக்குத் தமிழ் நாட்டுக் கோயில்களிலே முதலாட்சியா? தமிழ் நாட்டிலே தமிழர்களால் கட்டப்பட்ட தமிழ்க் கோயில்களிலே தமிழர்களின் நடுவிலே கூடவா தமிழ் மொழி இரண்டாம் மொழியாகக் கருதப்படுவது? இதனால் வடமொழி வேண்டாவெனக் கூறவரவில்லை; தமிழ்ப் பாட்டுக்களி னாலேயே வணங்கங் கூறப்பட வேண்டும் என்பதே ஈண்டு நோக்காகும்.

சிவப்பிரகாச அடிகளாரே சோணசைல மாலை என்னும் மற்றொரு நூலில்,

> ''விரைவிடை யிவரும் நினைப் பிறவாமை
> வேண்டுநர் வேண்டுக மதுரம்
> பெருகிய தமிழ்ச்சொல் மலர்நினக் கணியும்
> பிறவியே வேண்டுவன் தமியேன்''

எனக் கூறியுள்ளார். இதன் விளக்கமான கருத்தாவது: ''கடவுளே! எனக்குப் பிறப்பு வேண்டாம் - பிறப்பு வேண்டாம், வீடே வேண்டும், என்று நின்னை

வேண்டுவார் வேண்டட்டும்; யான் இனிமை பொருந்திய தமிழ்ச் சொல்லால் பாடிய பாட்டாகிய மலரை நினக்குச் சூட்டத்தக்க தமிழ்ப் பிறவியையே வேண்டுவன்; எனக்கு வீடு (மோட்சம்) வேண்டுவதன்று'' என்பதாம். பற்றைத் துறந்த இச் சிவப்பிரகாச முனிவருக்குள்ள மொழிப் பற்றைப் பாருங்கள்! ஒவ்வொரு கடவுளடியாரும் ''பிறப்பை நீக்கி முத்தியை அளி'' என்று கடவுளை நோக்கிக் கதற, இவர் மட்டும் ''தமிழ்ப்பாட்டுப் பாடத் தகுந்த பிறவியை எனக்குக் கொடு'' என்று கதறுகின்றார். உண்மையில் வீடு வேண்டாம் என்பதா கருத்து? இல்லை. தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவனும் இனிமை பொருந்திய தமிழினால் கடவுளைப் பாடி வணங்க வேண்டுமென்பதே இச்செய்யுளின் உண்மைக் கருத்து. நாமும் நம் இறைவனுக்குத் தமிழ்ச்சொல் மலர் சூட்டத்தக்க பிறவியை வேண்டுவோமாக.

மற்றும், தமிழ்ப்பாட்டின் இன்றியமையாமைக்குப் பெரிய புராணத்துச் சேக்கிழார் வாக்கிலிருந்து ஒரு சிறந்த சான்று காண்போம்:

சிவபெருமான் வழக்கிட்டுச் சுந்தரரைத் தடுத்தாட் கொண்டார். தடுத்தாட்கொண்டவர் சிவனே எனவறிந்த சுந்தரர் உளங்கனிந்து நிற்கின்றார் அவ்வமயம் கடவுள் சுந்தரரை நோக்கிக் கூறியதாவது:-

''மற்று நீ வன்மை பேசி வன்றொண்டன் என்னு நாமம்
பெற்றனை நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொல் தமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்''

இதனுடைய விரிவான கருத்தாவது:- ''ஏ சுந்தரா! நீ என்னோடு வன்மை பேசி வன்றொண்டன் என்னும் பெயர் பெற்றாய்; அது நிற்க. நீ என்னை வணங்க வேண்டும். எனக்கு அன்பு நிறைந்ததும் சிறப்பு மிக்கதுமாகிய அர்ச்சனை என்று சொல்லப்படுவது வேறொன்றுமில்லை. அப்பாட்டும் தமிழ்ப்பாட்டே ஆதலின் இம்மண்ணின் மேலே நீ என்னைப் பாட வேண்டுமாயின் தமிழ்ச்சொல்லினாலே பாடுவாயாக'' - என்பதாம். ஈண்டு தூமறை பாடும் வாயாராகிய சிவ பெருமானே இங்ஙனம் கூறினார் எனச் சேக்கிழார் அமைத்துள்ள செந்தமிழ்த் திறம் நுணுகி நோக்கி மகிழ்தற்குரியதாகும். மற்றும் அப்பர், சம்பந்தர், மணிவாசகர் முதலிய அடியார்களையெல்லாம் நோக்கி இங்ஙனம் கூறாது, அர்ச்சனை செய்யுந் தொழிலுடைய குருக்கள் என்று சொல்லப்படுகின்ற ஆதிசைவ மரபிலே தோன்றிய சுந்தரரையே நோக்கி இங்ஙனம் கூறியதாகக் கூறியிருக்கும் நயம் இன்னும் உய்த்துணர்ந்து களித்தற்கு உரியதாகும். ''இப்போது செய்கின்ற அர்ச்சனை அன்புடையதாகவும் சிறப்புடையதாகவும் கடவுளால் கருதப்பட மாட்டாது. அவர்க்கு அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க அர்ச்சனை தமிழ்ப்பாட்டுதான். அதைத் தான் அவர் விரும்பி ஏற்பார். ஆதலின் தமிழில்தான் பாட வேண்டும்'' என்ற குறிப்புப் பொருளை இச் செய்யுள் நமக்குத் தருகின்றது. மேலும் சேக்கிழார், ''ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்'', ''அசைவிலே செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல'' என்னும் பாடல் பகுதிகளால், தமிழின் தெய்வத் தன்மையை வலியுறுத்தி, மற்ற மொழிகளின் ஆட்சியினை

அகற்றி, தமிழே வென்று ஆட்சிபுரிய வேண்டும் என்று பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே கனவு கண்டிருப்பதை இந்த நூற்றாண்டிலாவது நனவாக்க வேண்டும்.

இதுகாறுங் கூறியவற்றால், "தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவர்க்கும் தமிழ்மொழிப்பற்று இருக்க வேண்டும். அம்மொழிப் பற்றினை எல்லாவகையிலும் காட்ட வேண்டும். அம்மொழிப்பற்று பலவகையாகத் தமிழர்களால் நடத்தப் பெற்றுக் காட்டப்படினும் திருக் கோயில்களிலே தமிழ் மொழியினால் வழிபாடாற்றல் ஒன்று மட்டும் இன்னும் நிகழப் பெற வில்லை. சிறப்பாகத் தமிழ் மொழியினாலேயே கடவுள் வணக்கஞ் செய்யவேண்டுமென்பதைத் துறைமங்கலம் சிவப் பிரகாச அடிகளார், தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமான் முதலியோர்களின் அருள் மொழிகள் அறிவிக்கின்றன. ஆதலின் தமிழ் நாட்டுக் கோயில்களிலே தமிழ்மொழிக்குத்தான் முதலாட்சி அளிக்க வேண்டும்." என்னும் பல கருத்துக்களை அறிந்துகொள்ளுகின்றோம்.

ஆகவே, நம் தமிழர்களைத் தமிழ்ச் சொல்லால் பாடிய பாட்டாகிய தமிழ்ச் சொல் மலரையே ஆண்டவனுக்குக் கோயில்களில் சூட்டுவிக்கும்படி யாகவும் அதற்குச் செய்யவேண்டிய ஆயத்தங்களைச் செய்யும்படியாகவும் வேண்டுகின்றேன்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே"

-திருமூலர்

★

# 4. விஞ்ஞானவியல்

## 15. விஞ்ஞான வித்தின் விரிவு

உலகம் முன்னினும் இவ்விருபதாம் நூற்றாண்டில் பெருவளர்ச்சி பெற்றுள்ளதென்பது கண்கூடு. வளர்ச்சியென்றால் நாடகத்தில் - அதிலும் பேசும் படக்காட்சியில் ஒரே விநாடியில் குழந்தை பெரிய மனிதனாக ஆகிவிடுகின்ற அத்தகைய வளர்ச்சியன்று. வீட்டில் குழந்தை படிப்படியாக வளர்ந்து பெரிய மனிதனாக ஆகும் வளர்ச்சியைப் போன்றதே உலகின் வளர்ச்சியும். இந்நுட்ப முணராதார் சிலர், உலகின் இன்றைய புதுவளர்ச்சியின் பொலிவு நோக்கிப் புகழ்ந்து, பழைய மந்த நிலையைப் பழித்து இழித்துரைக்கின்றனர். இஃது எம்மட்டுப் பொருந்துமென்று சற்றாராய்வோம்.

மனிதனுக்கு ஒவ்வொரு பருவத்தில் ஒவ்வொரு துறையில் ஒவ்வொரு விறுவிறுப்பு முனைப்புற்றிருக்கும். அவ்வவ்வதனை அவ்வப்போது ஒரு வெற்றியாகக் கருதி அவன் வரவேற்கின்றான். குழந்தைப் பருவத்தில் குழந்தை, தன்னைப் பிறர் தூக்கி வைத்திருக்கும்போது, அவர்களுடைய பிடியிலிருந்து தப்பித் தன் தாயின் மடியை யடைவதில் ஒரு விறுவிறுப்புக்கொள்கின்றது. அடைந்த போது வெற்றிக்கறிகுறியான மெய்ப்பாடுகள் அதன் மெய்யிற்படுகின்றன. அயல்நாட்டின் மேல் அணுகுண்டு வீசி வெற்றியடைந்தவர் கொள்ளும் மனமகிழ்ச்சிக்குக் குறைந்ததாக அக்குழந்தையின் மனமகிழ்ச்சியை

மதிப்பிட்டுவிட முடியாது. மேலும் ஓரளவு வயது முதிர்ந்த சிறுவன், மற்றைய பிள்ளைகள் வெறித்துப் பார்க்கப் பார்க்க, தான் அவர்கள் எதிரில் உயர்ந்த தின்பண்டம் தின்பதிலும், சிறந்த வெடி (பட்டாசு) வெடிப்பதிலும், விலையேறப் பெற்ற விளையாட்டுப் பொருள்கள் வைத்துக்கொண்டு விளையாடுவதிலும், மதிப்பிற்குரிய ஆடையணிகள் அணிவதிலும் விறு விறுப்புக்கொண்டு வெற்றி மாலை சூடுகிறான். இன்னுஞ் சில்லாண்டுகள் சென்றதும், முறையே விளையாட்டிலும் கல்வியிலும் மற்றைய மாணவரை வெல்ல விரும்புகின்றான். அடுத்து, நடையாலும், உடையாலும், அழகாலும், ஆற்றலாலும் மற்றைய இளைஞரினும் தானே கன்னியரின் கண்களைக் கவர்ந்து வாகைசூட வேண்டுமென்று விறுவிறுக்கின்றான். பின்னர் தொடர்ந்து பட்டம் பதவி, அரசியல் முதலியவற்றில் ஏனையோரினுஞ் சிறந்து செல்வத்தில் புரண்டு செம்மாந்திருக்கக் கனவு காண்கிறான். கனவு நனவாகி வாகைமேல் வாகை வகைவகையாக வருவதும் உண்டு. எல்லா ஆட்டபாட்டங்களும் அடங்கிய காலத்து, யேசுவைப்போல், புத்தரைப் போல், காந்தியைப்போல் மாநிலம் மதிக்கவேண்டுமென்று விரும்பி அதற்குரிய நாடகமேடையில் ஏறி நடிக்கத் தொடங்கிவிடுகிறான்.

மனிதனின் இத்தகு வியத்தகு செயல்களுள் எது பழமை? எது புதுமை? எது தாழ்ந்தது? எது உயர்ந்தது? இவையெல்லாஞ் சரிநிகர் சமன். இவற்றுள் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு கற்பிப்பது கற்பனை மட்டுமன்று; ஆராய்ச்சியின்மையால் நேர்ந்த தவறுமாகும். ஏன்?

காந்தியண்ணலையே எடுத்துக்கொள்வோம். அவர் இளமையில் இயற்றிய செயல்கள் எளியனவாகத்

தோன்றின. முதுமையில் முகிழ்த்த செயல்களோ அரும் பெருந் தொண்டுகளாக மலர்ந்தன. அதனால் அவரது இளமையைப் பழமையானது - தாழ்ந்தது என்றிகழவும், முதுமையைப் புதுமையானது - உயர்ந்தது என்று புகழவுஞ் சாலுமா? ஆண்டிற்கேற்ற - அறிவிற்கேற்ற - அனுபவத்திற்கேற்ற செயல்களே கைவரப்பெற்றன. இதற்கு இயற்கை யென்று பெயர் சூட்டல் நேரிது.

இனியுலகை நோக்குவோம். இவ்வுலகந் தோன்றி ஏறக்குறைய மூன்று கோடி யாண்டுகள் ஆகியிருக்கலாம் என்று விஞ்ஞானிகள் உய்த்துணர்ந்து உரைத்துள்ளனர். இவ்வாண்டுகளை நூறு நூறு ஆண்டுகளாகப் பகுத்துக் கொண்டோமானால், ஒரு நூற்றாண்டிற்கும் மறு நூற்றாண்டிற்கும் உலக வளர்ச்சியில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதை உணரலாம். நீர்ப்பாசி, புல் பூண்டுகளிலிருந்து படிப்படியாக வாலுள்ள குரங்கு, வாலில்லாக் குரங்கு, மனிதன்வரை உயிர்த்தோற்றம் உண்டானதாகக் கருதப்பட்டு வருகின்றது.

மனிதனுக்குத் தொடக்கத்தில் பேசத் தெரியாது. உடை யுடுக்கத் தெரியாது. அந்த அறிவும் அப்போது எட்டவில்லை. சுருங்கச் சொல்லின் பசியுணர்ச்சி யேற்பட்டபோது உணவு தேடி யுண்பதைவிட வேறெதுவுஞ் செய்ய அறியாதவனாகியிருந்தான். இந்நிலையில் வேட்டையாடுவதிலிருந்து பயிர்த் தொழிலுக்குத் தாவினான். படிப்படியாக மண், கல், மரம், இரும்பு முதலியவற்றால் கருவிகள் கண்டு பிடித்தான். தச்சு, நெசவு முதலியன செய்தான். நாளடைவில் வெறும் பேச்சுக்கு மேல் எழுதவும் பழகி, படிக்கவுங்கற்று, பாராளவும் தேர்ச்சி பெற்றான்.

இப்போது விஞ்ஞான வெறி பிடித்து அணுகுண்டு போடுவதிலிருந்து அயல் கோளங்கட்கு (செவ்வாய்-சந்திர மண்டலங்கள்) தாவுவது வரை வந்துவிட்டான்.

இவர்களுள், ஆதியில் ஆடையின்றி வாழ்ந்தவன் மூடன் - இப்போது அயல் கோளத்திற்கு தாவுபவன்தான் அறிவாளி - என்பது பொருளா? இல்லை. இயற்கை யென்னும் துலைத் தட்டில் எடைபோட்டுப் பார்க்குங் கால் இருவருஞ் சரிநிகர் சமனே! அவன்தானே இவன்! இவன்தானே அவன்! எட்டு வயது சிறுவன்தானே எண்பது வயது கிழவனாவான். முப்பது வயது மனிதன் செய்யுஞ் செயல்களைச் செய்யத் தெரியாமையால் மூன்று வயது குழந்தையை நாம் இகழ்வதுண்டோ-இகழ்ந்தால் அது அறிவீனமல்லவா? இதே முப்பது வயது மனிதன் இப்போது செய்யுஞ் செயலை மூன்று வயதில் செய்தானா? செய்ய இயற்கை இடந்தராதே. 19-ஆம் நூற்றாண்டில் கம்பியில்லாத் தந்தையை (Wireless) கண்டுபிடித்த மார்க்கோனி (Marcony) ஐயாயிரம் ஆண்டு கட்கு முன் இருந்தால் அதனைக் கண்டுபிடித்திருக்க முடியுமா- பத்தொன்பது - இருபதாம் நூற்றாண்டுகளில் பேசும் படக் காட்சி, ஒலிபெருக்கி, மின் விளக்கு, மின் வண்டி முதலியவற்றைக் கண்டுபிடித்த தாமசு ஆல்வா எடிசன் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன் அவற்றைக் கண்டுபிடித்திருக்க முடியுமா? முடியாதன்றோ? மற்றைய விஞ்ஞானிகளும் இத்தகையோரே!

மற்றும், இன்னின்ன பொருளைக் கண்டுபிடித்த பெருமை இன்னின்ன விஞ்ஞானிகட்கு மட்டுந்தான் உரியது என்று சொல்வதும் பொருந்தாத தொன்றேயாம். மாணவன் பத்தாவது வகுப்புத் தேர்வில் வெற்றி

பெற்றுள்ளா னென்றால், அதற்குக் காரணர் பத்தாவது வகுப்பு ஆசிரியர் மட்டுந்தான் என்று சொல்வது எங்ஙனம் பொருந்தும்? அட்டை வகுப்பு ஆசிரியர் அ-ஆ சொல்லிக் கொடுக்காவிட்டாலும், மேலுந் தொடர்ந்து ஒன்பதாவது வரை மாணவன் படித்துக்கொண்டு வந்திரா விட்டாலும் பத்தாவது வகுப்பாசிரியர் என்ன செய்ய முடியும்? எழுத்தே அறியாத இருபது வயதினன் ஒருவனை ஒன்பது மாதத்தில் பத்தாவது தேர்வில் தேர்ச்சி பெறும்படிச் செய்ய அவராலாகுமா? முடியாதன்றோ?

எனவே, இன்று காணப்படுகின்ற - இனி காணப் போகின்ற விஞ்ஞான வெற்றிகளனைத்திலும் பழங்கால மனிதர்க்கும் பங்குண்டு என்பதை மறக்கவும்- மறுக்கவுங் கூடாது. இதனை யின்னுஞ் சிறிது ஆராய்வோம்.

## முத்தொழில்

புதிதாக ஒரு பொருளை உண்டாக்கவோ, காப்பாற்றவோ, மறைக்கவோ (அழிக்கவோ) மனிதனால் முடியாது. ஆனால், மனிதனே அம் முத்தொழிலைச் செய்வதுபோல் நமக்குத் தோன்றும். அத்தோற்றம் வெறுங் கானல் நீரே. ஓடம் மனிதனை அக்கரையிற் சேர்க்கிறது என்றெண்ணுகிறோம். அது தவறு. மனிதனே ஓடத்தை அக்கரையிற் சேர்க்கிறான் என்பதே உண்மை. அதுபோல, மனிதன் முத்தொழில் செய்யவில்லை. அவன் ஓடம். மற்றோர் ஆற்றலே அவனைச் செய்விக்கின்றது. அவ் வாற்றலுக்குப் பெயர் இயற்கையென்று சிலரும், இறையென்று சிலரும் இயம்புவர். அதனாலென்ன? தமிழ் என்றாலும் இனிமை என்றாலும் சொல்தானே வேறு? பொருள் ஒன்றுதானே!

அங்ஙனம் மனிதனால் முத்தொழில் செய்ய முடியாதென்றால் அவன் செய்வதுதான் என்ன? என்ற வினாவிற்கு விடைவேண்டும். நாற்காலி யுண்டாக்கினவன் யார்? மனிதன். நாடகம் பார்க்கும்போது நடிகன் மேலுள்ள வெறுப்பால், அந் நாற்காலியைத் தூக்கி யடித்து ஒடித்து உடைத்து அழித்து பின் அதனை அடுப்பிலிட்டு எரித்துச் சாம்பலாக்கியவன் யார்? மனிதனே! ஏன் - இங்கு அவன் முத்தொழில் செய்ததாக மேளதாளத்தோடு ஒத்துக் கொள்ளலாமே? முக்காலும் முடியாது. எப்பொழுது நாற்காலியை ஒடிக்கிறானோ, புத்தகத்தையும் துணியையுங் கிழிக்கிறானோ, ஒருவரிடம் ஒரு பொருளைக் கொடுக்கும்போது பதனமாக எடுத்துக்கொண்டு போ என்று நம்பிக்கை யிழந்து அறிவுரை புகட்டுகிறானோ, அப்பொழுதே, மனிதனால் எதையும் நிலையாகக் காப்பாற்ற முடியாது என்ற உண்மை வெட்ட வெளிச்சமாகின்றது. நாற்காலி உண்டாக்கினான் என்றால் நடுத்தெருவில் நின்று கொண்டு ''நாற்காலியே வா'' என்றதுமா நாற்காலி வந்துவிட்டது? பேசும் படத்தில் திடீரெனத் தோன்றும் நாற்காலியும் தச்சன் கைவேலை தங்கியதன்றோ? மனிதன் மரத்தைத்தானே நாற்காலியாகச் செய்தான்? மரம் ஏது? விதையைத்தானே மரமாக்கினான்? அது போகட்டும். நாற்காலியை மறைத்தானென்றால், நடுத்தெருவில் நின்றுகொண்டு ''நாற்காலியே போ'' என்றதுமே நாற்காலி உலகத்தைவிட்டு முற்றிலும் மறைந்துவிட்டதா? அதனையுடைத்துத் தனித்தனிக் கட்டையாக்கினான்; கட்டையை விறகாக அடுப்பில் இட்டுச் சாம்பலாக்கினானல்லவா? நாற்காலி மறைய வில்லையே; இப்போது சாம்பல் உருவத்திலுள்ளதே!

எனவே மனிதன் தன்னுடனேயே தோன்றி உலகில் நிலைத்துள்ள ஒரு பொருளை மற்றொரு பொருளாகச் செய்கின்றான்; அதுதான் அவனால் முடியும் என்ற முடிவுக்கு வருவோம். வருவதென்ன - அம்முடிவுதானே நம்மைத் தேடி வரும்.

ஒன்றை மற்றொன்றாகச் செய்யும் மனிதன், ஒரு விநாடியிலாவது அல்லது ஒரு நாழிகையிலாவது ஒரு நாற்காலியின் பகுதிகளனைத்தையுஞ் செய்து பொருத்தி விடுகின்றானா? இல்லை. ஒரு நேரத்தில் ஒரு காலைக் கடைகிறான். தனித்தனியாக நான்கு காலையுங் கடைந்த பின், பின்னால் சாரும் கட்டைகளைத் தனித்தனியாகக் கடைவான். பின் அக்கட்டை தாங்கிகளைச் செய்வான். மேலும் கைப்பிடிகளைச் செதுக்குவான். தொடர்ந்து கைப்பிடி தாங்கிகளையிழைப்பான். அடுத்து, அமருந் தட்டுப் பலகையையும் அமைப்பான். இறுதியிலேயே எல்லாவற்றையும் இணைத்துப் பொருத்துவான். அதற்குப் பெயரே நாற்காலி. அவன் நாற்காலியின் ஒரு காலைத் தவிர மீதி யெல்லாவற்றையுஞ் செய்து விட்டான்; இறுதியில் எஞ்சியுள்ள அக்காலைக் கடைந்து கொண்டிருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அப்போழ்து ஒருவர் அவனையணுகி, ''என்ன செய்கின்றாய்'' என்று கேட்டால், ''நாற்காலி செய்கிறேன்'' என்றே அவன் பதில் சொல்வானல்லவா? அல்லது - அவன் இன்னும் நாற்காலியின் எந்த உறுப்புகளையும் செய்யவில்லை; முதன்முதலாக ஒரு காலைக் கடையத் தொடங்கியுள்ளான் என்று வைத்துக் கொள்வோம். அப்போது ஒருவர் அவனை நோக்கி, ''என்ன செய்கிறாய்'' என்று கேட்டால், அப்பொழுதும்

அவன் ''நாற்காலி செய்கிறேன்'' என்றுதானே பதில் சொல்வான்- எனவே ஒருவன் நாற்காலி செய்வதற்கு ஒரு நாள் பிடிக்குமென்றால், முதல் விநாடியிலிருந்து கடைசி விநாடி வரையும், அவனால் செய்யப்படும் பொருளுக்குப் பெயர் நாற்காலியே என்பது பட்டப்பகல் ஞாயிறேபோல் திட்டமாய்த் தெரியவருமே!

## விஞ்ஞானத்தின் பிரிவு

மேல் எடுத்துக்காட்டப்பட்ட நாற்காலியின் தோற்றம்தான் விஞ்ஞானத்தின் தோற்றமும். தச்சன் கையில் உளியை யெடுத்ததுமே நாற்காலியென்னுஞ் சொல் பிறந்துவிட்டதைப்போல, இயற்கையாய் விளைந்த காய், கனி, கிழங்குகளை உண்டுவந்த மனிதன் செயற்கைாகப் பயிரிடத் தொடங்கியதுமே விஞ்ஞானம் வெளிப்பிறந்துவிட்டது. தலையில் பொருள்களைச் சுமந்து திரிந்த மனிதன், உருளை செய்து வைத்து இழுக்கத் தொடங்கி அன்றே, பெரிய பெரிய 'லாரி'களும் புகைவண்டி முதலியனவும் செய்வதற்கு வித்திட்டு விட்டான். அவ் விஞ்ஞான வித்து நாளடைவில் படிப்படியாக வேரூன்றி, முளையீன்று, தண்டு நீண்டு, கிளைத்து, தளிர்த்து, தழைத்து பூத்துக் குலுங்குகின்றது இன்றைக்கு! (இனி வரப்போகும் விஞ்ஞான வளர்ச்சியைக் காய்கனியாகக் கூறுவது சாலும்.) அன்று தழையை மென்று தண்ணீரைக் குடித்த மனிதனை இன்று ஒன்பது வெண் பொற்காசு செலவில் ஒரு வேளையுணவு உண்ணச் செய்கிறது. அன்று மலைப்பிளவில் வாழ்ந்த மனிதனை, இன்று நூற்றிருபது அடுக்கு மாளிகையுள் நுழைந்து வாழச் செய்கின்றது. அன்று தழையுடுக்கவும் அறியாதிருந்த மனிதனை, இன்று ஆயிரம் வெண்பொற்

காசு மதிப்புள்ள ஒரு புடவை வாங்கச் செய்கின்றது. அன்று விலங்குபோல் ஊமையாயிருந்த மனிதனை, இன்று பல்கலைப் புலவனாக்கி வருகின்றது. அன்று சிறு மலைப்பிளவைக் கடக்கவும் அஞ்சிய மனிதனை, இன்று மதி (சந்திரன்) மண்டலத்திற்குச் செல்ல முன்கூட்டிப் பதிவு (Register) செய்ய வைக்கின்றது. விஞ்ஞான வித்தின் விளைவுதான் என்னே!

அன்றைய விஞ்ஞானம் பால் என்றால், இன்றைய விஞ்ஞானம் அதிலிருந்து எடுக்கப்பட்ட நறு நெய்யாகும். அன்றைய விஞ்ஞானம் விறகு என்றால், இன்றைய விஞ்ஞானம் வெந்தழலாகும். அன்றைய விஞ்ஞானம் ஒரு கோழி முட்டையென்றால், இன்றைய விஞ்ஞானம் அம்முட்டையினின்றும் கால், வால், தலை முதலியவற்றோடு வெளிவந்த கோழிக்குஞ்சாகும். இக்குஞ்சு இன்னும் பெரிய கோழியாகும். அன்றைய விஞ்ஞானம் ஒரு சிறிய ஆலம் வித்து என்றால், இன்றைய விஞ்ஞானம் அவ்வித்திலிருந்து தோன்றிய ஆலஞ்செடியாகும். இன்னும் இச்செடி, ஒரு மன்னர் மன்னன் தன் பெரும் படைகளுடன் தங்குதற்குரிய அளவு நிழல்தரும் பெருமரமாக விழுதுவிட்டு விரிந்து படர்ந்து வளர்ச்சி பெறும். விஞ்ஞான வித்தின் விரிவுதான் என்னே!

★

## 16. 'அத்தி பூத்தாற் போல...!'

'அத்தி பூத்தாற்போல இருக்கிறதே உங்கள் வருகை!' என்று ஒருவர் மற்றொருவரை நோக்கிக்

கேட்பதை உலகியலில் எப்போதோ சில நேரங்களில் கண்டிருக்கிறோம். 'இவன் வேறு வந்துவிட்டானே - எப்பொழுது தொலைவான்?' என்று வெறுக்கக் கூடிய நிலையில் அடிக்கடி வந்து ஆணியடித்துக்கொண்டு அமர்ந்துவிடுபவர்களைப் பார்த்து இப்படி யாரும் கேட்பதில்லை. நீண்ட நாட்களாக வராமல், எப்போதோ ஒரு நேரம் அரிதாக வந்து தலையைக் காட்டிவிட்டுப் போகிறவர்களை நோக்கியே இப்படிக் கேட்பது உலக வழக்கம். அரிதாக வருவதற்கும் அத்திபூப்பதற்கும் என்ன ஒப்புமை? ஆராய்வோம்.

நாம் சிறுவராயிருந்தபோது அத்திப் பூவைப் பற்றி என்னென்னவோ கேள்விப்பட்டிருக்கிறோம்- சிறுவர்களோடு பேசிக்கொண்டும் இருந்திருக்கிறோம். ஏன் - எப்போதுமே பலர், சிறுவயதில் பேசிக்கொண்ட - கேள்விப்பட்ட அதே அளவில்தான் உள்ளனர்!

'அத்திப்பூ பார்த்திருக்கிறாயா?' என்று கேட்பான் ஒரு சிறுவன். 'அத்தி மரத்தில் பூவே பூப்பதில்லை' என்பான் மற்றொரு சிறுவன். 'பூ இல்லாமல் எப்படிக் காய் காய்க்கும்?' என்று கேட்பான் இன்னொருவன். 'இருட்டினதும் பூத்து விடிவதற்குள் காய்ந்துவிடும்' என்று ஒரு பதில் வரும். 'அப்படியென்றால் இதுவரையும் அத்திப்பூவை யாராவது பார்த்திருக்க வேண்டுமே' என்று ஒரு கேள்வி புறப்படும். எல்லோரும் தூங்கின பின்பு பூத்து, எல்லோரும் விழித்துக்கொள்வதற்குள் காய்த்துவிடும்' என்ற பதில் கிடைக்கும். 'அப்படியென்றாலும் யாராவது ஒருவர் வேண்டுமென்றே இரவு முழுவதும் விழித்திருந்து கண்டுபிடித்திருப்பாரே' என்ற கேள்வி எழும்.

'பட்டைக்குள்ளே பூத்து, பிறகு காயாக வெளிப்படும் என்றோ அல்லது அது பூப்பதும் தெரியாது - காய்ப்பதும் தெரியாது; பூத்த மறுவிநாடியே காய்த்துவிடுவதால் யார் கண்ணுக்கும் புலப்படாது' என்றோ திறமையான பதில் வரும். அல்லது, 'அத்தி பூக்காமலேயே ஒரேயடியாகக் காயாகவே காய்த்துவிடும்' என்றும் ஒரு குரல் பேசும். 'இல்லையில்லை - அத்திமரத்தின் பூக்கள் உண்டு அவை பூத்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன்' என்று அடித்துப் பேசுகிற 'அண்டப் புளுகு - ஆகாயப் புளுகுகளும்' உண்டு.

மற்ற பூக்களைப் போல அத்திப்பூ என ஒன்று தனியாக இருக்குமானால், அது பூப்பதும் உண்மை யானால், மேற்கூறிய பேச்சுகளுக்கே இடமில்லை; 'அத்திபூத்தாற் போல' என்ற பழமொழியும் தோன்றி யிருக்க முடியாது. எனவே, இதில் ஆராய்ந்து காண வேண்டிய மறைபொருள் ஏதோ ஒன்றுள்ளது.

அத்தி மரத்தை நன்கு அறிந்து வைத்துள்ள நம் மக்கள், அத்திப் பிஞ்சு இதற்கு நல்லது - அத்திக்காய் அதற்கு ஏற்றது - அத்திப்பழம் இதற்கு உகந்தது அத்திப்பால் அதற்குச்சிறந்தது - என்றெல்லாம் அத்தியைப் பற்றி மருத்துவமுறையில் நன்கு ஆராய்ந்து அறிந்து வைத்துள்ள நம் மக்கள், அத்திப் பிஞ்சினையும் காயினையும் கூட்டு செய்தும் குழம்புவைத்தும் பொரியல் பண்ணியும் வற்றல் போட்டு வறுவல் செய்தும் உண்டு பழகிய நம் மக்கள் அத்திப்பூவைப் பற்றிய வரலாற்றை மட்டும் அறியாதிருப்பது வியப்பாயுள்ளது. அந்த அரிய வரலாற்றினை நாம் ஈண்டு காண்பேமே!

'பூவாமல் காய்க்காது - மின்னாமல் இடிக்காது' என்னும் பழமொழிக்கேற்ப அத்திமரத்திலும் பூக்கள் மிக உண்டு; அந்தப் பூக்களினால் காய்கள் கிடைப்பதும் உண்டு. ஆனால், மற்ற மரத்துப் பூக்களிலிருந்து காய்கள் உண்டாவ-தற்கும், அத்திப்பூவிலிருந்து காய் உண்டாவதற்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. வித்தை காட்டுபவன் போல் இதை வளர்த்துவதேன்? ஒரு முடிவுக்கு வந்துவிடுவோம். அத்திப் பூவேதான் காய் - அத்திக்காயேதான் பூ - பூவும் காயும் ஒன்றே. அத்திப்பூ மொட்டுபோல் இருந்தபடியே காயாகிவிடுகிறது. முல்லை மொக்காக - மொட்டாக இருந்து, பின்னர் மொட்டு உடைந்து இதழ்கள் விரிந்து மலர்ந்து விடுகிறது. அதுபோல் இல்லாமல், அத்தி கடைசி வரையும் மொட்டு போலவே உருண்டையாகக் காட்சியளிக்கிறது. அந்த ஓர் உருண்டைக்குள்ளேயே பூத்துக் காய்த்துக் கனிந்துவிடுகின்றன. எனவே, ஓர் அத்திக்காய் என்பது, பல அத்திப்பூக்களின் முதிர்ந்த மாற்றமேயாகும். இதனை 'விருந்த பரிணாம சமூகக் கனி' என்பர் தாவர நூலார் (Botanist). இது குறித்து இன்னும் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டுமாயின், பொதுவாக, மரஞ்செடி கொடிகளின் பூ, காய், கனி ஆகியவற்றின் வரலாற்றினை ஆராய வேண்டும்.

## பூவின் வரலாறு

இங்கே விளக்கத்திற்காகப் பூவரசம்பூவினை எடுத்துக்கொள்வோம். நகரங்களில் உள்ள சிலர் அறியாவிடினும், சிற்றூர்களில் உள்ள பலரும் பூவரசம் பூவினைப் பற்றி நன்கு அறிந்திருப்பர். சிறுவர் சிறுமியர் பூவரசம் பூவினைப் பறித்து, பாவாடை கட்டிய பெண்

குழந்தைபோல் பொம்மை செய்தும், இதழ்களைக் களைந்தெறிந்துவிட்டு, அடியிலிருக்கும் காய்ப் பகுதியைக் கம்மலாகவும் பம்பரமாகவும் பயன் படுத்தியும் விளையாடுவது வழக்கம். எனவே, சிறார்களும் நன்கறிந்த பூவரசம் பூவினை எடுத்துக் கொள்வது பொருத்தந்தானே. மேலும் அது பூக்களுக் குள்ளே அரசன் அல்லவா? ஆகவே, அதைப் பற்றித் தெரிந்துகொள்வது, மற்ற பூக்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்குப் பெரிதும் துணைபுரியும்.

பூவரசங் கிளையின் கணுச் சந்துகளிலிருந்து நீண்ட காம்புகளுடன் பூக்கள் தோன்றுகின்றன. பூவினைத் தாங்கி நிற்கும் காம்புக்கு 'விருந்தம்' (Pedicel) என்று பெயர்கூறுகின்றனர் தாவர நூலார். இதனை மலரின் தாள் என்றும் சொல்லலாம். விருந்தத்தின் நுனியில் ஒரு கிண்ணம் பூவின் மற்ற பகுதிகளை உள்ளடக்கி மூடிக் கொண்டிருக்கும். சிறிய அரும்பாயிருந்தபோது மூடிக் கொண்டிருக்கும் இக் கிண்ணம், பெரிய மொட்டானதும் மேற்புறத்து விரிகிறது. உடனே உள்ளிருக்கும் பாகங்கள் வெளிப்பட்டு வளருகின்றன. இப் பூக்கிண்ணத்தை 'புஷ்பகேசம்' (Calyx) என்றழைக்கின்றனர்.

புஷ்ப கோசம் எனப்படும் பூக்கிண்ணம் பூவின் வெளிப்பாகமே. உட்புறத்தே அழகிய மஞ்சள் நிறங் கொண்ட ஐந்து தளங்கள் உண்டு. பூவின் நடுவில் நீளக் கம்பி போன்ற ஒரு பாகம் உள்ளது. அதில், குழாய் போன்றும் ஊசி போன்றுமாக இரண்டு உட்பிரிவுகள் உண்டு. குழாய் போன்றது ஊசி போன்றதைச் சுற்றிக் கொண்டிருக்கும். இந்தக் குழாயின் வெளிப்புறத்தைச் சுற்றியிருக்கிற நூல் போன்ற கம்பிகளின் நுனிகளில்,

மஞ்சள் நிறமுடைய சிறுசிறு உருண்டைகள் இருக்கும். இக் குழாய் 'கேசரக் குழாய்' (Staminal tube) என்றும், மஞ்சள் நிற உருண்டை 'மகரந்தப் பை' (Anther) என்றும் அழைக்கப்படும். கேசரக் குழாய்க்குள் உள்ள கம்பி 'கீலம்' (Style) எனப்படும். கீலத்தின் நுனிப்பகுதி 'கீலாக்ரம்' (Stigma) அல்லது கீல்நுனி எனப்படும். கீலம் அடியில் பிஞ்சுடன் தொடர்புற்றிருக்கும். இந்தப் பிஞ்சு 'அண்டாசயம்' (Ovary) எனப்படும். இந்தக் கீலம், கீலாக்ரம், அண்டாசயம் ஆகிய மூன்றும் சேர்ந்து 'அண்ட கோசம்' (Gynaecium) என்றழைக்கப்படும். பூவில் காயாக மாறும் பகுதி இந்த அண்டகோசம்தான். எனவே, இதனைப் பூவின் பெண்பாகம் என்று சொல்லலாம் அல்லவா? கேசரப் பகுதியில் உள்ள மகரந்தப் பையில் இருக்கிற 'மகரந்தப் பொடி' (Pollen) என்னும் பூந்தூள், அண்ட கோசத்துள் விழுந்து தொடர்பு கொண்டால்தான் காய் உண்டாகுமாதலால், அம் மகரந்தப் பொடி உள்ள கேசரப் பகுதியைப் பூவின் ஆண்பாகம் என்று சொல்லலாமன்றோ?

## இணையினப் பூஞ்செடிகள்

பூவரசில் ஒரே பூவில் ஆண்பாகம், பெண்பாகம் ஆகிய இரண்டும் உள்ளன. சப்பாத்தி, அகத்தி முதலியவற்றிலும் இப்படியே. இத்தகையனவற்றை 'மிதுனச் செடி' என்பர். நாம் இவற்றை 'இணையினப் பூஞ்செடி' என அழகு தமிழில் அழைப்போம்.

## ஈரினப் பூஞ்செடிகள்

எல்லாச் செடிகளிலுமே ஒரே பூவில் கேசரமாகிய ஆண்பாகமும் அண்டகோசமாகிய பெண்பாகமும்

இருப்பதில்லை. சில செடிகளில் ஒரு கிளையிலுள்ள ஒரு பூவில் ஆண்பாகமாகிய கேசரம் மட்டும் இருக்கும். அதற்கு 'ஆண் பூ' என்று பெயராம். அதே அல்லது வேறு கிளையிலுள்ள பூவில் பெண்பாகமாகிய அண்டகோசம் மட்டும் இருக்கும்; அதற்குப் 'பெண் பூ' என்று பெயராம். பூசணி, பாகல், குப்பைமேனி, ஆமணக்கு முதலியவை இந்த வகையைச் சேர்ந்தவை. இத்தகையவற்றை , 'துவிலிங்கச் செடிகள்' என்பர். தமிழில் 'ஈரினப் பூஞ்செடிகள்' என்று நாம் சொல்வோம்.

## ஓரினப் பூஞ்செடிகள்

வேறு சில வகைகளில், ஒரு செடியிலோ அல்லது கொடியிலோ ஏதாவது ஓரினப் பூ மட்டுந்தான் இருக்கும். அதாவது, கோவைக் கொடியை எடுத்துக்கொள்வோம். ஒரு கோவைக் கொடியில் ஆண்பூக்கள் மட்டுமே இருக்கும். இன்னொரு கோவைக் கொடியில் பெண் பூக்கள் மட்டுமே இருக்கும். ஆண் பூ - பெண் பூ என்று சொல்வதற்குப் பதிலாக, ஆண்பனை - பெண்பனை என்பதுபோல, ஆண்கோவை-பெண்கோவை என்றே சொல்லிவிடலாம். இத்தகையனவற்றை 'ஏகலிங்கச் செடிகள்' என்பர். தமிழில் 'ஓரினப் பூஞ்செடிகள் அல்லது கொடிகள்' என்று சொல்லலாம்.

## மகரந்தச் சேர்க்கை

ஒரே பூவில் ஆண்பாகமும் பெண்பாகமும் இருந்தால், ஆண்பாகத்திலுள்ள மகரந்தத்துணுக்குகள் பெண்பாகத்தோடு தொடர்புகொண்டு, கருவுற்று, காய் காய்ப்பது தன்னில்தானே இயற்கையாக நிகழும். இதற்குத் 'தன் மகரந்தச் சேர்க்கை' என்று பெயராம். ஆண்பூவும்

பெண்பூவும் தனித்தனியாய் இருக்குமானால், காற்று வண்டு, தேனீ, பறவை, விலங்கு முதலியவற்றின் வாயிலாக, ஆண்பூவிலுள்ள மகரந்தத் துணுக்குகள் பெண் பூவிற்கு வந்து தொடர்புற்று, கருவுற்று, காய் காய்க்கும். இதற்குப் 'பிற மகரந்தச் சேர்க்கை' என்று பெயராம்.

## பூக்கதிரும் கொத்தும்

ஈண்டு இன்னொரு செய்தியும் அறிந்து வைக்கற் பாலது; சிலவகை மரஞ்செடி கொடிகளில் பூக்கள் தனித்தனியாகப் பூக்கும். பூவரசு, பூசணி, தாமரை முதலியன இத்திறத்தன. வேறு சிலவற்றில் பூக்கள் கொத்து கொத்தாக - மஞ்சரியாகப் பூக்கும். கொன்றை, ஆவிரை முதலியன இத்திறத்தனவாம். கொத்து - குலை - மஞ்சரி இனத்திலேயே பலவகை உண்டு. தென்னை, ஈச்சமரம் முதலியவற்றில் கதிர் கதிராக இருக்கும். நீளமான ஒரு கதிரில் கிளைகள் போல் பல பிரிவுகள் இருக்கும். அவற்றில் அடர்ந்து பூக்கள் இருக்கும். வாழைப்பூவும் கதிர் வகையைச் சேர்ந்ததுதான். நாம் வாழைப்பூ என்று மொத்தமாக ஒன்றைக் குறிப்பிடுகின் றோமோ - அது ஒரு பூவன்று; அதற்குள் பல பூக்கள் உள்ளன. ஒவ்வொரு பூவிலிருந்தும் ஒவ்வொரு காய் உண்டாகிறது. பின்னர் நாம் இவற்றைக் 'குலை' என்கிறோம்.

மேற்கூறியுள்ள அடிப்படைக் கருத்துக்களோடு இனி நாம் அடுத்தக கட்டத்திற்குச் செல்ல வேண்டும்.

ஈண்டு இன்னொரு முறை நாம் பூவின் பாகங்களை சுருங்க நினைவு கூர்வோம். முதலில் பூவைத் தாங்கிக் கொண்டிருக்கும் காம்பு என்னும் விருந்தம், இரண்டாவதாக, பூவின் உள் பாகங்களை அடக்கிக்

கொண்டிருக்கும் வெளிப்பாகமாகிய பூக்கிண்ணம் என்னும் புஷ்பகோசம். (விருந்தத்திற்கும் புஷ்ப கோசத்திற்கும் இடையில், புறபாகம் சில பூக்களில் இருக்கும் - சிலவற்றில் இராது.) அடுத்து, புஷ்ப கோசத்திற்குள் பெண்பாகமாகிய அண்டகோசம், ஆண்பாகமாகிய கேசரம், - இப்படியாக பல பகுதிகளும் சேர்ந்ததுதான் ஒரு பூ எனப்படுவது. ஆனால் பூவுக்குப் பூ அமைப்பு முறையில் பல்வகை மாறுதல்கள் இருக்கும்.

## சாமானியக் கனிகள் (Simple Fruits)

பெரும்பாலான இனங்களில், பூவில் உள்ள அண்டகோசப் பகுதி மட்டுந்தான் காய்கனியாகிறது. மற்ற விருந்தம் புஷ்பகோசம், கேசரம் முதலியன பயனின்றி இற்றுவிடுகின்றன. இப்படி உண்டாகும் கனிகளுக்கு, 'சாமானியக் கனிகள்' அல்லது 'தனிக்கனிகள்' என்று பெயராம். பூவரசு, வெண்டை, அகத்தி, ஊமத்தை முதலியன இத்திறத்தன.

## கலப்புக் கனிகள் (Spurious Fruits)

சில இனங்களில், பூவின் பாகங்களாகிய விருந்தம், புஷ்பகோசம், அண்டாசயம், கேசரம் முதலிய பலவும் சேர்ந்து உருண்டு திரண்டு ஒரு கனியாக மாறும். இப்படி உண்டாகும் கனிகளுக்கு, 'கலப்புக் கனிகள்' என்று பெயராம். முந்திரி, ஆப்பில், பலா, அன்னாசி, ஆல், அத்தி முதலியன இத்திறத்தன. இவற்றுள்ளும் பலா, அன்னாசி, ஆல், அத்தி போன்றவற்றில், பல பூக்கள் கொத்தாக ஒன்று சேர்ந்து, தம் பல பாகங்களோடும் உருண்டு திரண்டு ஒரே கனிபோல்

மாறிக் காட்சியளிப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இதனை இன்னுஞ் சிறிது விரிவாகக் காண்போம்:

## விருந்த பரிணாமக் கனி

முதலில் முந்திரிக் கனியை எடுத்துக் கொள்வோம். இதில் இருவேறு தோற்றங்கள் உள்ளன. அதாவது, முதலில் முந்திரிப்பழமும், அதன் நுனியில் முந்திரிக் கொட்டையும் இருக்கக் காணலாம். நாம் நினைத்துக் கொண்டிருக்கிறபடி முதலில் இருப்பது முந்திரிப் பழமன்று. நாம் முந்திரிக்கொட்டை என்று சொல்கிறோமே, அதுதான் உண்மையான முந்திரிப் பழமாகும். முந்திரிக்கொட்டை என்று தவறுதலாகச் சொல்லப்படுகின்ற உண்மையான அந்த முந்திரிப் பழத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் காம்பு போன்ற விருந்தத்தையே நாம் இப்போது தவறுதலாக முந்திரிப் பழம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால், பழக்கத்திற்கு வந்துவிட்டதால் இவ்வாறு சொல்வது இனி தவறும் ஆகாது. முந்திரியில் விருந்தமே மக்கள் உண்ணுமளவில் நன்கு சதை பிடித்துக் கனியாக மாறிவிட்டது? அதனால் இதனை 'விருந்த பரிணாமக் கனி' என்றழைப்பர். பரிணாமம் என்றால், ஒன்று மற்றொன்றாய் மாறுதல் என்று (வடமொழியில்) பொருளாம். நாம் இக் கனியை, 'காம்பு மாறிய கனி' என்று தமிழில் அழைக்கலாம்.

உண்மையான முந்திரிப்பழம் எது என அறியாததால், நம் மக்கள், பழத்திற்குள்தானே கொட்டை இருக்க வேண்டும். ஆனால் இயற்கைக்கு

மாறாக, முந்திரிக்கொட்டை முந்திக்கொண்டு முன்னால் வந்துவிட்டதே என்று கருதி, துருதுருவென்று முந்தி முந்திப் பேசுபவர்களை நோக்கி, 'முந்திரிக்கொட்டை' போல முன்னே முன்னே வந்துவிடுகிறாயே' என்று கண்டிப்பதை உலகியலில் நாம் காண்கிறோமல்லவா?

## பரிணாம சமூகக் கனி

அடுத்த படியில் நிற்பன அன்னாசிப் பழமும் பலாப் பழமுமாகும். ஒரு முந்திரிப் பழம் என்பது ஒரு பூ. அதில் விருந்தம் என்னும் தாள் சதைபெற்றுக் கனியாக மாறுகிறது. ஆனால் அன்னாசியும் பலாவும் அப்படி யல்ல. ஓர் அன்னாசிப் பழம் என்பது பல பூக்களின் கூட்டாகும். அன்னாசிப் பழத்தின் மேல்புறத்தில் பிளவு பிளவாகக் காணப்படும் கண்கள் போலுள்ள ஒவ்வொன்றும் ஒவ்வொரு பூவே. அன்னாசியில் பூக்கள் கதிராக உண்டாகி எல்லாப் பூக்களின் விருந்தம் முதலிய எல்லாப் பாகங்களும் ஒரு சமூகம்போல் ஒன்று சேர்ந்து சதைப்பெற்றுப் பருத்து, மகரந்தச் சேர்க்கையும் பெற்று, ஒரே கனிபோல் வளர்ந்து உருவாகும்.

பலாமரத்திலும் மலர்கள் கதிர்களாகவே தோன்றி வளர்கின்றன. ஆனால் இதில் ஆண்பூக்களும் பெண் பூக்களும் தனித்தனிக் கதிர்களாக உள்ளன. ஆண் கதிரிலிருந்து பெண் கதிருக்கு மகரந்தச் சேர்க்கை ஏற்பட்டதும், ஆண் கதிர்கள் உலர்ந்து அழிந்துவிடும். பெண் கதிர்கள் மட்டும் வளர்ந்து கனியாக மாறும். ஒரு பலாப்பழத்திற்குள் இருக்கும் ஒவ்வொரு சுளையும் ஒவவொரு பெண் பூவாகும். நாம் உண்ணுகிற சதைப் பாகம் புஷ்பகோசம் போன்றதாகும். அதன் உள்ளே பை

போன்ற தோலுடன் இருக்கும் கொட்டை அண்ட கோசமாகும். சில பெண்கள் பிள்ளை பெறாததைப் போல, பலாப்பழத்துக்குள்ளேயும் சில மலர்களே சுளைகளாக மாற, சில மலர்கள் வெறும் நார்களாகவே தங்கிவிடுகின்றன. பலாப்பழம் உண்ணும் மக்கள் இந்த நார்களை அறிவார்களே.

இப்படியாகப் பல பூக்கள் தம் பல பாகங்களுடன் ஒரு சமூகம்போல் - குழுவாக ஒன்று சேர்ந்து ஒரு கனி போல் மாறுவதால் அன்னாசிப்பழம், பலாப்பழம் போன்றவற்றை 'பரிணாம சமூகக் கனி' என்றழைப்பர். நாம் இதனை 'மாறிய கலப்புக் குழுக் கனி' எனச் சொல்லலாம்.


இனி மூன்றாவது படியாக நாம் நம் இலக்கை அடைய வேண்டும். அதாவது அத்திக்கனிக்கு வர வேண்டும். இந்த இலக்கை அடைவதற்காகத்தான் இவ்வளவு வழி கடந்து வரவேண்டியிருந்தது. பல படிகளைக் கடந்தால்தானே உச்சியை அடைய முடியும்?

## விருந்த பரிணாம சமூகக் கனிகள்

அத்தி, ஆல் ஆகியவற்றின் கனிகளும் கலப்புக் குழுக் கனிகளே. ஆனால் இவற்றின் மலர்கள், அன்னாசி, பலா ஆகியவற்றையும்விட மிகச் சிறியனவாகவும் மிக்க மாறுதல் உடையனவாகவும் உள்ளன. பூக்களைத் தாங்கும் விருந்தங்கள் இவற்றில் மாறிவிடுகின்றன. விருந்தமானது ஒரு கிண்ணம் போலாகி மலர்களை உள்ளே அடக்கிக்கொண்டிருக்கிறது. இக் கனிகளை அறுத்து உட்பகுதிகளை நன்றாகப் பார்க்கின், விதை போல் காணப்படுவனவெல்லாம் பூக்களே என்பது நன்கு

புலனாகும். தெளிவுக்காக ஒரு பெரிய சீமை அத்திக் கனியை எடுத்து இரண்டாகப் பிளந்து பாருங்கள். விருந்தக் கிண்ணத்தின் மேல் விளிம்பையடுத்து

சீமை அத்திக்கனி




1. பெண் பூ ;

2. ஆண் பூ ;

3. கனிச்சமூகம்.

உட்புறமாக ஆண்பூக்கள் இருப்பதையும், கனியின் நடுப்பகுதியிலும் அடிப்புறத்திலும் பெண் பூக்கள் இருப்பதையும் காணலாம். (இவ்விரு வகைப் பூக்களும் மேலுள்ள படத்தில் தனித்தனியாகப் பெரிதாக்கிக் காட்டப்பட்டுள்ளன.) எனவே, அத்தியிலும், ஆலிலும் பல பூக்கள்தம் பல பாகங்களோடு ஒரே சமூகமாக ஒன்று சேர்ந்து, மகரந்தச் சேர்க்கை பெற்று ஒரே கனிபோல உருவாகியுள்ளன என்பதை உணரலாம். இக் கனிகளுக்கு, 'விருந்த பரிணாம சமூகக் கனிகள்' என்று பெயராம்.

முந்திரியில் ஒரு பூவின் விருந்தம் மட்டும் ஒரு கனியாக மாறுவதால், அது 'விருந்த பரிணாமக் கனி' எனப்படும். அன்னாசியிலும் பலாவிலும் பல பூக்கள் சமூகமாகச் சேர்ந்து கனியாக் மாறுவதால், அவை 'பரிணாம சமூகக்கனி' எனப்படும். ஆனால் அத்தியிலும், ஆலிலும், விருந்தமும் கனியாக மாறுவதோடு, பல பூக்களும் சமூகமாகச் சேர்ந்து மாறுவதால் - அதாவது, முந்திரியின் தன்மை, அன்னாசி பலாவின் தன்மை ஆகிய இரண்டு தன்மைகளும் அமையப் பெற்றிருப்பதால், அத்திக் கனிகளையும் ஆலங்கனிகளையும் 'விருந்த பரிணாம சமூகக் கனிகள் என்றழைப்பர். தமிழில் இவற்றைக் 'காம்பு மாறிய கலப்புக் குழூக் கனிகள்' என்றழைக்கலாம்.

எனவே, அத்திப்பூக்கள் உண்டென்றும், அவை ஒருவகைக் கிண்ணத்துக்குள்ளே அடக்கி மூடி மறைக்கப் பட்டு, உள்ளேயே பூத்து மகரந்தச் சேர்க்கை பெற்றுக் கனியாகின்றன என்றும் அறியலாம். ஆலங்கனியும் இது போன்றதே யாதலின், 'அத்தி பூத்தாற்போல' என்று சொல்வதைப் போல, 'ஆல் பூத்தாற்போல' என்றும் பழமொழி சொல்லலாம் போலும். ஆனால் ஆலங் கனிகளைப் பறவைகளே புசிப்பதால், மக்கள் அதன் பேச்சுக்குப் போகாமல், தாம் உண்ணும் அத்தி யோடு பழமொழியை நிறுத்திக்கொண்டார்கள் போலும்! அத்தி பூப்பது மக்கள் கண்ணுக்குத் தெரியாததனால்தான், வராத ஒருவர் வந்துவிடின், 'அத்தி பூத்தாற்போல இருக்கிறதே!' என்று வியக்கின்றனர் போலும்.

ஆம்! 'அத்தி பூத்தாற் போல' என்ற பழமொழியை அடிப்படையாக வைத்துக்கொண்டு, பொதுவாகப் பூ -

காய்களின் வரலாற்றினையே ஒருமுறை சுருங்கப் பார்த்துவிட்டோமே. பல கருத்துக்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் அந்தப் பழமொழி வாழ்க!

அத்தியைப்போல மக்களினமும் கலந்து குழுவாக வாழ்வதே சிறந்த வாழும் நெறியாகும்.

★

## 17. ஆழ உழு!

பெருகி வரும் மக்கள் தொகைக்குப் போதிய உணவு அளிக்க வேண்டும். மக்கள் பெருகுவதற்கேற்ப நிலமும் பெருகுவதில்லையே. எனவே, இருக்கும் நிலத்திலேயே விளைச்சலைப் பெருக்க வேண்டும். இதற்காக இந்த இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞான முறையில் என்னென்னவோ முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இதற்கென்று அரசாங்கத்தில் தனித் துறையே - தனி அலுவலகங்களே உள்ளன.

''பழைய முறையில் உழக்கூடாது; எந்திரக் கலப்பை கொண்டு உழ வேண்டும். விதைகள் இத்தகையனவாய் இருக்க வேண்டும். சப்பான் முறையில் நட வேண்டும். இன்ன உரம் போட வேண்டும். பயிரைப் பூச்சிகள் அழிக்காமல் இன்னின்ன வகையில் காக்க வேண்டும்'' என்றெல்லாம் தொழில்துறை வல்லுநர்களால் அறிவுரைகள் அள்ளி வழங்கப்படுகின்றன. இவற்றுள் முதல் அடிப்படை வேலையாகிய உழுதல் தொழிலைப் பற்றி மட்டும் இக் கட்டுரையில் ஆராய்வோம்:

நிலத்தை உழுவது எதற்காக? மழை தூறத் தூற, உழவர்கள் கலப்பை கொண்டுசென்று நிலத்தை உழுது உழுது வைக்கும் வழக்கம் காலங்காலமாக இருக்கிறதே-அஃது ஏன்?

விதை முளைத்துப் பயிர் நன்கு விளைவதற்கு, தண்ணீர், காற்று, வெப்பம் முதலிய புறச் சூழ் நிலைகளைப் போலவே, மண்ணும் தரமுடையதாக இருக்க வேண்டியது மிக இன்றியமையாததாகும். மண்ணில் பலவகை உலோக உப்புக்கள் உண்டு. அவற்றின் ஊட்டத்தால் பயிர் செழித்து வளரும். உயிராற்றல் (வைட்டமின்கள்) குறைந்தவர்களுக்கு, அவ் வாற்றலுடைய குளிகைகள் (வைட்டமின் மாத்திரைகள்) வாயிலாக அவ்வாற்றலை ஈடு செய்தல் போல, தேவையான உப்பு ஆற்றல் (உப்புச் சத்து) குறைந்த நிலத்தில் எருக்களையும் உரங்களையும் போட்டு ஈடு செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், எரு தேவை யில்லாமலேயே இயற்கை முறையில் நிலத்தில் உப்பு ஆற்றலைப் பெருக்குவதற்கு வழியிருக்கிறது. அதுதான் ஏர் உழுதல் ஆகும்.

ஏர் உழுவதால் நிலத்தின் உப்பு ஆற்றல் பெருகுவது எப்படி? ஞாயிற்றின் (சூரிய) ஒளிபடுவதன் வாயிலாக, மண்ணில் உப்பு ஆற்றல் நன்கு உருவாகிறதாம். கதிரவனின் திருவிளையாடலே ஒரு பெரு விளையாடல் அல்லவா? பகலவனது ஒளியின் உதவியின்றி உலகம் நடப்பதெப்படி - உயிர்கள் தோன்றி வாழ்வதெவ்வாறு? கதிரொளி குறைந்த துருவப் பகுதிகளில் உயர் வாழ்க்கை அரிது என்பது அனைவரும் அறிந்த செய்தியே. எல்லா

வகை உயிர்வாழ்க்கைக்கும் தேவையான வெப்பமும் வெளிச்சமும் அவனது அருட்கொடையே.

உடல் நன்றாக இருப்பதற்கு, போதுமான கதிரொளி மேலே பட வேண்டும் (Sun Bath). நிழல் பக்கமுள்ள சில மரஞ்செடிகள் சாய்ந்து வளைந்திருப்பதற்குக் காரணம், அவை கதிரொளி வீசும் திக்கு நோக்கிச் சென்றமையேயாகும் - அவ்வொளியின் உதவியால்தான் செடிகள் தம் வளர்ச்சிக்கு வேண்டிய மாவுப் பொருளைத் தயார்செய்து கொள்கின்றன. மக்களாகிய நம் கண்களின் நலத்திற்கும் ஞாயிற்றின் ஒளிபடல் நல்லது. பல்லுக்கும் அவ்வாறே என்று கூறுகின்றனர். இது குறித்தே ஞாயிறு வணக்கம் செய்வது நல்லது என்று பரிந்துரைக்கப்படுகிறது. உலகில் மக்கள் ஞாயிற்றின் தோற்றத்தை மகிழ்ந்து வரவேற்கின்றனர் - கடவுளாக மதித்து வழிபடுகின்றனர். இதற்குக் காரணம் அவனால் கிடைக்கும் நன்மையேயன்றோ? இளங்கோவடிகள் கூட,

''ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்''

என்று சிலப்பதிகாரத்தில் பாடியுள்ளாரே. நக்கீரரோ,

''உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல் கண்டாங்கு''

என்று முருகாற்றுப்படையில் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

இதுகாறுங் கூறியவற்றால், கதிரொளியின் ஆற்றலும் பயனும் நன்கு புலனாகுமே! எனவே, கதிரொளி படுவதனால் நிலத்து மண்ணில் உப்பு ஆற்றல்

உருவாகிறது என்னும் கருத்தில் வியப்போ - ஐயமோ கொள்ள வேண்டியதில்லையன்றோ?

நிலத்தை உழவில்லையாயின், மேல் மண்ணில் மட்டுமே கதிரொளி படும். போதுமா? பயிர்கள் வேரின் மூலம் மண்ணின் அடிப்பகுதியைத் துளைத்துக்கொண்டு உணவு தேடிச் செல்கின்றனவே. அடியில் கூடுமானவரை நெடுந்தொலைவில் உள்ள மண் பகுதியில் எல்லாம் கதிரொளி படவேண்டுமே. அதற்காகத்தான் உழுவது! கீழிருக்கும் மண்ணை உழுது கிளறி மேலுக்குக் கொண்டுவந்து ஒளிபடச் செய்துகொண்டே யிருக்க வேண்டும். அதனால்தான் உழவர்கள் அடிக்கடி உழுதுவைக்கின்றனர். மேலோடு உழுதால், மேல் மட்டத்திலுள்ள சிறு பகுதி மண் மட்டுந்தான் ஒளி பெறும்; ஆகையால் ஆழ உழவேண்டும். இது குறித்தே இக்கால வல்லுநர்கள், பழைய நாட்டுக் கலப்பை போதாது - எந்திரக் கலப்பை கொண்டு உழ வேண்டும் என்று கூறுகின்றனர்.

இவ்வாறு ஆழ உழுவதனால் மண்ணில் உப்பு ஆற்றல் நன்கு உருவாகும். இந்த உப்பு ஆற்றலைப் பயிர்கள் வேர்களின் வாயிலாக உட்கொள்கின்றன. வேர்களிலுள்ள ஆயிரக்கணக்கான வேர்த் தூய்கள் (Root hairs), மிகவும் நுட்பமானவையான மண் அணுக்களின் இடுக்குகளில் புகுந்துசென்று நில உப்புக் கரைசலை உறிஞ்சிக்கொள்கின்றன. இந்த நில உப்புக் கரைசல் வேரின் மையத்தையடைந்து அங்கிருந்து மேலே ஏறிப் பயனளிக்கிறது. இதற்கு வேர் அமுக்கம் (Root Pressure)

என்று பெயராம். பயிர்களுக்கு இந்த வசதியைச் செய்து கொடுப்பதற்காகத்தான் உழுதல் வேலை நடக்கிறது.

இப் பயன் கருதியே, எந்திரக் கலப்பை கொண்டு ஆழ உழ வேண்டும் என்று இக்கால அறிவியலார் வற்புறுத்துகின்றனர். இதே கருத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மாபெருந் தமிழறிஞர் - ஏன் - உலக அறிஞர் மிகவும் அழகாக - அதே நேரத்தில் அழுத்தம் திருத்தமாக அறிவித்துள்ளார்? அவர் யார்? அவர் யாராக இருக்க முடியும் - திருவள்ளுவரைத் தவிர! ''ஒரு பலம் அளவு மண்ணானது கால்பலம் அளவு மண்ணாக ஆகும்வரை நிலத்தை உழுது உழுது உணக்கினால் (உலர்த்தினால்), பிடி எருவும் வேண்டிய தில்லாமலே நிலம் நிரம்ப விளையும்'' என்பதுதான் வள்ளுவனாரின் அறிவுரை. ஆகா என்ன அழகான கருத்து! எவ்வளவு அருமையான கண்டுபிடிப்பு! இக் கருத்துக் கருவூலம் அமைந்துள்ள குறள் வருமாறு:-

''தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்''

(தொடி - ஒரு பலம்; புழுதி - மண்; கஃசு - கால் பலம்)

இக் குறள் திருக்குறளில் உழவு என்னும் பகுதியில் உள்ளது. ஒரு பலம் மண் கால் பலம் வீதம் காய வேண்டுமானால், எத்தனை முறை உழ வேண்டும் - எவ்வளவு ஆழமாக உழவேண்டும் என்று புரியுமே! 'காய்ந்த நாட்டிற்கு கருப்பில்லை' என்னும் பழமொழியின் கருத்துக்கும் இக் குறளுக்கும் ஏதேனும் தொடர்புண்டோ! பழமொழியின் படி, நிலம் நன்கு காய்வதால் மண் வளம்

பெற்று விளைச்சல் பெருக்க, நாட்டில கருப்பு (பஞ்சம்) இருக்காது. மக்களுக்கு வாழ்வு பெருகும்.

நிலத்தில் வாழும் 'நாங்கூழ்ப் புழு' என்னும் ஒருவகை மண்புழு, மண்ணைக் கிளறிக் கிளறி மேலும் கீழும் ஆக்குவதால் மண் ஓரளவு வளம் பெறுவதாகச் சொல்லுவது வழக்கம். இதனாலும் - கதிரொளி அடி மண்ணில் படுவதற்கு வாய்ப்பிருக்கின்றதோ? இக் கருத்தை மனோன்மனீயம் என்னும் நாடகக் காவியத்தில்,

''ஓகோ நாங்கூழ்ப் புழுவே! உன்பாடு
ஓவாப் பாடே உணர்வேன் உணர்வேன்!
உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்து நீ!
எம்மண் ணாயினும் நன்மண் ணாக்குவை,
விடுத்தனை யிதற்கா எடுத்தஉன் யாக்கை!''

என்று அப் புழுவைப் பார்த்தே கூறுவதுபோல, பேராசியர் சுந்தரம்பிள்ளை பாடி யமைத்திருக்கின்றார். எனவே, விளைச்சல் பெருக ஆழ உழ வேண்டியதின் இன்றியமையாமை புலப்படுமே. இதை வைத்துத்தான், எந்தச் செயலிலுமே நுனிப்புல் மேயாமல், ஆழ ஈடுபட வேண்டும் என்று உலகியலில் பழமொழி கூறுகின்றனரோ?

**"அகல உழுவதினும் ஆழ உழு!"**

★

**வாழும் வழியறிந்து வையகம் வாழ்க!**

★ ★ ★

## நூலாசிரியர்
## பேராசிரியர் சுந்தரசண்முகனார்



பிறப்பு : 13 -7 - 1922   இறப்பு : 30 - 10 - 1997

குரு : ஐந்தாம் பட்டத்து ஞானியார் அடிகள்

பிறந்த ஊர் : புது வண்டிப் பாளயம், கடலூர்.

படைப்புகள் : 69 நூல்கள் - விளக்கம் வருமாறு:
கவிதைநூல்கள் - 8, பெருங்காப்பியங்கள் - 2, முழு உரை நூல்கள் - 7,
திருக்குறள் ஆய்வுகள் - 5, கம்பராமாயணத் திறனாய்வுகள் - 6,
அறிவியல் ஆய்வுகள் - 6, பல்துறை ஆய்வு நூல்கள் - 33,
புதினங்கள் - 2,

சிறந்த படைப்புகள் : தமிழ் அகராதிக் கலை, கெடிலக்கரை நாகரிம்,
தமிழ் நூல் தொகுப்புக் கலைக் களஞ்சியம், தமிழ் இலத்தீன் பாலம்.

பெற்றபட்டங்களில் சில : இயற்கவி, புதுபடைப்புக் கலைஞர்,
ஆராய்ச்சி அறிஞர், திருக்குறள் நெறித் தோன்றல் முதலியன.

பெற்ற விருதுகளில் சில : தமிழக அரசின் ' திருவள்ளுவர் விருது',
மதுரை காமராசர் பல்கலைக் கழகத் 'தமிழ்ப் பேரவைச் செம்மல் விருது', தமிழக புலவர் குழுவின் 'தமிழ்ச் சான்றோர் விருது',
அண்ணாமலை செட்டியார் அறக்கட்டளை விருது முதலியன.

பெற்ற பரிசுகள் : நடுவண் அரசு, தமிழக அரசு பரிசுகள் 7 பெற்றுள்ளார்.

பாடமாக அமைக்கப்பட்ட நூல்கள் : அகராதிக் கலை, தமிழர் கண்ட கல்வி, திருமுருகாற்றுப்படை தெளிவுரை, History of Tamil Lexicography முதலியன.